# உலகத் தமிழர் குரல்
# ULAKA THAMILAR KURAL

ஒலி 25 - ஏப்ரல் 2007 இதழ் - 22

திருவள்ளுவர் ஆண்டு 2038 - கலியுகம் 5108 சித்திரை - 2007 சஞ்சிகை 10

அரசியல் கலப்பற்றது NON POLITICAL

## வரலாற்றுச் சிறப்பிதழ்

(உ.த.ப. இயக்கத்தின் 30 ஆண்டுகள்
வரலாற்றுச் சிறப்பம்சங்கள் இடம் பெற்றுள்ளன.)

வெளியீடு
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்,
இலங்கைக் கிளை,
யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு: 50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழர் குரல்


## எண்ணம்

## தெய்வ நீதியும் மனித வாழ்வும்

ஆதியும் அந்தமும் காணமுடியாத ஆகாய வெளி பிரபஞ்சம் என்று குறிப்பிடப்படுகின்றது. இதில் அண்டங்கள் எனப்படும் பால் வெளிப் பகுதிகள் உள்ளன. இவற்றின் சில பகுதிகளில் நமது சூரிய மண்டலம் அமைந்துள்ளது. இதில் நமது சுழலும் பூமியும் மற்றும் பூமியைச் சுற்றிவரும் ஏனைய கோள்களும் (கிரகங்களும்) அமைந்துள்ளன. இவற்றை விட மற்ற அண்டப் பகுதிகளிலும் நட்சத்திரங்கள், கோள்கள், வால்வெள்ளிகள் மற்றும் இதுவரை அறியப்படாத அறியமுடியாத பல மண்டலங்கள் விளங்கி வருகின்றன. இவற்றையெல்லாம் படைத்து ஆட்சிசெய்து வரும் மகாசக்தி யார்? அவன்தான் சோதி வடிவாக விளங்கி வரும் இறைவன் என்பது ஆன்மீக உண்மையாகும்.

நமது பூமியைப் படைத்த ஆண்டவன் இதில் பல்வகையான உயிரினங்களையும் படைத்திருக்கின்றார். மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள், விதவிதமான உயிரினங்கள், நுண்ணுயிர்கள் போன்றவை யாவும் இறைவனால் படைக்கப்பட்டவையாகும். இவற்றைப் படைத்த கடவுள் இவை வாழவும் வழிகளையும் அமைத்திருக்கின்றார். இந்த உயிரினங்கள் வாழும்போது இனப் பெருக்கம் செய்து பரம்பரைத் தொடர்பு உறவு நிலைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றார்.

இந்த பூவுலகில் மனிதன் மற்றும் உயிர்கள் வாழ்வதற்கு அவசியமான நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் போன்ற ஐம்பூதங்களையும் கடவுள் அளித்திருக்கின்றார். இதனால் நாம் வாழும் பூமியில் கடல், சமுத்திரம், நீர்நிலைகள், மலைகள், காடுகள், சமவெளிகள், காற்று, மழை, வெள்ளம், வெப்பம், குளிர் போன்றவை வாழ்வாதாரங்களாக நமக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. மனிதனின் மிக முக்கிய தேவையான உணவுக்கு - உணவு வகைகள், தாவரங்கள், விலங்குகள், மீனினங்கள், பறவைகள், பயிர்வகைத் தானிய வர்க்கங்கள், பழவகைகள் போன்றவை நமக்கு இந்தப் பூமியில் கிடைக்கின்றன.

இவை எல்லாம் மனித வாழ்க்கைக்கு உதவியாக உறுதுணையாக அமைந்து வருகின்றன. மனிதர்கள் உயிரினங்கள் வாழும் காலம் இறைவன் நிர்ணயம் செய்து வருகின்றார். மனிதர்களுக்கு ஒருவிதமாகவும் மற்ற உயிர்களுக்கு வெவ்வேறு விதமாகவும் வாழ்வு எல்லை (ஆயுள்)யை கடவுள் விதி செய்திருக்கின்றார்.

பிறந்தவை எவையும் அழிந்துபோகும். பிறந்தவையிலிருந்து புதிதாக அவை பிறக்கும். இதற்கு இனப்பெருக்க முறையை படைத்தவன் வழிவகுத்திருக்கிறார். ஆண்டவன் படைத்த நாம் எவரும் நமது வாழ்வெல்லையை நீடிக்கப் பெரிதான வாய்ப்பில்லை. ஆயினும் வாழத்தெரியாத நிலையில் பலரின் வாழ்வு எல்லை குறைந்து மறையும் நிலையும் அவர்களால் தோற்றுவிக்கப்படுகின்றது. சிலபோது இயற்கை அனர்த்தங்களான மழைவெள்ளம், புயல், வெப்பம், வரட்சி, பஞ்சம், நோய், நிலநடுக்கம், விபத்துக்கள் போன்றவை தோன்றும் காலத்திலும் மனிதர்கள் மாத்திரமல்ல மற்ற உயிரினங்களும் அழிவைச் சந்திக்கின்றன. இயற்கை அழிவை மனிதன் அறிந்திருந்தாலும் அதை முழுமையாக வெற்றிபெற முடிவதில்லை. தற்காலத்தில் மனிதர்கள் செய்யும் வன் செயல்களும் மனித வாழ்வை அழித்து வருவதைக் காணலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித அறிவு

இறைவன் படைத்த உயிரினங்கள் யாவும் அவனுடைய பிள்ளைகள் இவைகளில் மனிதர்கள் அவருடைய முதன்மையான உன்னதமான பிள்ளைகள் எனலாம். இவர்கள் தங்களை உருவாக்கிய கடவுளையும் தங்களையும் அறிந்துகொள்ளும் அறிவுள்ளவர்களாக இருக்கிறார்கள். மனிதன் உயிரினங்களில் மேலானவனாக விளங்கி வருகின்றான். இவனுக்கு ஐந்தறிவுகளுடன் ஆறாவது அறிவான பகுத்துணரும் பகுத்தறிவும் தரப்பட்டுள்ளது. இதனால் அவன் வாழ்வியலை நடாத்தவும் விருத்தியாக்கவும் முடிகின்றது. இறைவன் படைப்பில் எல்லோரும் சமமாகவே படைக்கப்படுகின்றனர். குழந்தைப்பருவம் முதலாக வளர்ந்து முதுமைப் பருவம் கண்டு மறையும் காலம் யாவருக்கும் பொதுவாக உள்ளது. இந்தக் கால எல்லைக்குள் மனிதன் வாழ்வியல் விடயங்களைச் செய்து வாழும் நிலையும் உள்ளது. இறைவன் படைப்பில் மனிதர்கள் உலகில் நல்ல முறையில் ஒழுங்கமைந்த உயரிய வாழ்வை வாழவேண்டுமென்று கடவுள் எதிர்பார்க்கிறார். அதற்காக மனிதனுக்குச் சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழும் உரிமை உள்ளது. இந்த உரிமையை மற்ற மனிதன் பறிக்கவோ அழிக்கவோ எந்த உரிமையும் இல்லை. ஆனால் தற்காலத்தில் மனிதன் தெய்வநீதிக்குப் புறம்பாக தான் நினைத்தபடி செயல்பட்டு வாழவும் செய்கிறான். இறைவன் செய்ய வேண்டிய வேலைகளையும் தானும் செய்து மாபாதகங்களுக்கு ஆளாகி வருகின்றான்.

# சமய நெறிகள்

உன்னதமான மனித வாழ்வியலை சீரான முறையில் ஒழுங்குபடுத்தி வழிகாட்ட ஆதிகாலந்தொட்டு மனிதர்களில் ஞானிகள், ஆன்மீகர்கள், நல்லறிஞர்களை ஆண்டவன் உருவாக்கினான். காலந்தோறும் இவர்கள் உருவாக்கப்பட்டு வருகின்றனர். இன்றும் ஞானசீலர்கள் மற்றவர்கள் அறிய முடியாமல் வாழ்வதையும் உணர முடிகின்றது.

இத்தகைய ஞானிகள் காலங்காலமாக அருளிச் செய்த ஞானநூல்களில் ஞானக்கருத்துக்கள், தர்ம சிந்தனைகள் யாவும் மனிதன் கடவுள் நம்பிக்கையுள்ளவனாக வாழ வேண்டுமென்பதனையும் அவன் வாழ்வில் பின்பற்றி வாழவேண்டிய தர்மங்கள் நியாயங்களையும் காண முடிகின்றது. ஞானிகள் நல்லறிஞர்கள் எடுத்தியம்பிய நீதி நூல்கள் நமக்கு இன்றும் வழிகாட்டி நிற்கின்றன. இவற்றில் சில சமயங்கள் சார்ந்த சாஸ்திரங்களாகவும் விளங்கி வருகின்றன.

ஆதியில் தோன்றிய சைவசமயம் சார்ந்த நீதி தர்மங்கள் எல்லாம் மனித வாழ்வுக்கு சிறப்பை அளித்து வந்தன. இன்றும் நிலவி நன்மை செய்கின்றன. பிற்காலத்தில் இந்தியாவிலும் வேறு நாடுகளிலும் தோற்றுவிக்கப்பட்ட சமயக் கொள்கைகள் பொதுவாக இறைவன் ஒருவன் என்பதை ஏற்றுப் போற்றி வருகின்றன. நமது சமுதாயத்தின் பழம் பெருமைக்கும் நீதி நெறிமுறைக்கும் நமது ஆதி நூல்களான தொல்காப்பியம், திருமந்திரம், திருக்குறள் போன்றவை இன்றும் சான்றாகத் திகழ்கின்றன.

இன்று உலகில் நிலவி வரும் மதங்கள் சமயங்கள் பொதுவாக நீதியான சிந்தனைகளைக் கொண்டிருந்தாலும் இவற்றில் சில அடிப்படைவாதக் கருத்துக்களை உள்வாங்கி தெய்வநீதிக்கு மாறான செயற்ப்பாடுகளை செயற்ப்படுத்தியும் வருகின்றன. இதன் காரணமாக இவை சந்தர்ப்ப வாதங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு உலகில் மக்களின் வாழ்வியலுக்கு பாதகமான அழிவு நாசங்களை உருவாக்கி வருகின்றன. எங்கெல்லாம் இக்காலத்தில் தெய்வ நீதிகள், தர்ம நியாயங்கள் மனித வாழ்வில் கவனிக்கப்படாமல் செயல்ப்பாடுகள் நடக்கும். இந்த உலகில் நமது நாடு உட்பட்ட பல நாடுகளில் வன்செயல்கள், அழிவுகள், மனித அவலங்கள் நிலவிவருவதால் தேசத்தின் பெருமைக்குரிய சொத்தாகிய மனித சமுதாய வாழ்வு மகத்துவம் தாழ்ந்து வருகின்றது. இதற்கு மனிதர்களே காரணிகளாக உள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் வன்முறைகள் போர்கள் அழிவுச் செயற்பாடுகள் மக்களின் வாழ்வில் உதவியில்லாமை, குற்றச் செயல்கள் போன்ற மனித விரோதச் செயல்கள் உருவாகி - நிலவி மனித குலத்தின் நிம்மதியைக் குலைத்து வருவது வருந்தத் தக்க நிலைப்பாடாகும்.

## மக்கள் நிலையில் அமையும் மாற்றங்கள்

உலகில் அன்று வாழ்ந்த மக்கள் முடியாட்சியில் மன்னர்களின் பிள்ளைகளாக நேசிக்கப்பட்டு வந்தார்கள். மக்களின் நல் வாழ்விற்கும் பாதுகாப்பிற்கும் முன்னுரிமை வழங்கப்பட்டு வந்தன. ஆனால் இன்றைய ஜனநாயகம் என்ற மக்களாட்சியில் அமைக்கப்படும் ஆட்சிகளில் மக்களின் தேவைகள் புறக்கணிக்கப்படுவதும் அவர்களின் வாழ்வியல் விடயங்கள் பாதுகாக்கப்படாமையும் இன, மொழி, கலாச்சார விடயங்களில் பாகுபாடுகள் காட்டப்படுவதும், மனித உரிமைகள் மீறப்படும் செயல்கள் நடப்பதும் இன்று காணக்கூடியதாக உள்ளன. இதனால் அரச நிர்வாகங்கள் மக்களுக்குத்தான் ஆட்சி என்பதை மறந்து செயல்படும் நிலையும் தர்ம நியாயம் தெய்வ நீதிக்குப் புறம்பான செயல்களும் நடந்து வருவதும் போன்றவற்றால் தெய்வ சாபத்துக்கு இலக்காகி இயற்கை அழிவில் மனிதகுலம் சிக்கி அழியும் நிலை தோன்றும் என்பது உண்மை.

அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பது முதுமொழி. அரசியலில் தர்ம நியாயச் செயல்கள் அமைந்தால்தான் குடிமக்கள் மண்ணின் மைந்தர்கள் மகிழ்ச்சியாக வாழ முடியும். அல்லாதவிடத்து மக்கள் பஞ்சம் பட்டினி, பற்றாக்குறை வசதிக்குறைவுகள், வாழ்விடக் கஷ்டங்கள் போன்றவற்றை சந்தித்துத் துன்பத்தில் வீழ்ந்து துயருறும் நிலைமை தோன்றுவதை நோக்கலாம்.

இன்று உலகின் பல நாடுகளில் இன மொழி மத வாதங்கள் - ஆதிபத்திய வாதங்கள், உரிமை மீட்புப்பிரச்சனைகள் அமைந்து வரும் சூழ்நிலைகளில் உலகில் உள்நாட்டுக் கலவரங்கள் - போர்கள் - அடாவடித்தனங்கள் தன்னிச்சையான சர்வாதிகாரங்கள் - ஏதிலியாகும் மக்கள் பிரச்சனைகள் அமைந்து வருகின்றன. இதனால் - மக்கள் பேரிடர்கள், அழிவு நாசங்கள் - துன்ப துயரங்களைச் சந்தித்து சீரழியும் நிலமை குறைந்தபாடில்லை. இவை அனைத்தும் அகன்று ஒழிந்து நல்ல மாற்றங்கள் தோன்றுவதால் மனித குலத்துக்கு நன்மை தோன்றும்.. மக்களை ஆட்சி செய்யும் உயர்ந்த மனிதர்களுக்கு நல்ல சிந்தனையை, தர்மச் செயல்பாடுகளை இறைவன் வழிகாட்ட வேண்டும். என்று ஆண்டவனை வேண்டுவோம்.

## மக்கள் கடவுளின் குழந்தைகள்

கடவுள் மனிதர்களைப் படைத்தார். இவர்கள் தனது குழந்தைகளாக உலகில் வாழவைத்து வருகிறார். தனது பிள்ளைகள் நல்லவர்களாக வாழவேண்டுமென்பதே கடவுளின் விருப்பமாகும். ஆதிகாலத்து மன்னர்கள் மக்களைப் பாதுகாத்தும் வாழ்வித்தும் புகழ்பெற்றார்கள். இதனால் மன்னர்கள் இறைவனுக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்பட்டு வந்தார்கள். இதனால் மன்னனுக்கு இறை என்ற பெயரும் வந்தது.

ஆனால் இன்றைய கால ஜனநாயக ஆட்சிகளில் மக்களை வழிநடத்த வரும் பெரும் மனிதர்கள் பதவிகள் கிடைத்தும் குடிமக்களை மறந்து விடுகிறார்கள். கடவுளையும் மறந்து செயல்படுகிறர்கள். தர்மநியாயங்களை, உலக நீதிகளை கைவிட்டு விடுகின்றார்கள். இவர்களை ஆண்டவன் தான் சரியான வழிக்குக் கொண்டு வரவேண்டும்.

மனித வாழ்வுக்கு எதிரான செயல்பாடுகள் எல்லாம் தர்ம நீதிக்கு எதிரானவையாகும். தர்ம நீதிக்கு விரோதமான செயல்கள் யாவும் தெய்வநீதிக்கு எதிரான விடயங்களாகும். தெய்வநீதிக்குப் புறம்பாக நடக்கும், செய்யப்படும் செயல்கள் எல்லாம் தெய்வ நிந்தனையாகி. தெய்வ சாபத்துக்கு உள்ளாகி தெய்வத்தால் தண்டிக்கப்படும் என்பது சமய சமூக வாழ்வியல் அனுபவ உண்மையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களில் தகுதியானவர்கள்

மனிதர்களைப் படைத்துவிட்ட இறைவன் இவர்களில் தகுதியானவர்கள், திறமையானவர்களை காலந்தோறும் உருவாக்கி இனங்காட்டி வருகின்றார். மனிதன் ஒருவன் உயர்ந்த நிலையில் பிறப்பதும், உயர்வான நிலைக்கு வருவதும் அவனுக்கு இறைவன் வாழ்வில் கொடுத்த சந்தர்ப்பம் என்பதை அவன் உணரவேண்டும். அவர்களுக்கு மற்ற மனிதர்களை வழிநடாத்தும் பொறுப்புக்கான சந்தர்ப்பங்கள் வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. இப்படியான தகுதி திறமை உள்ள பொருத்தமான மனிதர்கள் ஆதி அநாதி காலங்களிலிருந்து மக்களைப் பாதுகாத்து வழிநடாத்தி ஆளும் அரசர்களாக மன்னர்களாக வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் மக்களின் வாழ்வியலுக்கு துணையாக இருந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் தான் புகழ் பெற்ற சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் என்ற மூவேந்தர்களாகும். இந்த மன்னர்கள் நாட்டில் ஆட்சியில் நிர்வாகங்களை ஏற்படுத்தினார்கள். அவற்றின் உதவியுடன் மக்களுக்குத் தேவையான உணவு, உறைவிடம், நோய்தீர்க்க மருத்துவம், அறிவுதர பள்ளிக்கூடங்கள், மக்களை பாதுகாக்க காவலாளிகள் - போர்வீரர்கள் போன்ற விடயங்களைச் செயல்படுத்தினார்கள். மக்கள் தெய்வ நம்பிக்கையில் வாழ ஞானிகள், ஆன்மீகர்கள், வழிகாட்டிகளாக வாழ்ந்து வந்தார்கள். இதனால் மக்களின் வாழ்வில் நிம்மதியும் சந்தோஷமும் அமைந்து விளங்கலாயிற்று. அன்றைய காலத்தில் மனிதர்கள் குடிமக்கள் மன்னர்களின் பிள்ளைகள் போல் வாழ்ந்தார்கள்.

# காலப்போக்கில் மாற்றங்கள்

காலம் உருண்டோடி வந்தது. காலப்போக்கில் உலகில் ஏற்பட்டுவந்த மாற்றங்களில் குடிசனப்பெருக்கம் பொருளாதார விடயங்களில் தோன்றிய மாறுதல்கள் புதிய சிந்தனைகள் சித்தாந்தங்கள் தோன்றி நிலவ ஆரம்பித்துவந்தன. இதனால் மன்னர் ஆட்சி முடியாட்சி மறைந்து மக்கள் ஆட்சி முறைகள் ஆரம்பமாகி வந்தன. இது மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியமையால் ஜனநாயகம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டு வந்தது. கி.பி 12ம் நூற்றாண்டில் பிரித்தானியாவில் முடியாட்சியின் கீழ் மக்கள் பங்குபெறும் மக்கள் ஆட்சி அரசியல் விடயங்கள் செயல்பட ஆரம்பித்தன.

இந்த நடைமுறைகள் 20ஆம் நூற்றாண்டிலிருந்து படிப்படியாக பல நாடுகளில் ஆரும்பமாகி வரலாயின. தேர்தல் முறையில் மக்களிடையே தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். இதில் தெரிவு செய்யப்பட்டோர் யாவரும் கூடி அரசாங்கம் அமைத்து ஆட்சி செய்யும் நடைமுறைகள் தோன்றின. இதன் மூலம் மக்கள் தமது வாழ்க்கைத் தேவைகளை தமது பிரதிநிதிகள் மூலமாகக் கேட்டு அரசிடமிருந்து பெறக்கூடிய வசதிகள், வாய்ப்புகள் அமைந்து வரலாயின. பொருளாதார விடயங்கள், விவசாய விடயங்கள், தொழில் விடயங்கள், வேலை வாய்ப்பு வசதிகள் போன்றவை அரசின் திட்டங்கள் மூலம் மக்கள் பெறும் நிலைமை உருவாகி நன்மைகள் கிடைத்து வந்தன.

இன்றைய நாகரீக மாற்றங்கள் விஞ்ஞான அறிவு வளர்ச்சி கல்வி விடயங்களில் முன்னேற்றம் போன்றவற்றால் மக்களின் வாழ்க்கை வசதிகள் அதிகரித்து வரத் தொடங்கின. இப்படியான வசதிகள், வாய்ப்புக்கள் அதிகமாகி வந்த காரணங்களால் மனிதன் இயந்திரங்கள் மாதிரி செயல்படும் புதிய காலாச்சார நிலைமையும் தோன்றியது. மக்களின் வாழ்வுச் சூழலில் வசதிகள் வளங்கள் பெருக அவற்றைப் பயன்படுத்தி வாழும் பொருளாதாரந் தேடும் சிந்தனைகள் செயல்வடிவம் பெற்றன. இதனால் மனிதர்களில் பலர் குறுக்கு வழியில் வருமானம் தேடும் ஏமாற்று, சுத்துமாத்து கள்ளச்சந்தை, துஷ்பிரயோகம் போன்ற விடயங்கள் நடக்கலாயின. பொருளாதார நோக்கில் வியாபார விடயங்கள் அதிகமாகி வந்ததால் பதுக்கல், கொள்ளை லாபம் பெறல், ஊழல்மூலம் பணம் தேடல் போன்ற விடயங்களும் மக்கள் வாழ்வில் தற்காலத்தில் புகுந்து சீரழிவுகளை உண்டு பண்ணி வருகின்றன.

இதனால் இன்றைய காலத்தில் அமையும் ஆட்சிகளிலும், மக்கள் வாழ்விலும் மக்களுக்கான நிர்வாகங்களிலும் பாகுபாடுகள், துஷ்பிரயோகங்கள் ஊழல்கள் நிலவி வருவதைக் காணலாம். இவற்றால் மக்கள் வாழ்வில் தர்ம, நியாய சிந்தனை, கடவுள் நம்பிக்கை, அன்புடன் பண்புடன் விளங்கவேண்டிய சமுதாய உறவுகள் அடிபட்டுப் போய் மனிதாபிமானமில்லாத செயற்பாடுகள் வளர்ந்து வருவதைக் காணலாம். இதனால் இன்று வன்முறைகள் போர் அழிவுச் செயற்பாடுகள் மக்களின் வாழ்வில் உதவி இல்லாமை குற்றச் செயல்கள் போன்ற மனித விரோதச் செயல்கள் உருவாகி, நிலவி, மனித குலத்தின் நிம்மதியை குலைத்து வருவது வருந்தததக்க நிலைப்பாடாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் அழிவுகள்

மக்கள் இல்லாத உலகம் வெறும் மண் மண்டலமாக இருக்கும். இந்த உலகில மக்கள் நிம்மதியாக அமைதியாக நேர் சீராக மகிழ்ச்சியாக வாழ முடியாத நிலைமை தோன்றும் போது - உலகம் அழியும் என்பது உண்மை. அப்போது உலகில் இயற்கை அழிவுகள் - அனர்த்தங்களான பெருமழை- வெள்ளம், புயல், கடற்பெருக்கு (சுனாமி), நிலநடுக்கம் வெப்பத்தால் குளிரால் - பனியால் - வரட்சியால் - கொடிய நோய்களால் பஞ்சம் - பட்டினியால் மனித இனம் அழிந்து போகும் என்பதை உணரலாம். இப்படியான துன்பியல் விடயங்களை மாற்றுவதாயின் நாம் கடவுளில் நம்பிக்கை வைத்து ஆண்டவனையும் மனித உறவுகளையும் மதித்து நீதி நியாயமான வழிகளில் வாழ முற்பட வேண்டும். அதற்கான நல்வழிகள் நமது வாழ்வியலுக்கு இறைவனின் அருள் துணையுடன் நன்மை செய்யும் அல்லவா!

இந்த பெரிய உலகத்தில் மனிதர்கள் மற்றும் உயிரினங்கள் அமைதியாக நிம்மதியாக வாழவேண்டுமாயின் நமது வாழ்வில் கடவுள் நம்பிக்கையும் மற்ற மனிதர்களை நம்மைப்போல் நேசித்து நீதி - தர்மங்களைப் பின்பற்றி வாழ்வதும் இன்றியமையாததாகும். இவற்றைக் கைவிட்டு மனிதர்கள் வாழ்வார்களாயின் மனித குலம் அழிந்து வெறும் மண் உலகமே மிஞ்சும் என்றால் மிகையாகாது.

அன்புடன்,

***ஆசிரியர், ஆ. சண்முகலிங்கம்***

# குறள்நெறி நிகழ்வுகள்

நாம் தமிழர். நமது நெறி தமிழியம். நமது வேதம் திருக்குறள். இக் கோட்பாடுகளில் உணர்ந்து செயல்படுவதே நமக்கு ஆக்கந் தரும். இவை நமது சான்றோர் எமக்கு எடுத்துக் கூறிய உண்மையாகும். தமிழியம் என்பது புதிய கண்டு பிடிப்பு அன்று! நம் பழந்தமிழர் கண்ட நெறியாகும். அவற்றைப் பேணுவது நமது மரபாகும்: கடமையுமாகும்.

நமது இயக்கத்தில் உறுப்பினராகியுள்ள பலர் தம்தம் குடும்பங்களில் ஒவ்வொரு நாளும் காலை - மாலை வேளைகளில் திருக்குறள் ஓதி வருவது கண்டு பெருமிதங் கொள்கிறோம். திருக்குறள் ஓதி வருவது சிறந்த பயனை அளிக்கும். உடல் - உள்ளம் - உயிர் தூய்மை பெறும். காலையில் எழுந்ததும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு ஐந்து நிமிட நேரமாவது திருக்குறளை ஓதி விடுத்தான் பிற வேலைகளை நாம் கவனிக்க வேண்டும். என்பதை உறுதியுடன் பின்பற்றுங்கள்.

## தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் முன் நின்று நடத்தும் நிகழ்வுகள்

01. குழந்தைப் பிறப்புப் பெயர்சூட்டு விழா 30ஆம் நாள் விழா!
02. காதணி விழாவும் பிறந்தநாள் விழாவும்!
03. தமிழ் எழுத்து எண் அறிவிப்பு விழா!
04. திருமண விழா, மணமக்கள் ஓராண்டுத் திருமண நினைவு நாள் விழா! மனவுறுதிப்பாட்டு விழா!
05. தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் விழா!
06. புதுமனை புகுவிழா!
07. மூத்தோர் பொன்விழா - 60ஆம் அகவை நிறைவு!
08. திருக்குறள் நம் மறை - தமிழ்ப் பண்பாட்டுக் குடும்பக் கூட்டங்கள்!
09. நீத்தார் கடன் மட்டும் நினைவேந்தல் நாள்!
10. அமரர்களான பெற்றோர் நினைவு நாள்!
11. இல்லப் பெயர்சூட்டு விழா!

மேற் காணும் நிகழ்வுகளை தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையில் நடத்திக் கொள்ள முன்கூட்டியே இசைவு பெற்றுக் கொள்ளுதல் நலம். செய்முறைப் பணிகளை பொதுச் செயலரிடம் நேரடியாக விளக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

***பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடுவாழ்வர்*** நம் மறை அதி:1 குறள்:6

உண்மையை மறவாதே - நேர்மையில் தவறாதே- ஒழுக்கத்தை ஒருபோதும் கைவிடாதே - நல் வாழ்வு வாழ இதைவிட நல்ல வழி இல்லை.

(கி. ஆ. பெ. விசுவநாதம்)

மு. மணிவெள்ளையன்

முன்னாள் பொதுச் செயலாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் வரலாறு

உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம் உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் அறிந்திருந்தாலும் அமைப்பாகும் இந்த இயக்கம் தோற்றம் பெறுவதற்குப் பல காரணங்கள் இருந்தன. இதன் உருவாக்கம் காலத்தின் தேவையாக இருந்துள்ளது. எந்த அமைப்பினதோ அல்லது நிறுவனத்தினதோ தோற்றம் அதன் செயற்பாடுகள் அது சார்ந்த சமுதாயத்திற்கும் உலகத்திற்கும் பயன்தந்து விளங்கும் போது அதன் பணிகள் அரும்பணிகளாகி வரலாற்றில் பதிவாகி விடுகின்றன.

உலக நாடுகள் பலவற்றில் தமிழர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே குடியேறி வாழ்ந்துவரும் செய்திகள் தகவல்கள் 100 ஆண்டுகளுக்கு மேல் முழுமையாக அறியப்படாமலிருந்து வந்தன.



திரு. ந. வீரமணி

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 18 நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து அமெரிக்க மிசனரிமார் என்ற கிறிஸ்தவப் பாதிரிமார்கள் கிறிஸ்தவ மதத்தை உலகளாவிய ரீதியில் பரப்பும் பணியினைச் செய்யத் தொடங்கினார்கள். இதன் காரணமாக கிறிஸ்தவ மிசனரிமார் உலக நாடுகள் பலவற்றுக்குப் போய்ச் சமயப்பணி செய்ய ஆரம்பித்தார்கள். அதற்கு ஆங்கிலேய அரசின் பூரணமான ஆதரவு இருந்து வந்தது. இப்படியாக சமயப் பயணங்கள் சென்று வந்த சில தேசங்களில் ஒரே மாதிரியான பழக்க வழக்கங்கள் கலாச்சாரம் பண்பாடுகளைக் கொண்ட மக்கள் வாழ்வதைக் கண்டார்கள். இந்த மக்கள் இந்தியத் தொடர்புடைய திராவிட கலாச்சாரத்துடன் வாழ்வது தெரிய வந்தது. இப்படியாக தமிழர்கள் பல இடங்களில் ஆங்காங்கே பரவிச் செறிந்து வாழும் செய்தி விடயங்கள் இந்தியா இலங்கை நாடுகளுக்குக் கிடைக்கத் துவங்கலாயின. இப்படியான தகவல்களை ஹீராஸ் என்ற பாதிரியார் தனது பயணக் கட்டுரைகளில் வெளியிட்டிருக்கிறார்.

இந்த மக்கள் தொகையினர் அமெரிக்காவை அண்டிய தென்னமெரிக்க கிழக்கிந்திய தீவுகள் ரினிடாட் டொபாகோ, சுரினாம், பிரெஞ்ச், பிரிட்டிஸ், கயனாக்கள் போன்றவற்றிலும் மெக்சிக்கோ பெரு நாடுகளிலும் வாழ்ந்துவரும் செய்திகள் அறிய வந்துள்ளன.

மேலும் இந்து சமுத்திரத் தீவுகளான மொறிசியஸ், ரியூனியன், மடகஸ்கார், சீசெல்ஸ் ஆகிய தீவு நாடுகளிலும் தூரகிழக்கில்: தென்னாசியாவில் பிஜித்தீவுகள் மற்றும் இந்தோனேசியா, மேடான் பாலித் தீவுகளிலும், கம்போடியா போன்ற தேசங்களிலும் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றமையும் தெரிய வந்துள்ளன. இவர்கள் 250 ஆண்டுகளுக்கு முன்னர் பிரெஞ்சு ஆதிக்கத்தார் தாம் கைப்பற்றி ஆண்டு வந்த அமெரிக்கத்தீவுகள் இந்து சமுத்திரத் தீவுகளில் கூலித்தொழில் கரும்புத் தோட்ட வேலைகள் செய்வதற்கு கடல் கப்பல்கள் மூலமும் தமிழ் நாட்டிலிருந்து கூட்டிச் செல்லப்பட்டு குடியேற்றப்பட்டிருந்தார்கள் ஆங்கிலேயர் ஆட்சியில் தென்னாபிரிக்கா, சிங்கப்பூர்,மலேசியா நாடுகளுக்கும் தமிழர்கள்அழைத்துச் செல்லப்பட்டு குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். அதே போன்று இலங்கை மலைப்பகுக் காடுகளைத் திருத்தி தேயிலை, றப்பர், தோட்டங்கள் அமைப்பதற்கு 1850 இல் தமிழ்நாட்டிலிருந்து தமிழர்கள் ஆங்கிலேயர்களால் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுக் குடியேற்றப்பட்டார்கள் இவர்களில் தென்னாசிய நாடுகளில் வாழ்ந்து வந்த மக்களுக்கு தாய் நாடான தமிழகம், இலங்கை ஆகியவற்றுடன் ஓரளவு தொடர்புறவுகள் நிலவி வந்தன.



திரு. சி. ஏகாம்பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் மொழியை இழத்தல்

அமெரிக்க கிழக்கிந்திய தீவுகள் மற்றும் தீவுகளில் வாழ்ந்து வந்த நம் தமிழ் மக்கள் தாய் நாட்டுடன் காலப்போக்கில் தொடர்புறவுகள் துண்டிக்கப்பட்ட நிலமை ஏற்பட்டதால் அந்த நாடுகளின் ஏகாதிபத்திய ஆட்சி மொழியாக இருந்த பிரெஞ்சு மொழியைப் பேச வேண்டியவர்களானார்கள். இதே போன்று தென்னாபிரிக்காவுக்கு அண்மித்த இந்து சமுத்திரத் தீவுகளில் வாழ்ந்து வரும் மக்கள் ஆபிரிக்க மொழியையும், பிரென்சு மொழியையும் கலந்த, கிரியோல், என்ற மொழியைப் பேசிவருகின்றனர்.

ஆங்கிலேயர் ஆட்சியில் தென் ஆபிரிக்காவில் குடியேறிய தமிழர்கள் ஆங்கிலத்தைப் பேசிவருகின்றனர். மலேசிய சிங்கப்பூரில் வாழ்ந்து வரும் மக்கள் ஆங்கிலம் மற்றும் தமிழ் மலாய் மொழியைப் பேசிவருகின்றனர் பர்மாவில் உள்ள மக்கள் பர்மிய மொழியையும் தமிழையும் இந்தோனேசியா, கம்பேடியாவில் வாழ்ந்து வரும் மக்கள் அந்தந்த நாட்டின் மொழியை பேசி வருகின்றனர். மலேசியா, சிங்கப்பூர், பர்மா நாடுகளில் வாழ்ந்துவரும் நம் மக்களுக்கு தாய்நாடான தமிழ்நாடு மற்றும் இலங்கை ஆகியவற்றுடன் கப்பல் போக்குவரத்துத் தொடர்புகளிருந்து வந்தமையால் அங்கே வாழ்ந்து வரும் தமிழர்கள் இன்றும் தாய் மொழியைப் பேசி வருவதைக் காணலாம்.

# 20ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மாற்றங்கள்

பதினெட்டாம் நூற்றாண்டில் மத்திய பகுதியில் கிறிஸ்தவ மதத்தை உலகமெல்லாம் பரப்பும் பணியில் ஈடுபட்டு வந்த கிறிஸ்தவ பாதிரிமார் உலகில் பல நாடுகளுக்குச் சென்றும், தங்கியும் மீண்டும் திரும்பியும் வந்திருந்தார்கள். இவர்களில் பலர் உலகின் பல நாடுகளில் தமிழ் மக்கள் கலாச்சாரம் பண்பாட்டுடன் வாழ்வதையும், அவர்கள் தாய் மொழியை இழந்து வாழ்ந்து வருவதையும் கண்டார்கள். கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்த நம்மவர் பலர் ஆங்கிலம் கற்று அறிஞர்கள் ஆகினர். சிலர் கிறிஸ்தவப் பிஷபுகளாகி சமயத் தொண்டு செய்து வந்தார்கள். சிலர் கிறிஸ்தவ மதப் பயணங்களை மேற்கொண்டு உலகில் பல நாடுகளுக்குச் சென்று வந்தார்கள். இவர்கள் எழுதிய பயணக் கட்டுரைகள் உலகில் தமிழ் மக்களின் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட புலம்பெயர்வையும் ஆங்காங்கே வாழ்ந்து வருவதையும் அறிய முடிந்தது.

இவர்களில் மிகவும் சிறப்பாகத் தமிழ்ப்பணி செய்த தமிழறிஞரான வண. பிதா. எஸ். தனிநாயகம் அடிகளாரைக் குறிப்பிடலாம். இவர் தனது பயணங்களின் மூலம் உலகில் தமிழர்களின் கடந்த காலங்களில் ஏற்பட்ட புலம் பெயர்வுகளையும் அவர்களின் தற்போதைய நிலைமையையும் நன்கு ஆராய்ந்து கட்டுரைகள் மூலமும் சொற்பொழிவுகள் மூலமும் வெளிப்படுத்தி வந்திருக்கிறார். இவரின் அரும் பெரும் தமிழ்ப் பணிகளால் உலகளாவிய ரீதியில் வாழ்ந்து வரும் தமிழர்களிடையே தொடர்புறவையும் நட்புறவையும் வளர்க்க ஏது நிலை அமைந்து வந்தமை வரலாற்றில் புகழ் பெற்று நிலை பெற்று விட்டது.

இதன் காரணமாக அறிஞர் வண. எஸ். தனிநாயகம் அடிகளார் தமிழர் வரலாற்றில் நிரந்தரமான இடத்தைப் பெற்று விட்டார். உலகத் தமிழாராய்ச்சி மன்றம் தோற்றம் பெறுவதற்கும் சுவாமி எஸ் தனிநாயக அடிகளார் முக்கியமாக இருந்து பங்காற்றியிருக்கிறார்.

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தோற்றம் பெறுதல்

உலகில் பல நாடுகளில் பரந்து வாழ்ந்தும் தாய்மொழிப் பேச்சை இழந்தும் தமிழ்ப் பண்பாட்டு எச்சங்களுடன் வாழ்ந்து வரும் நமது சமுதாய மக்கள் மீண்டும் தமிழ் பேசும் சமுதாயமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழவும் அவர்களுடன் தொடர்புறவை ஏற்படுத்தவும் வேண்டிய சிந்தனைக் கருத்துக்கள் சில பெரியார்களிடையே கருவாகி உருவாகி எண்ணங்களில் மையங்கொண்டு வரலாயிற்று.

இந்த நிலையில் 1974 ஆம் ஆண்டில் பெரிய மாற்றம் ஒன்று நிகழ்ந்தது. 1974 ஆம் ஆண்டில் ஜனவரி மாதத்தில் 4ஆம் நாளிலிருந்து 10ம் நாள் வரை 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடாத்துவதற்கு பேரறிஞர் வண. எஸ் தனிநாயகம் அடிகளாரும் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேராசிரியர்கள் சாலை இளந்திரையன் சாலினி இளந்திரையன் பேன்ற பல தமிழறிஞர்கள் இணைந்து நடாத்தினார்கள். இதற்கு பல நாடுகளிலிருந்து பேராளர்களாகப் பல பெரியார்கள் வருகை தந்திருந்தார்கள். தென்னாபிரிக்காவிலிருந்து திரு. N. நாடார் போன்ற அறிஞர்களும் பல இந்திய அறிஞர்களும் டி. டி. நாணயகாரா என்ற சிங்களத் தமிழறிஞரும் கமில் ஸ்சுவலபெல் என்ற ஜேர்மன் தமிழ் அறிஞரும் பிரிந்தாபெக் என்ற ஆங்கிலத் தமிழறிஞரும் இந்த மாநாட்டுக்கு வருகை தந்து சிறப்பித்தார்கள்.

உலகத்தமிழாராய்ச்சி மாநாடு நடந்தபோது இந்த மாநாட்டுக் காலத்தில் உலகத் தமிழர்களிடையே தமிழுறவை நட்புறவை வளர்க்க வேண்டுமென்ற நோக்கில் ஆர்வத்தில் இலங்கை அறிஞர் பேராசிரியர் வண. எஸ். தனியாகம் அடிகளார் பேராசிரியர் திரு. சு. வித்தியானந்தன் குரும்பசிட்டி திரு. இரா. கனகரட்ணம் மற்றும் இந்தியப் பேராசிரியர்கள் திரு. சாலை இளந்திரையன் திருமதி சாலினி இளந்திரையன் தென்னாபிரிக்க அறிஞர் திரு. N. நாடார் மலேசிய அறிஞர் சிலர் யாழ்ப்பாணம் திரு. எஸ். கதிரவேலு எஸ் இராசரட்ணம் போன்ற பெரியார்கள் இணைந்து திரு. இரா. கனகரட்ணம் அவர்களின் அனுசரணையுடன் ஆலோசனை செய்யப்பட்டு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் 08.01.1974ஆம் நாளில் அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## உ.த.ப. இயக்கத்தின் தொடக்கக் கூட்டம்

அன்று இந்த அமைப்பு உலகம் புகழ் பெற்ற யாழ்ப்பாணம் நகரில் அமைந்திருந்த மலாயன் கபே என்ற உணவகத்தின் மேல்மாடியில் சம்பந்தப்பட்ட அறிஞர்கள் ஆர்வலர்கள் ஒன்று கூடினர். அமைப்பின் நோக்கங்கள் ஆராயப்பட்டு பேசப்பட்டன. இறுதியில் ஒரே மனதாக இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டது.

இந்த அமைப்பின் முதல் தலைவராக பேராசிரியர் திரு. சாலை. இளந்திரையன் தெரிவுசெய்யப்பட்டார். குரும்பசிட்டி திரு. இரா. கனகரட்ணம் அவர்கள் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டார் செயற்குழுவென்றும் நியமிக்கப்பட்டது. இந்த அமைப்பின் முக்கியமான நோக்கம் உலகத் தமிழர்களிடையில் நட்புறவையும் தொடர்புறவையும் வளர்த்து மேம்படுதிதுவதாகும். இரண்டாவது குறிக்கோள் எந்த நாட்டிலும் அரசியல் சார்பில்லாதமுறையில் பணியாற்றுவது இதனால் இந்த இயக்கம் உலகத்தில் உலகத் தமிழர்களுக்காக அமைக்கப்பட்ட முதலாவது பேரமைப்பாக வரலாற்றில் பதிவாகிவிட்டது.

நாலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு முடிந்தும் வெளிநாட்டுப் பேராளர்கள் தத்தம் தாய் நாடுகள் திரும்பினார்கள். பின்னர் உ.த.ப. இயக்கத்தின் பணிகள் அஞ்சல்கள் வரைந்து நடந்து வரத்துவங்கின. திரு. இரா. கனகரட்ணம் அவர்கள் உலக நாடுகளில் வாழும் முக்கியமான தமிழ் அறிஞர்களுக்கு அஞ்சல் எழுதி உ.த.ப. இயக்கத்தின் பணியை தெடர்ந்து செய்து வந்தார். அவர்களும் பதில் வரைந்து பணிக்குச் சிலர் உதவிவரத் தொடங்கினர். 1974ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு ஆர்வமாக நடைபெற்று வந்த உ.த.ப. இயக்கத்தின் அஞ்சல் மூலமான பணிகள்-ஆலோசனைப்பணிகள் 1975 வரை இலங்கையிலும் சென்னை டில்லியிலும் நடந்து வந்தன இந்தப்பணியில் திரு. சாலை. இளந்திரையன் தலைவராகத் தொடர்ந்து செயற்பட முடியாத சூழ்நிலையில் 1976இல் உ.த.ப.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை மலேசிய அறிஞரும் தமிழ் ஆர்வலருமான திரு. இரா. ந. வீரப்பன் அவர்கள் பொறுப்பேற்றுச் செய்யத் தொடங்கினார். இந்த நிறுவனம் தொடங்கப்படுவதற்கு முன்னர் திரு. இரா. கனகரட்ணம் அவர்கள் உலகத் தமிழர் சம்பந்தமாக சிறு நூல்கள் இரண்டினை எழுதி வெளியிட்டிருந்தார். "உலகத் தமிழர்களே ஒன்றுபடுங்கள்", "அலைகடலுக்கப்பால் தமிழர்" என்பனவே அவையாகும். 1976ஆம் ஆண்டில் பொதுச் செயலாளர் உலகத் தமிழர் குரல் என்ற பெயரில் சிறிய பத்திரிகையொன்றை உ.த.ப. இன் பணியாகத் தொடங்கினார். 1976, 1977 ஆம் ஆண்டுகளில் 2 இதழ்கள் வெளிவந்தன. பின்னர் 1978 இல் உ. த. குரல் வெளியிடும் பொறுப்பை திரு. ஆ. சண்முகலிங்கம் என்ற இளைஞரிடம் திரு. இரா. கனகரட்ணம் கையளித்தார். அதில் அவர் ஆசிரியராகவும் திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்கள் பொறுப்பாசிரியராகவும் இருந்து வந்தனர். திரு. ஆ. சண்முகலிங்கம் பொறுப்பேற்றதும் 5 இதழ்கள் பெரிய வடிவில் பிரசுரிக்கப்பட்டன. அந்த இதழ்களின் அச்சீடும் முழுச் செலவினங்களையும் திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்கள் செய்து வந்தார். அந்த இதழ்களை திரு. இரா. கனகரட்ணம் அவர்களின் பணிப்பின் பேரில் உலக நாடுகளுக்கும் அனுப்பவும் துவங்கினர்.



திரு. ஆ. சண்முகலிங்கம்

## உ.த.ப. இயக்கத்தில் இளைஞர் சேரும் நிலைமை தோன்றல்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட செய்தி தமிழ் அபிமானிகள் மத்தியில் தமிழ் இளைஞர்கள் சிந்தனையில் புத்துணர்வை ஏற்படுத்தி வந்தது. இது இலங்கையில் மட்டுமன்றி ஏனைய தமிழர் வாழும் தேசங்களிலும் கணைத்தைத் தொட்டு வந்தது. இலங்கையில் உ.த.ப. இயக்கம் ஆரம்பமான செய்திகளை புகழ் பெற்ற நாளேடுகளான வீரகேசரி, தினகரன் ஈழநாடு போன்றவை முக்கியத்துவம் அளித்து சிறப்பு செய்திகள் வெளியிட்டிருந்தன. இந்தச் செய்திகள் ஆர்வமுள்ள இளைஞர்கள் சிலரைக் கவர்ந்தன.

உலகத் தமிழர் நட்புறவு தொடர்புறவுக்கான இந்த இயக்கத்தின் தோற்றத்தை அறிந்து கொண்ட வேலணையைச் சேர்ந்த இளைஞர்களான திரு.நா. ஜெயசேகரன் திரு.இ. சற்குருநாதன் திரு.ஆ.சண்முகலிங்கம் ஆகியோர் இதில் இணைந்து செயல்பட வேண்டுமென்ற ஆர்வம் பெற்றார்கள் திரு.ஆ. சண்முகலிங்கம் திரு. இ. சற்குருநாதன் இருவரும் பொதுச் செயலாளர் விரும்பியபடி திரு.இரா. கனகரட்ணம் அவர்களின் "தமிழகம்" இல்லத்துக்குச் சென்றனர் அங்கே அவருடன் கலந்து பேசி இந்த அமைப்பில் சேரும் விருப்பத்தை தெரிவித்தார்கள். இந்த நிகழ்வு 1976ஆம் ஆண்டில் ஆரம்ப காலத்தில் அமைந்தது பின்னர் இவர்கள் உ.த.ப. இயக்கத்தில் இணைந்து கொண்டார்கள் இதே போன்று வேறு சில இளைஞர்களும் சேர முன்வந்தனர்.

1976 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் இயக்கத்தின் இலங்கைக் கிளை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் 15க்கு மேற்பட்ட இளைஞர்கள் ஆர்வலர்கள் கலந்து கொண்டார். இலங்கை கிளையின் முதலாவது செயற்குழு தெரிவையும் இந்தக் கிளையின் தொடக்கக் கூட்டம் பொதுச்செயலாளர் திரு. இரா. கனகரட்ணம் அவரின் வீட்டில் நடந்தது. கிளையின் தலைவராக திரு. எஸ். இராஜரட்ணம் என்ற ஆர்வலர் நியமிக்கப்பட்டார் செயற்குழுவில் திரு. செ. பரமநாதன் திரு. ஆ. சண்முகலிங்கம் திரு. இ. சற்குருநாதன் திரு. என். பத்மநாதன் திரு. எஸ். சோதிலிங்கம் திரு. என். ஜெயசேகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். செயலாளராக திரு. க. கந்தசாமி என்ற இளைஞர் நியமிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்து இலங்கை கிளையின் செயற்பாடுகள் ஆர்வமுடன் நடந்து வந்தன. சாதாரண உறுப்பினராகச் சேரப் பலர் முன்வந்தனர். பொதுச் செயலாளர் கண்டியிலுள்ள தனது இல்லத்திலிருந்து கொண்டு கிளையுடன் அஞ்சல் தொடர்பு கொண்டு பணிசெய்து பணிப்புரை வழங்கி வந்தார்.

ஆரம்பத்தில் இதன் செயற்பாடுகள் ஸ்ரான்லி வீதியில் அமைந்திருந்த தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணி அலுவலகத்தில் மாதந்தோறும் இறுதி ஞாயிறு கிழமைகளில் பிற் பகலில் கூட்டங்கள் நடந்து வந்தன. இதற்கு தொழிற்சங்கப் பிரமுகர் திரு. ஐ. தி. சம்பந்தன் என்ற பெரியார் இடந்தந்து உதவினார்.1980 ஆண்டின் பின்னர் உ.த.ப. இன் இலங்கைக் கிளை தனது முகவரியை யாழ் நகரில் புகையிரத நிலைய வீதியில் 67ம் இலக்க வின்சன் மாஸ்ரர் அவர்களின் இல்லத்திற்கு மாற்றிச் செயல்பட ஆரம்பித்தது மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுக் கிழமைகளில் கூட்டங்கள் நடக்கும் இதில் அப்போது தலைவராக இருந்த இளைஞர் திரு. என். ஜெயசேகரன், செயலாளராக இருந்த, திரு. இ. சற்குருநாதன், பொருளாளராக இருந்த திரு.எஸ். ஜெயரட்ணசிங்கம் மற்றும் உலகத் தமிழர் குரல் ஆசிரியப்பணியில் இருந்த திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்கள் இ. சற்குருநாதன் பேன்றோர் கிரமமாகக் கலந்து கொண்டு உ.த.ப. இன் பணிகளின் செயற்பாடுகளுக்கான திட்டங்கள் தீட்டி வந்தார்கள். ஆயினும் திட்டங்கள் போடப்பட்டாலும் அதை நிறைவேற்றம் ஆர்வம் பொறுப்பை திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்களே செய்து கொண்டிருந்தார்கள். இவர் அப்போது மத்திய குழுவில் துணைச் செயலாளராகவும் இருந்து வந்தார் கிளையில் உள்ள பலர் பேச்சளவில் தான் செயல்பட்டு வந்தார்கள். சிலர் அரசியல் கருத்துக்களில் ஆர்வமாக இருந்தார்கள் ஆயினும் அரசியல் கருத்துக்கள் பிரச்சினைகளைத் திரு.ஆ. சண்முகலிங்கம் உ.த.ப. இன் பணிகளில் அனுமதிப்பதில்லை காரணம் இளைஞர்களான உறுப்பினர்கள் முன் யோசனை இன்றி செயற்பாடுகளின் பின் விளைவுகளைப் பற்றிச் சிந்திக்க அனுவமில்லாதவர்களாகவும் இருந்து வந்திருக்கிறார்கள் இதனைக் காலப்போக்கில் அவர்கள் அனுபவத்தில் உணர்ந்து கொண்டார்கள்.

உ.த.ப. இன் கருத்துக்களை வெளிப்படுத்தும் பிரசார ஊடகமாக உலகத் தமிழர் குரல் ஏட்டை திரு.ஆ. சண்முகலிங்கம் பயன்படுத்தி வந்தார். உ.த.ப. இன். உலகளாவிய தொடர்புகளுக்கும் இலங்கை கிளையின் பணிகள் தொடர்பான செய்திகளுக்கும் அவர் முக்கியத்துவம் கொடுத்து வந்தார். தொழிலில் இருந்த கிளையின் இளைஞர்களுக்கும் கிளையின் செலவினங்களுக்கு உதவும் எண்ணம் குறைவாக இருந்து வந்தது இதனால் கிளையை வளர்க்கும் பணிகளில் திரு.ஆ. சண்முகலிங்கம் அவர்கள் மிகவும் சிரமப்பட்டு வந்தார் அவர் அரசு சார்ந்த தொழிலில் இருந்தபடியால் ஆர்வமும் அர்ப்பணிப்புச் சிந்னையும் மிக்கவராய் இருந்து வந்தபடியால் கிளைப் பணிகளுக்கும் பத்திரிகை வெளியீட்டுச் செலவினங்களுக்கும் அவரே கூடுமானவரை செலவு செய்து வந்தார். இந்த நிலையில் கிளையின் பணியில் ஏனோ தானோ என்ற நிலையிலும் சிலரும் நின்று பிடித்தார்கள். 1980க்கு பின்னர் இந்த அமைப்பில் இணைந்த இ. தவகோபால் என்ற இளைஞர் கிளைக்கு பல சாதாரண உறுப்பினர்களை சேர்த்து வந்தார் 1978ல் இருந்து உலகத் தமிழர் குரல் பத்திரிகை 05 இதழ்கள் 1984வரை பெரிய வடிவமைப்பில் சிறப்பாக வெளியிடப்பட்டு வந்தன.

பொறுப்பாசிரியாக இருந்த திரு.ஆ. சண்முகலிங்கம் அவர்களின் ஆசிரியத்தலையங்கம் காத்திரமாகவும் பயனுள்ள வகையானவையாகவும் அமைந்து வந்தன. இலங்கை கிளையின் வரலாறு மிகவும் முக்கியமானதும் வரலாற்றுச் சிறப்பம்சம் கொண்டதாகும். அதன் வரலாற்று விபரங்கள் தனியாக எழுதப்படுகின்றன. உலகத் தமிழர் குரல் வெளியீடுகள் காலந் தோறும் உலகின் பல நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்தன. அமைப்பின் உலகத் தலைவராக இருந்து வந்த திரு. இர. ந. வீரப்பன் அவர்கள் இலங்கை கிளையின் சிறப்பான பணிகளைப் பாராட்டி அடிக்கடி திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்களுடன் தொடர்புறவை வளாத்து வந்தார் கிளையில் இருந்த மற்றவர்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டு ஊக்கமளித்தும் எழுதிவந்தார். ஆயினும் அவர்கள் பதில் அஞ்சல் வரைவதில் அக்கறை எடுப்பதில்லை. பொதுச் செயலாளர் அவர்கள் பணி செய்து வந்த போதும் அவரின் பணிகள் வேகமாக அமையாமல் பின்தங்கி வந்தன. உ.த.ப. இயக்கத்தினால் நடாத்தப்பட்டு வந்த உலக மாநாடுகள் வரலாற்றுச் சிறப்புடையவையாகும். அவற்றினால் உலகத் தமிழர் சந்திப்பும் தொடர்புகளும் வளர ஏது நிலைகள் அமைந்து வந்தன.

## உ.த.ப. இயக்கத்தின் உலக மாநாடுகள் - விபரங்கள்

இன்று வரை இந்த அமைப்பினால் 9 உலக மாநாடுகள் மற்றும் பல பேரவை மாநாடுகள் நடாத்தப்பட்டு வரலாறு படைத்துள்ளன. இவை யாவும் 6 நாடுகளில் நடாத்தப்பட்டன.

## உலக மாநாடுகள் விபரங்கள்

1. முதலாவது மாநாடு 1977 ஆம் ஆண்டில் சென்னையில் நடந்தது.
2. இரண்டாவது மாநாடு 1980 ஆம் ஆண்டில் மொறிசியஸ் நாட்டில் நடைபெற்றது.
3. மூன்றாவது உலக மாநாடு 1985 இல் சேலம் நகரில் நடந்தது.
4. நான்காவது மாநாடு 1987 ஆம் ஆண்டில் மலேசியாவில் - கிள்ளான் நகரில் நடந்தது.
5. ஐந்தாவது மாநாடு 1991 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவில் நடை பெற்றது.
6. ஆறாவது மாநாடு 1996 இல் கனடாவில் ரொறன்ரோ மாநகரில் நடந்தது.
7. ஏழாவது மாநாடு 1999 ஆம் ஆண்டில் சென்னையில் நடந்தது.
8. எட்டாவது மாநாடு தென்னாபிரிக்காவில் டெர்பன் நகரில் 2001ஆம் ஆண்டில் நடந்தது.
9. ஒன்பதாவது மாநாடு 2004 ஆம் ஆண்டில் புதுவையில் யூலை 10, 11, 12ம் நாட்களில் (பாண்டிச்சேரி) நடந்தது.

இயக்கத்தின் பேரவை மாநாடுகள் 1981இல் மதுரையில் காமராஜர் பல்கலைக்கழக வளாகத்திலும் 1985இல் சேலத்திலும் 1987 இல் மலேசியாவிலும் 1989 இல் மொறிசியாசிலும் 1995 இல் தஞ்சையிலும் 1999 இல் சென்னையிலும் 2001ஆம் ஆண்டில் தென்னாபிரிக்காவிலும் 2004 இல் பாண்டிச்சேரியிலும் நடந்தேறின.

## சென்னையில் நடந்த முதலாவது உலக மாநாடு

தலைவர் திரு. இர. ந. வீரப்பன் அவர்கள் தனது குழுவினருடன் மலேசியாவிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்து உ.த.ப. இயக்கத்தின் முதலாவது உலக மாநாட்டுக்காக ஏற்பாடுகள் செய்தார். சென்னை மாணவர் மன்றத்தினரும் இவருக்கு ஆதரவாச் செயலாற்றிக் கொண்டிருந்தார்கள். பொதுச் செயலாளர் திரு. இரா. கனகரட்ணம் அவர்களும் சென்னைக்குப் போய் அவருடன் இணைந்து செயல்படலானார் இலங்கைப் பேராளர்குழு, மொறிசியஸ், அந்தமான், பர்மா, பீஜி, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, அமெரிக்காவைச் சேர்ந்த உ.த.ப. இயக்கத்தின் ஆதரவான பிரமுகர்கள் மாநாட்டுக்கு வருகை தந்திருந்தனர்.

இந்த மாநாடு உலகத்தில் முதன் முதலாக நடைபெற்ற தமிழ்ப் பண்பாட்டு உலக மாநாடு என்ற வரலாற்றுப் பெருமையைப் பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த முதலாவது மாநாட்டுக்கு அன்றைய தமிழக முதல் அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும். எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்களும் மிகுந்த ஆதரவு வழங்கியமை குறிப்பிடத்தக்கது இந்த மாநாடு சென்னையில் உள்ள திருமண மண்டபம் ஒன்றில் இடம் பெற்றது இதில் வெளிநாட்டுப் பேராளர்கள் உள்ளுர் பேராளர்கள் பொது மக்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள் தலைவர் திரு. இர. ந. வீரப்பன் அவர்கள் மாநாட்டுக்குத் தலைமை தாங்கி நடத்தினார். மொறியஸ்சில் இருந்து திரு.எ. புஸ்பரதம் மற்றும் துனைவியார் பீஜியிலிருந்து பெரியார் திரு. .கா. அப்பாப்பிள்ளை அவர்களும் குழுவினர் சிலரும் அந்தமானிலிருந்து திரு. சுப. சுப்பிரமணியன் திரு.எஸ். பாலசுப்பிரமணியம் பர்மாவிலிருந்து திரு.எஸ். ரவிபாண்டியன் திரு. ஏ. ஆர். மாரிமுத்து தென்னாபிரிக்காவில் இருந்து பேராசிரியர் வே. கோவிந்தசாமி திருமதி காமாட்சியம்மாள் சோதிநாதன் போன்றோர் இலங்கையிலிருந்து திரு.ஆ. சண்முகலிங்கம் திரு. இ. சற்குருநாதன் திரு. ந. பத்மநாதன் திரு. செ. பரமநாதன் திரு. கே. சிவக்கொழுந்து போன்ற பலரும் மாநாட்டுக்குப் பேராளர்களாக வருகை தந்திருந்தார்கள்

இந்தியக் கல்வி மான்கள் பலரும் இந்த மாநாட்டில் கலந்த கொண்டார்கள் தமிழக முதல்வர் மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் வெளிநாட்டுப் பேராளர்களுக்குச் சிறப்பானதொரு வரவேற்புபசாரம் அளித்து மதிப்பளித்தார். எதிர்க்கட்சித்தலைவர் கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள் பிரமாண்டமானதொரு வரவேற்பு நிகழ்வொன்றை ஏற்பாடு செய்வித்து வெளிநாட்டு பேராளர்களை கௌரவித்து பேசினார். இந்த நிகழ்வில் பேராசிரியர் திரு.க. அன்பழகன் அவர்களும் கலந்து கொண்டார். இதே நிகழ்ச்சியில் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் இலங்கைத் தமிழர்கள் படும் இன்னல்களைத் தொட்டுப் பேசினார். தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் இலங்கைத் தமிழர் இனப்பிரச்சனை விடயம் பேசப்பட்ட முதலாவது நிகழ்வாக இது வரலாற்றில் பதிவாகி பெருமை கண்டது. உலகத் தமிழர் நட்புறவை வளர்க்கும் தீர்மானங்கள் இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. உலகத் தமிழர்கள் முதன்முதல் ஒன்று கூடல் நிகழ்வாக இந்த மாநாடு சிறப்புப்பெற்றது.

## இரண்டாவது உலக மாநாடு - மொறிசிஸ்

முதலாவது மாநாடு உலகத்தமிழ் அறிஞர்கள் ஆர்வலர்கள் மத்தியில் புத்துணர்வையும் எழுச்சியையும் வளர்த்து வந்தது தலைமையகம் மற்றும் கிளைகள் யாவும் ஆர்வமாக செயல்பட்டு வந்தன. தலைமையகம் மற்றும் கிளைகளிடையே அஞ்சல் வழியில் உறவும் பணிகளும் ஊக்கம் பெற்று வந்தன. இந்த நிலையில் 1980ஆம் ஆண்டில் இரண்டாவது மாநாட்டை மொறிசியஸ் நாட்டில் நடாத்துவதற்கு தலைமையகமும் மொறிசியஸ் கிளையும் முடிவு செய்தன இந்த மாநாடு நடப்பதற்கு முன்னதாக மொறிசியஸ் தமிழ் கல்வி அதிகாரியாக இருந்த திரு. எ. புஸ்பரதம் அவரின் துனைவியாருடன் இலங்கைப் பயணத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார் அவர்களை வரவேற்று பொதுச் செயலாளர் தனது குரும்பசிட்டி இல்லத்தில் தங்க வைத்தார். இவர்கள் இலங்கைக் கிளையின் ஆ. சண்முகலிங்கம் செ. பரமநாதன் இ. சற்குருநாதன் திரு. N. ஜெயசேகரன் ஆகியோரைச் சந்திதித்து உரையாடினார்கள் இவாகளைத் தொடாந்து திரு. எஸ். சண்முகம் என்ற மொறிசியஸ் இளைஞர் யாழ்ப்பாணத்துக்கு வந்து இலங்கை கிளையினரைச் சந்தித்துக் கலந்துரையாடிச் சென்றார்.

1980ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் இரண்டாவது உலக மாநாடு மொறிசியஸில் நடந்தது. மாநாடு ஆகஸ்ட் 02 ஆம் திகதியில் மொறிசியஸ் நாட்டின் தலைநகர் போட்லூயிசில் உள்ள மகாத்மாகாந்தி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டை மொறிசியஸ் தேசத்தின் தேசாதிபதி மாண்புமிகு வீராசாமி ரெங்காடு அவர்கள் வைபரீதியாக தொடக்கி வைத்தார். அந்த நாட்டின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதமர் மாண்புமிகு சிறீசிவாகர் ராம்கூலம் மற்றும் சில அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து சிறப்பித்தார்கள் மாநாட்டுக்கு தலைவர் திரு. இர. ந. வீரப்பன் அவர்கள் தலமை தாங்கினார். இலங்கையிலிருந்து பொதுச் செயலாளர் திரு.இரா. கனகரட்ணம் அவர்கள் சென்றிருந்தார். திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்கள் அழைக்கப்பட்டிருந்த போதிலும் குறுகிய கால அவகாசத்தில் அவர் பயண ஒழுங்கைச் செய்ய முடியவில்லை. மாநாட்டுக்குத் தமிழகக்கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு. அரங்கநாயகம் அவர்கள் சென்று கலந்து கொண்டார். தமிழக அரசின் அனுசரணையுடன் கலைக்குழு ஒன்று தமிழ் நாட்டிலிருந்து வந்து மாநாட்டில் கலை நிகழ்ச்சிகளை நடாத்தியது. மாநாட்டைக் கௌரவித்து மொறிசியசு அரசு இரண்டு ரூபா அஞ்சல் முத்திரை ஒன்றை வெளியிட்டது. அதில் தமிழ்ப்பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வண்ணம் குத்துவிளக்குகளும் நாதஸ்வரமும் இடம்பெற்றிருந்தன. தமிழ் பண்பாட்டு மாநாடு 1980 என்ற வாசகம் அதில் தமிழில் பொறிக்கப்பட்டிருந்தது.

மாநாட்டில் மொறிசியஸ் தமிழ்த் தலைவர்களான பெரியார் திரு.மா. தங்கணமுத்து காசிசெட்டி திரு.எ.புஸ்பரதம் திரு.கே. ரட்ணம் போன்றோர் கலந்து சிறப்பித்தார்கள். இது மொறிசியஸ் நாட்டில் அமைந்த வரலாற்றுப் புகழ் பெற்ற முதல் மாநாடாக விளங்கியது. மாநாட்டின் பின்னர் மொறசியஸ் நாட்டில் தமிழர்கள் மத்தியில் தமிழை எழுதப் படிக்க ஆர்வம் தோன்றியது.

## 1981 இல் மதுரையில் சங்கமித்த புகழ் பெற்ற பேரவை மாநாடு

1981ம் ஆண்டில் மதுரையில் அமைந்த உ.த.ப. இயக்கத்தின் பேரவை மாநாடு வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகும்.

1981ம் ஆண்டில் டிசம்பர் மாதத்தில் 5 ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு மதுரையிலுள்ள காமராஜர் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. இந்த மாநட்டில் உலகில் பல பாகங்களிலிருந்து பேராளர்கள் வருகை தந்து கலந்து கொண்டார்கள். இவர்களில் உ.த.ப. இயக்கத்தைச் சேர்ந்த அறிஞர்கள் மாநாட்டில் சங்கமித்தார்கள்.

மலேசியாவில் இருந்து தலைவர் திரு வீரப்பன், துணைவியார் மற்றும் அறிஞர்கள் சிலர் வந்திருந்தார்கள். இலங்கையிலிருந்து உ.த.ப. இன் முக்கிய பிரமுகர் திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்களின் தலைமையில் பேராளர் குழு ஒன்று மாநாட்டுக்கு வருகை தந்தது இதில் திரு. இ. சற்குருநாதன், திரு. பொன். பூலோகசிங்கம், திரு. வே. தேவதாசன், திரு. என். தவரட்ணம், திரு. செ. பரமநாதன், திரு. நா. பத்மநாதன் மற்றும் பொதுச்செயலாளர் திரு. இரா. கனகரட்ணம் ஆகியோர் இடம் பெற்றிருந்தார்கள். மொறிசியஸ்சிலிருந்து திரு. எ. புஸ்பரதம் அவர்கள் தென்னாபிரிக்காவிலிருந்து பேராசிரியர் திரு. வீ. கோவிந்தசாமி திருமதி. காமாட்சி சோமசுந்தரம் அமெரிக்காவிலிருந்து சுவாமி விஞ்ஞானந்தா லண்டனிலிருந்து திரு. கே. ஞானசூரியன் பர்மாவிலிருந்து திரு. ஆர். மாரிமுத்து, ரவிபாண்டியன் பீஜிலிருந்து திரு. கா. அப்பாபிள்ளை மற்றும் சிலர் பெங்களூரிலிருந்து கவிஞர் திரு. எஸ். உலகநாதன் சிங்கப்பூரிலிருந்து திரு. முல்லைவாணர் அந்தமானிலிருந்து திரு. சுப. சுப்பிரமணியன், திரு. பாலசுப்பிரமணியம் கொழும்பிலிருந்து அறிஞர் திரு. க. கந்தசாமி எழுத்தாளர் மாத்தளை சோமு சேலத்திலிருந்து திரு. சோலை இருசன் தஞ்சாவூரிலிருந்து திரு. இர. இரத்தினகிரியார் புதுக்சேரியிலிருந்து திரு. மதுரகவி பேரறிஞர் திரு. பெருஞ்சித்திரனார் முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விஸ்வநாதன் அறிஞர் குமரி அனந்தன் பேராசிரியர் க. ப. அறவாணர் போன்ற பல அறிஞர் பெருமக்கள் தமிழாராய்ச்சி மாநாட்டிலும் இவர்களில் பலர் பேரவை மாநாட்டிலும் கலந்து கொண்டார்கள்.

உலக மாநாட்டின் 2ம் நாளில் அன்று உ.த.ப. இயக்கத்தின் பேரவை மாநாடு அங்கே நடைபெற்றது இதில் உலக நாடுகளிலிருந்த அறிஞர்கள் பலர் கலந்து சிறப்பித்தார்கள் இவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாரும் கூடி கலந்துரையாடினார்கள் இதன் மூலம் உலகத் தமிழர் சந்திப்பும் ஒன்று கூடல் நிகழ்வும் உலகத் தமிழர்களிடையே நட்பு ஒற்றுமையுணர்வு மேலோங்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டது இந்தப் பேரவை மாநாட்டின் பின்னர் உ.த.ப. இயக்கத்தின் இந்தியக் கிளை புனரமைக்கப்பட்டது.

## உலகத் தமிழர் குரல் ஏடு - பிரச்சினைகள்

1980 இல் அமைந்த மொறிசியஸ் மாநாடு 1981 இல் நடந்த உ.த.ப. இயக்கத்தின் பேரவை மாநாடு இவற்றின் பின்னர் தலைவர் அவர்களுக்கும் பொதுச் செயலாளர் திரு. இரா. கனகரட்னம் அவர்களுக்கும் இடையில் தொடர்புறவுகளில் முரண்பாடுகள் வளர்ந்து வந்தன. பொதுச் செயலாளராகத் திரு.மு. மணிவெள்ளையன் அவர்கள் நியமிக்கப்பட்டு செயல்படத் துவங்கினார். இலங்கையில் நடந்துவந்த உள்நாட்டு இனக் கலவர பிரச்சினைகளால் 1980இல் இருந்து 1984 வரை உ.த. குரல் இதழ்கள் வெளியிட முடியவில்லை. 1985இல் டிசம்பரில் உ.த.ப. குரல் இதழ் ஒன்றை சேலம் மாநாட்டைச் சிறப்பித்து திரு.ஆ. சண்முகலிங்கம் பிரசுரித்து வெளியிட்டார். பின்னர் 1986 இல் வெளியீடு தடைப்பட்டது 1986 இல் மீண்டும் கல் அச்சில் 3 இதழ்கள் ஜனவரி பெப்ரவரி மார்ச் மாதங்களில் தொடர்ந்து வெளியிடப்பட்டன. இதே நிலையில் திரு. இரா. கனகரட்ணம் அவர்கள் உலகத் தமிழர் குரல் ஏட்டின் வெளியீட்டை தன்னிடம் கையளிக்கும் படி திரு.ஆ. சண்முகலிங்கம் அவர்களிடம் கோரினார். அப்போது இந்த ஏடு உ.த.ப. இயக்கத்தின் ஏடாக பிரசுரிக்கப்பட்டு வந்ததால் இந்த விடையத்தைத் தலைவர் திரு.இர.ந. வீரப்பன் அவர்களிடம் கேட்டுப் பெறும் வண்ணம் திரு. ஆ. சண்முகலிங்கம் கூறிவிட்டார். இந்த விடையம் தலைவர் திரு. இர. ந. வீரப்பன் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது அவர் இதனை அறிந்து உ... த. குரல் ஏட்டைத் திரு. இர. கனகரட்ணம் அவர்களிடம் தர முடியாதென்று கூறிவிட்டார். இதன் பின்னர் இருவரிடமும் கருத்து முரண்பாடுகள் வளர்ந்து வந்தன. திரு.இரா.கனகரட்ணம் அவர்கள் 1981க்குப் பின்னர் உ.த.ப. இயக்கத்தின் பணிகளைக் கைவிட்டு விலகிச்சென்று விட்டார்.

## சேலத்தில் உ.த.ப. இன் 3வது மாநாடு

1985ஆம் ஆண்டில் இலங்கைக் கிளையுடன் தொடர்பு கொண்டு 3ஆவது மாநாட்டை சேலத்தில் நடாத்தவுள்ள விடையத்தையும் அது தொடர்பான ஆலோசனைகளை வழங்கும் வண்ணம் திரு.ஆ. சண்முகலிங்கம் அவர்களிடம் தலைவர் திரு. இரா. .ந. வீரப்பன் கேட்டிருந்தார். பின்னர் திரு.ஆ. சண்முகலிங்கம் அவர்கள் இலங்கைக் கிளையை கூட்டி ஆலோசனை நடாத்தி மாநாட்டுக்கு ஒப்புதல் அளித்து ஆதரவு அளித்தார். பின்னர் மாநாடு சேலம் மாநகரில் நடாத்துவதற்கான பணிகளை சேலம் பிரமுகர்களும் தலைமையகத் தலைவரும் செய்யத் துவங்கினர். இந்தியக்கிளை மாநாட்டை நடாத்த சேலத்து உறுப்பினர்களுடன் சேர்ந்து பணிகள் செய்யப்பட்டு வந்தன. சேலத்தில் அறிஞர் திரு.சோலை இருசன் திரு. என். அந்தலானார் திரு. கே. ரங்கசாமி திரு.கே. இளந்திரையன் முருகன் பாலசுந்தரம் மற்றும் சேலம் எழுத்தாளர்கள், ஆர்வமுள்ள இளைஞர்கள் பலரும் இணைந்து செயலாற்றினார்கள் இந்த மாநாடு 1985ஆம் ஆண்டில் டிசம்பர் மாதத்தில் 3 நாட்கள் நடந்தது இந்த மாநாட்டுக்கு மொறிசியஸ் பிரமுகர் திரு. எ. புஸ்பரதம் மலேசியா திரு. இர. ந. வீரப்பன் திரு.எஸ். ராமன் நா. வி. பொன்னி மற்றும் இலங்கையிலிருந்து திரு. ஆ. சண்முகலிங்கம் திரு. இ. சற்குருநாதன் திரு. எஸ். செந்துராஜா ஆகியோரும் கடலூரிலிருந்து பேராசிரியர் திரு. கதிர்முத்தையன் பர்மாவிலிருந்து திரு. ரவிபாண்டியன் சென்னையிலிருந்து முல்லைவாணர் தஞ்சையிலிருந்து திரு. இரா. இரத்தினகிரியார் போன்றோரும் கலந்து கொண்டார்கள் மாநாடு சேலம் எழுத்தாளர்கள் சங்க மண்டபத்தில் நடை பெற்றது. மாநாட்டுக்கு சேலம் பிரபல டாக்டர் கோ. சூடாமணி சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு உரையாற்றினார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநாடு தலைவர் திரு. இர. .ந. வீரப்பன் அவர்களின் தலமையில் நடந்து மகாநாட்டில் பெரும் தொகையினரான சேலத்து மக்கள் கலந்து கொண்டார்கள் 2ம் நாள் விழாவில் பேராளர்களுக்கான வரவேற்புச்சிறப்பு நிகழ்ச்சிகள் நடந்தன. மாநாட்டில் இலங்கைப் பிரமுகர் திரு. எஸ். செந்துராசா சிறப்புரையாற்றிப் பாராட்டுப் பெற்றார். பேராளர்களுக்கான வரவேற்பு விழாவில் பேரசிரியர் திரு. க. அன்பழகன் மற்றும் மானிலங்களவை உறுப்பினர் திரு. கலிவரதன் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள் அந்த நிகழ்வில் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் இலங்கைப் பேராளர்களை மதிப்பளித்து அவர்களைப் பார்க்கும் போது சங்க காலத்து வீரர்களைக் காண்பதாகக் கூறிய போது கூட்டத்தில் கர ஒலி வானத்தை தொட்டது. சிறப்பம்சமாகும் வெளிநாட்டுப் பேராளர்கள் 40 பேர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். 3ம் நாள் உ.த.ப. இன் பேரவை மாநாடு மாலையில் சேலம் ஹைலான்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது தலைமயகத் தலைவராக திரு. இர. .ந. வீரப்பன் பொதுச் செயலாளராக திரு. மு. மணிவெள்ளையன் பொருளாளராக திரு. ப. கு. வெங்கடேசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மத்தியகுழுவில் திரு. பொன். பூலோகசிங்கம் திரு. ஆ. சண்முகலிங்கம் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

மாநாட்டின் பின்னர் பேராளர்கள் தத்தம் தாயகம் திரும்பினர். கிளைகளுடன் தொடர்புகள் வளர்ந்து வந்தன. தாய்க் கிளையாக இலங்கைக் கிளை விளங்கியதால் திரு.ஆ. சண்முகலிங்கம் அவர்களுடன் தலைவர் திரு.இர.ந. வீரப்பன் அவர்கள் ஒழுங்காக அஞ்சல் எழுதித் தொடர்புறவு கொண்டு வந்தார் இலங்கையின் பணிகளை புகழ்ந்தும் ஏனைய கிளைகளுக்கும் மடல்கள் வரைந்து வந்தார்.

## உ.த.ப. இன் நாலாவது உலக மாநாடு மலேசியாவில்

உ.த.ப. இயக்கத்தின் 4ஆவது உலக மாநாட்டை பல லட்சம் தமிழர்கள் வாழும் மலேசியாவில் நடாத்தத் தலைமையகத் தலைவர் திரு.இரா.ந. வீரப்பன் அவர்கள் தீர்மானித்தார். இது விடயம் இலங்கைக் கிளைக்கு அறிவிக்கப்பட்டது. இலங்கையிலிருந்து அந்த நேரத்தில் மலேசியா மாநாட்டுக்கு பேராளர் வருவது சாத்தியமில்லை என இலங்கைப் பிரமுகர் திரு.ஆ. சண்முகலிங்கம் தலைவருக்குத் தெரியப்படுத்தினார். காரணம் அதே காலத்தில் இலங்கை யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப்படையின் பிரசன்னம் மற்றும் போர் பிரச்சனைகளில் மாற்றங்கள் தோன்றி வந்தது அசாதாரணமான சூழ்நிலை நிலவி வந்தது.

இதனால் இந்த மாநாடு நடக்கும் நேரத்தில் இலங்கையில் உலக மாநாட்டையொட்டி சிறப்பு விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

மலேசியாவில் இந்த மாநாடு மலேசிய உ. த. ப. இயக்கக் கிளையின் உதவியுடன் தலைமையகத் தலைவரின் முயற்சியில் நடாத்தப் பணிகள் அமைந்து வந்தன மலேசியாவில் அழகிய நகரான கோலாலம்பூரில் உள்ள கிளான் மானிலத்தில் உள்ள மலேசியப் பல்கலைக் கழக வளாகத்தில் இந்த மாநாடு நடை பெற்றது மாநாட்டுக்கு மலேசியத் தலைவர்களான திரு.மு. மணிவெள்ளையன் ப. கு. சண்முகம் ப. கு. வெங்கடேசன் நா. வீ. பொன்னி மற்றும் பல பெரியார்கள் சிங்கப்பூர் அறிஞர் பலரும் தலைவர் திரு. இர.ந. வீரப்பனுடன் இணைந்து சிறப்பாகச் செயற்பட்டார்கள் உலக நாடுகளிலிருந்தும் சில பிரமுகர்கள் அறிஞர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். மாநாட்டை மலேசிய அமைச்சர் மாண்பு மிகுடத்தோ சு. சாமிவேலு அவர்கள் தொடக்கி வைத்தார் மாநாட்டில் ஆய்வு அரங்குகள் கலை நிகழ்ச்சிகள் நடை பெற்றன. மலேசிய தமிழ்க் கல்விக் கழகம், எழுத்தாளர் சங்கங்கள் போன்றவை மாநாட்டுக்கு சிறப்பான அனுசரணை வழங்கின. அங்கே உள்ள தமிழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளிதழ்களான தமிழ்நேசன், தமிழ் மலர் போன்றவை மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் தந்து செய்திகள் வெளியிட்டன.

மாநாட்டின் மூலம் திருக்குறள் வாழ்வியல் விடயங்கள் மலேசியாவில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் வேரூன்றி வளர வாய்ப்புக்கள் ஏற்படலாயின. தங்கள் சமயம் வாழ்வு யாவும் தமிழியம் என்ற திருக்குறள் கூறும் வாழ்வென்ற நிலைமை மலேசியாவில் வளர்ந்து வருவதைக் காணலாம். மலேசியாவில் 4ஆவது உ.த.ப. இன் உலக மாநாடு நடைபெற்ற போது இலங்கையில் யாழ்நகரில் உள்ள நல்லை ஆதினத்தில் சிறப்பு விழா ஒன்று திரு. பொன் பூலோகசிங்கம் தலைமையில் நடை பெற்றது இந்தச் சிறப்பு விழாவினை நல்லைக் குருமகா சந்நிதானம் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் ஆரம்பித்து வைத்தார். சிறப்பு விருந்தினராக புலவர் திரு. நா. சிவபாதசுந்தரனார் கலந்து கொண்டார் விழாவில் கிளையின் முக்கியமான பிரமுகர்களான திரு. ஆ. சண்முகலிங்கம் இ. சற்குருநாதன் திரு. இர. தவகோபால் சி. சி. வரதராஜா போன்றோர் உரையாற்றினார்கள். உலகத் தமிழர் குரல் சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

## அவுஸ்திரேலியாவில் உ.த.ப. இயக்கத்தின் ஐந்தாவது உலக மாநாடு

இந்த உலக மாநாடு 1991 இல் அவுஸ்திரேலியாவில் உள்ள சிட்ணி நகரில் தலைமையகமும் அவுஸ்திரேலிய நியூசிலாந்து கிளைகள் இரண்டும் இணைந்து நடாத்தின மாநாட்டுக்குப் பொறுப்பாக அவுஸ்திரேலியக் கிளைத் தலைவர் டாக்டர் திரு. என். சிறிஸ்கந்தராசா மற்றும் நியூசிலாந்து டாக்டர் மு. இராசநாதன் ஆகியோர் இருந்து செயற்பட்டார்கள். தலைவர் திரு. வீரப்பன் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் அவுஸ்திரேலிய நியூசிலாந்து தமிழ் அறிஞர்கள் மற்றும் உலக நாடுகளிலிருந்து பேராளர்கள் சிலரும் கலந்து கொண்டார்கள். மாநாட்டின் கருப்பொருள் "தமிழும் தென்துருவத் தமிழரும்" என்பதாகும் மாநாட்டில் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. இந்த மாநாட்டுக்கு இலங்கைப் பிரமுகர் திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்கள் அழைக்கப்பட்டிருந்த போதிலும் அவருக்கு மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் பொருத்தமான நுழைவாணைக்குரிய சான்றிதழ் வழங்காததால் அவர் மாநாட்டில் கலந்து கொள்ள முடியாமற் போனது.

மாநாட்டின் மூலம் அவுஸ்திரேலியா நியூசிலாந்தில் வாழும் தமிழ் பிள்ளைகளின் தமிழ்க் கல்விக்கான முயற்சிகள் மேற்கொள்ளும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அங்கே நடந்த மாநாட்டில் அமைந்த விபரங்களை அந்தநாட்டுக் கிளை இலங்கைக் கிளைக்கு அறிவிக்கத் தவறியதால் மாநாடு தொடர்பான செய்திகள் உலகத் தமிழர் குரல் ஏட்டில் பதிவாகவில்லை இப்படியான செயல்கள் கிளைகள் விடும் கவனக்குறைவும் தவறான நடைமுறையாக அமைந்து வருகின்றன.

## கனடாவில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் ஆறாவது மாநாடு

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் ஆறாவது உலக மாநாட்டை கனடாவில் நடத்த ஈழத்துப் பூராடனார் என்று அழைக்கப்படும் தமிழ்ப் பெரியார் செல்வராஜ் கோபாலிடம் தலைவர் வீரப்பனார் ஒப்படைத்தார். அவரும் டாக்டர் சிவலிங்கமும் இணைந்து ஒரு மாநாட்டுக் குழுவினை அமைத்தனர். அக்குழுவில் கனடாவில் வதியும் தமிழறிஞர்கள் சட்டத்தரணிகள், எழுத்தாளர்கள் இணைத்தனர். மக்கள் மத்தியில் பெரும் வரவேற்புக் காணப்பட்டது. ஆனால் இக்குழுவில் ஒரு சில மாதங்களுக்குள் பிளவு ஏற்பட்டது. குழுவில் பெரும்பாலானோர் டாக்டர் சிவலிங்கத்துடன் ஒத்துழைக்க மறுத்து விட்டனர். ஆனால் செல்வராசகோபால் டாக்டர் சிவலிகத்தை ஆதரித்தார். குழுவில் பெரும்பாலானோர் விலகினர். மாநாட்டுப்பணிகள் கைவிடப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் திரு. சி. செல்லையா அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தைக் கூட்டி, அதில் ஆறாவது மாநாடு கனடாவில் நடத்தப்பட வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்கான பணிகளை மேற்கொள்ள திரு. சி. செல்லையா தலைமையில் ஒரு சிறு குழுவும் தெரிவாகியது. சட்டத்தரணி திரு. மனுவேல் யேசுதாசன் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். இச் செயற்பாடுகளை தலைவர் வீரப்பனாருக்கு திர. செல்லையா தொலைபேசியில் அறிவித்தார். கனடாவில் ஒரு கிளை அமைத்து, சந்தாப் புணத்துடன் அனுப்பும்படி தலைவர் பணித்தார். அப்படியே குழுவின் விபரமும், சந்தாப் பணமும் அனுப்பப்பட்டது. டாக்டர் சிவலிங்கமும் ஒரு குழுவை அனப்பினார். திரு. செல்லையாவின் குழுவுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

கனடாக்கிளை உருவாக்கப்பட்டு, ஒன்றாறியோ அரசில் பதிவு செய்யப்பட்டு சட்டபூர்வமாக மாநாட்டு வேலைகள் தொடங்கப்பட்டன.

24 பேர் கொண்ட மாநாட்டுக் குழு திரு செல்லையா தலைமையில் அமைக்கப்பட்டு, மாநாட்டு வேலைகள் வேகமாக செயல்படத் தொடங்கின. மக்கள் நல்லாதரவு நல்கினர். ஆனால் அம்மாநாட்டை நடாத்துவதற்கு மேற்படி இரு பகுதினரும் ஆதரிக்கவில்லை. சிலர் மாநாட்டைக் குழப்புவதற்கான நடவடிக்கைகளிலும் இறகினர். ஆனல் அவர்களால் எதுவும் சாதிக்க முடியவில்லை.

1996 ஆகஸ்ட் 14, 15, 16 (ஆவணி) மாபெரும் ஊர்வலத்துடன், ரொறொன்ரோவில் புகழ் பெற்ற மண்டபமான ரொறொன்ரோ கொன்வென்சன் சென்ரறில் (Toronto Convention Centre) மாநாடு சிறப்பாக நடைபெற்றது. கண்காட்சியும் இடம் பெற்றது.

இம் மாநாட்டிற்கு பிரதம விருந்தினராக, அப்பொழுது தமிழ்நாட்டு அரசில் அமைச்சராக இருந்த காலஞ் சென்ற தமிழ்க்குடிமகன் அழைக்கப்பட்டு ஒப்புதலும் பெற்றிருந்தனர். ஆனால் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் ஒப்புதல் கிடைக்கவில்லையென மாநாட்டின் முதல் நாள் தமிழ்க்குடிமகன் தலைவர் செல்லையாவுக்கு தொலைபேசியில் அறிவித்து விட்டார். ஆகவே மாநாட்டில் கலந்து சிறப்பிக்க வருகைதந்த யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் க, சிவத்தம்பி பிரதம விருந்தினராகக் கௌரவிக்கப்பட்டார்.

இம் மாநாட்டைச் சிறப்பிக்க இந்தியாவிலிருந்து டாக்டர் சனார்த்தனன் டாக்டர் ராமதாசு. இளங்கீரன். பெருங்கவிக்கோ, வ. மு. சேதுராமன், டாக்டர் நிர்மா சுரேஷ், கலைஞர்கள் பிரபல திரைப்பட இயக்குனர் பாரதிராஜா, சங்கீத வித்துவான் கலைவாணர். மெல்லிசைப் பாடகர் தீபன் சக்கரவர்த்தி, குழுவினர், நாட்டிய மேதை ஜெயலட்சுமி, இலங்கையிலிருந்து பேராசிரியர் சிவத்தம்பி மற்றும் சிலரும், அமெரிக்காவிலிருந்து யாழன் சண்முகலிங்கமும் வருகை தந்தனர். இயக்கச் சார்பில் திருவாளாகள் கே. ரீ. கணேசலிங்கம், அலென் ஆனந்தன், ம. மனோகரன், தலைவர் இரா. ந. வீரப்பனார் கலந்து கொண்டனர்.

கனடாவிலிருந்து பல தமிழறிஞர்கள், கலைஞர்கள், பல்கலைக்கழக மாணவ மாணவிகள் இளைஞர்கள் யுவதிகள், பங்குபற்றி சிறப்பித்தனர்.

இம் மாநாடு சிறப்பிக்க உழைத்தவர்களில் காலஞ் சென்ற சௌந்தரராசனின் பெயர் கனடாக்கிளையின் வரலாற்றில் முக்கிய இடம் வகிக்கிறது. மற்றைய அங்கத்தினர் திரு. சபா நடேசன் கவிஞர், கந்நதவனம், புலவர் சிவானந்தன், ராஜ்குமார், செல்வா செல்லையா, விக்கினேஸ்வரன், திருமதிகள் யேசுதாசன், பிரபாகரன், செல்வி சாந்தி வேலுப்பிள்ளை, செகராசசிங்கம், தேவராஜா, சங்கரப்பிள்ளை, சிவசோதி, வேலுப்பிள்ளை, சிவனேசன், விக்கினேஸ்வரன், மாஸ்டர் மற்றும் சிலர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னையில் உ.த.ப. இயக்கத்தின் ஏழாவது உலக மாநாடு

ஆறாவது உலக மாநாடு கனடாவில் நடந்துமுடிந்த நிலையில் எதிர்காலத்தில் உ. த. ப. பணிகளை ஏழாவது மாநாட்டில் தெரிவாகும் தலைவரிடம் கையளிக்க வேண்டுமென்று தலைவர் திரு. இர. ந. வீரப்பன் அவர்கள் முடிவு செய்து தாயகக் கிளைக்கும் மற்றும் உலகக் கிளைகளுக்கும் அறிவித்து வந்தார். அவர் உ. த. ப. இன் பணியில் 25 ஆண்டுகள் சேவை செய்திருந்தார். தனக்கு உடல்நலக் குறைவாகி வருவதால் தான் தொடர்ந்து தலைவராக இருக்க முடியாதென்று கருத்து வெளியிட்ட அவர் தகுதியான ஒருவரை ஏழாவது உலக மாநாட்டில் தெரிவு செய்யும்படி கேட்டிருந்தார். திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்களை தலைமைப் பதவியை ஏற்கலாமென்றும் அஞ்சல் எழுதியிருந்தார். இலங்கையில் நிலவி வரும் குழப்பமான சூழ்நிலையில் வசதிக்குறைவுகள் காரணமாக அவர் தலைமைப் பதவியை ஏற்க விரும்பவில்லை. இதனால் ஏழாவது உலக மாநாட்டில் உ. த. ப. இயக்கத்துக்கு புதிய தலைவர் நியமிக்க வேண்டிய நிலைமை தோன்றியது.

கனடா மாநாட்டில் தீர்மானித்தபடி 7ஆவது உலக மாநாட்டைச் சென்னையில் நடாத்த தலைவர் திரு. இரா. ந. வீரப்பன் அவர்கள் அலுவல்களை ஆரம்பித்தார். இது தொடர்பான உ.த.ப. இன் முக்கிய பிரமுகர்களான திரு.ஆ.சண்முகலிங்கம் திரு. K. T. கணேசலிங்கம் திரு. S. செல்லையா (கனடா கிளைத் தலைவர்) டாக்டர் திரு. M. இராசநாதன் பேராசிரியர் கதிர் முத்தையன் திரு. M A. ரஹ்மான் திரு. அலன் ஆனந்தன் திரு. S. அந்தலனார் திரு. S மாரிமுத்து (பர்மா) திரு. வீரமதுரகவி போன்றோர்க்கும் வேறு சில பிரமுகர்களுக்கும் அஞ்சல்கள் எழுதி வந்தார். பின்னர் தலைவர் இந்த மாநாடு ஆரம்பமாவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாகத் தனது புதல்வியார் திருமதி பொன்னி கணேசன் அவர்களுடன் சென்னை வந்து உ.த.ப. இயக்கத்தின் மாநாட்டுப் பணிகளில் ஈடுபட்டு வந்தார் அங்கே திரு. M. A. ரஹ்மான் அவர்களிடம் சில பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டன. திரு. எஸ். தங்கன் என்ற தமிழ் ஆர்வலரும் இந்த மாநாட்டு விடயங்களில் தலைவருக்கு உதவியாக இருந்து செயல்பட்டு வந்தார். இந்த நிலையில் தலைவருக்கு மாநாடு நடாத்துவதற்கான போதுமான நிதி கிடைக்காததால் சிரமங்களுக்குள்ளானார். மாநாடு சென்னையில் தியாகராஜர் நகரில் உள்ள திருமண மண்டபம் ஒன்றில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டது. 1999 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் 28, 29., 30 ஆம் நாட்களில் மாநாட்டு நிகழ்வுகள் அமைந்தன. மாநாட்டுக்கு உலக நாடுகளிலிருந்து பல பேராளர்கள் வருகை தந்தார்கள். பர்மாவிலிருந்து திரு. R. மாரிமுத்து தலைமையில் 06 பேர்வந்திருந்தனர். பிரான்சிலிருந்து திரு. அலன் ஆனந்தன் இலங்கையிலிருந்து திரு. ஆ. சண்முகலிங்கம் கனடாவிலிருந்து கனடாத் தலைவர் திரு. சி. செல்லையா, திருமதி செல்லையா சென்னையிலிருந்து திரு. எஸ். அந்தலனார் பேராசிரியர் திரு. கதிர்முத்தையன், திரு. தங்கன், மலேசியாவிலிருந்து தலைவரும், புதல்வியார் மற்றும் சில பேராளர்களும் வருகை தந்தார்கள். பொதுச் செயலாளர்களாக இருந்த திரு.. K. T. கணேசலிங்கம், நுழைவானை (வீசா) கிடைக்காததால் மாநாட்டுக்கு வரவில்லை. முதல் நாள் மாநாட்டின் நிகழ்வாக பள்ளிச்சிறார்களின் செஞ்சீருடை அணிநடையுடன் பேராளர்கள் அழைத்து வரப்பட்டு மாநாடு கோலாகலமாக ஆரம்பமானது. இம் மாநாட்டில் கலந்து கொண்ட மக்கள் குறைவாகவே காணப்பட்டனர்.

தமிழ் ஆர்வலரான டாக்டர் வேலாயுதப்பிள்ளை அவர்கள் பள்ளிச்சிற்றார்களின் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார். மாநாட்டில் சொற்பொழிவுகள் கருத்தரங்குகள் ஆய்வுக்கட்டுரை வாசிக்கும் நிகழ்ச்சிகள் கலை நிகழ்ச்சிகள் போன்றவை இடம் பெற்றன. மாநாட்டிற்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்ட பி. நெடுமாறன் அவர்களால் பிரேரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட நாலு அம்சத் திட்டம் பினவருமாறு உலகத்தமிழினத்தை ஒன்றுபடுத்த தமிழருக்கென்று ஒரு கொடி, தமிழுக்கு ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதம், தமிழருக்கு உடை, தமிழர் உலகளாவிய வங்கி இவை எட்டாவது மாநாட்டில் செயல்முறைப் படுத்தப்படுவதென தீர்மானிக்கப்பட்டது. 02 ஆம் நாள் மாநாட்டிலும் - கருத்துரைகள், கவியரங்கம், கலை நிகழ்ச்சிகள் நடை பெற்றன. இரண்டாம் நாள் மாநாட்டில் அன்று தலைவர் திரு. இர. ந. வீரப்பனார் அவர்கள் திடீரென நோயுற்றதால் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். அவர்களின் புதல்வியார் பொன்னி அங்கே அவருடனிருந்து கவனித்து வந்தார். அன்பர் திரு. தங்கன் அவர்கள் தலைவருக்கு ஆக வேண்டிய உதவிகளைச் செய்து கொண்டிருந்தார் 02 ஆம் நாள் மாநாட்டுக்கு நிகழ்வுகள் அரங்குகளின் தலைவர்களின் கீழ் நடைபெற்றுச் சிறப்பாக நிறைவுற்றன. திரு. ஆ. சண்முகலிங்கம், திரு. என். தங்கன் இருவரும் மாநாட்டுப் பேராளர்களுக்கான விருதுகள், சான்றிதழ்கள் ஒழுங்கு செய்யும் அலுவல்களைச் செய்து வந்தனர். 2 ஆம் நாள் மாநாட்டில் பிற்பகலில் பேராளர்களுக்கு விருதுகள் வழங்கும் நிகழ்வுகள் வண்ணமிகு சிறப்புடன் நடைபெற்றன. இதற்கு திரு. அலன் ஆனந்தன் பேராசிரியர் கதிர் முத்தையன், திரு. எஸ். அந்தலனார் ஆகியோர் இணைந்து நிகழ்ச்சிகளை நடாத்தினார்கள் பேராளர்களுக்கு விருதுகளும், நூல்களும் பரிசுகளும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்களுக்கு - தமிழ்ப்பணிச் செல்வர் என்ற பட்டமும் திரு. சி. செல்லையா அவர்களுக்குத் தமிழ்ச் செம்மல் பட்டமும் வழங்கப்பட்டன. மூன்றாம் நாள் மாநாடு பேரவை மாநாடாக அமைந்தது. மாலையில் இந்த நிகழ்ச்சி ரோகிணி விடுதியில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்குத் தலைவர் திரு. வீரப்பன் சிறிது குணமடைந்த நிலையில் வந்து சேர்ந்து தலைமை தாங்கிச் சிறப்பித்தார் அவர் தனதுரையில் ஏலவே அறிவித்தபடி தான் தலைமைப் பதவியைத் துறப்பதாகவும் தனக்கு உடல் நலக் குறைவென்றும் புதிய தலைவரை நியமிக்கும் படியும் கேட்டுக் கொண்டார். அங்கே பல நாட்டு பேராளர்களும் சிற்றுரையாற்றினார்கள். மத்திய குழு - புதிய தலைமைக்குழு தெரிவில் சில வாதப் பிரதிவாதங்களும் இடம் பெற்றன. இறுதியில் ஒற்றுமை நிலவியது. தலைவராக திரு. எஸ். செல்லையா (கனடா) அவர்கள் தெரிவு செய்யப்பட்டு விட்டார். பொதுச் செயலாளர் திரு. கே. ரி. கணேசலிங்கம் - மாநாட்டுக்கு வராத நிலையிலும் திரு. அலன் ஆனந்தன் , திரு. ஆ. சண்முகலிங்கம் இருவரின் ஆதரவுடன் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். மத்திய குழுவில் துணைச் செயலாளராக திரு. ஆ . சண்முகலிங்கம் தெரிவு செய்யப்பட்டார். உலகளாவிய கிளைகளில் உள்ளவர்கள் சிலர் மத்திய குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். அடுத்த 08 ஆவது உலக மாநாட்டைத் தென் ஆபிரிக்காவில் நடாத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

## வீரப்பனார் அவர்களின் திடீர் மறைவுத் துயரம்

03 ஆம் நாள் பேரவை முடிந்த அன்று இரவே பேராளர்களுடன் விடை பெற்றுக் கொண்டு பேராசிரியர் திரு. இர .ந. வீரப்பனார் தனது புதல்வியாருடன் பாண்டிச்சேரி நோக்கிப் புறப்பட்டுச் சென்றார். இவர் பாண்டிச் சேரியை அடைந்த நேரத்தில் மீண்டும் நோய்வாய்ப்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். அங்கே சிகிச்சைகள் பலனளிக்காத நிலையில் திரு. இர. ந. வீரப்பனார் அமரராகி விட்டார். இந்தத் துயரச் செய்தி எல்லாரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது. உலகம் முழுவதும் ஊடகங்கள் - பத்திரிகைகள் இவரின் மறைவையிட்டு மதிப்பளித்துச் செய்திகள் வெளியிட்டு வந்தன. அவரின் துக்க நிகழ்வு பாண்டிச் சேரியில் நடந்தது. இதில் பல்துறை சார்ந்த பெரியார்கள் அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டார்கள். பின்னர் அவரின் பூதவுடல் தாயகமான மலேசியாவில் கிள்ளானுக்கு (கெலாங்) விமான மூலம் எடுத்துச் செல்லப்பட்டது. அங்கே இறுதி அஞ்சலி நிகழ்வுகள் அவரின் குடும்பச் சூழலில் நடை பெற்றது. பூதவுடல் மக்களின் இறுதி மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது. இவரது மறைவு தமிழுக்கும், தமிழ் உலகுக்கும் - அவர் சார்ந்திருந்த உ.த.ப. இயக்கத்திற்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகி விட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மாமணி பேராசிரியர் திரு. இர. ந. வீரப்பனார் அவர்களின் முக்கியமான விபரங்கள்

இலங்கையில் 1930 ஆம் ஆண்டில் பிறந்த இந்தப் பெரியார் குழந்தையாக இருந்த போது தமிழ் நாட்டுக்குச் எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் பெற்றோருடன் மலேசியாவில் குடியேறினார். அங்கே வளர்ந்து வந்து வாழ்வியலை இயற்றி வந்தார் தமிழ், ஆங்கிலம், மலாய், மொழிகளைக் கற்று தேர்ந்தார். தமிழ் மொழியில் அடங்காப் பற்று மிக்கவராய் வாழ்ந்தவர். தமிழ் ஆசிரியராகப் பணி செய்து ஓய்வு பெற்றவர். தமிழ் மொழி, இலக்கிய வரலாற்று விடயங்களை ஆராய்ந்து கற்றுத் தேர்ந்தவர். பல்துறை சார்ந்த அறிவைத் தேடிக்கொண்ட பெருமைக்குரியவர். ஈழத் தமிழரின் உரிமை வாழ்வியலில் மிகுந்த அக்கறை உள்ளவராகத் திகழ்ந்தவர் இவர் 150க்கு மேற்பட்ட நூல்களை ஆக்கி வெளியிட்டு தமிழுக்கு அணி செய்தவர். தமிழர் பற்றிய விபரம் கொண்ட உலகத் தமிழர் நூல் 03 பாகங்கள் வெளியிட்டிருக்கிறார். இதற்குத் தஞ்சைப் பல்கலைக் கழகம் பரிசில் வழங்கியது.

உலகம் முழுவதும் தமிழ் பரவ வேண்டும் தமிழை மறந்த தமிழர்கள் மீண்டும் தமிழைப் படிக்க வேண்டும் அறிய வேண்டும். உலகளாவிய ரீதியில் தமிழர்களிடையே ஒற்றுமை, நட்புறவு, தொடர்புறவு தோன்ற வேண்டும் அதற்காக உ.த.ப. இயக்கம் பணியாற்ற வேண்டும் என்ற ஆரம்பத்தில் இந்த பெருந்தகை வாழ்ந்த செய்தி வரலாற்று உண்மையாக உலகில் நிலவி வரும். நேர்மைக்குணம், நிதானமான போக்கு, நட்புறவில் பழகும் தன்மை போன்ற குணவியல்புகளை கொண்ட செயல் வீரராகத் திகழ்ந்தவர் என்பதை இவரின் 25 ஆண்டு காலப் பணிகளில் காண முடிந்தது. இதனால் வெள்ளிவிழாத் தலைவர் என்றும், பாராட்டப்பட்டவர். இவரின் மறைவுக்குப் பின்னர் உ. த. ப இயக்கத்தின் எங்கோ மூலையில் செயல்படாதிருந்த சிலர் தங்களையும் செயல் வீரராகக் காட்டிக் கொள்வதை யார்தான் ஏற்றுக் கொள்ள முடியும்? அமரர் அவர்கள் விட்டுச் சென்ற அருந்தொண்டுப் பணிகளை தமிழ் ஆர்வலர்கள் முன்னெடுத்து வளர்த்து வரவேண்டும். அவை வரலாற்றுத் தொண்டுப் பணிகளாகி விளங்கி நன்மை செய்து நிலவி வரும் என்பது நிச்சயமானது.



திரு. இறிஸ் கிஸ்ரன்

அமரர் வீரப்பனார் அவர்களின் சமூக சேவை கல்வித் திறமைகள், தொண்டுப் பணிகள் போன்றவற்றுக்காக பேராசிரியர், டாக்டர் போன்ற பட்டங்கள் வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டவர். இவரின் தமிழ்ப்பணிக்கான உலகப் பயணங்களைப் பாராட்டி இலங்கைத் தலைவரும் உலககத் தமிழர் குரல் ஆசிரியருமாகிய திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்கள் இவருக்கு உலகம் சுற்றும் தமிழர் என்ற பட்டத்தை 1986ல் வழங்கியிருந்தார். இவரின் வாழ்வும் தமிழ், தமிழ் உறவு போன்றவற்றுக்கான பங்கும், பணிகளும் ஈடு செய்ய முடியாதவையாகும். இவரின் தமிழர் சமுதாய முன்னேற்றத்துக்கான தொண்டுப் பணிகள் நிலவுலகில் தமிழ் உள்ளவரை வரலாற்றில் நிற்கும் என்றால் மிகையாகாது.



திரு. எம் வி. இராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் ஆபிரிக்காவில் உ.த.ப. இயக்கத்தின் எட்டாவது உலக மாநாடு

அமரராகி விட்ட திரு. இர. ந. வீரப்பனாருக்குப் பின்னர் புதிய தலைவராக நியமிக்கப்பட்ட திரு. சி. செல்லையா அவர்கள் சிறந்த பண்பாளர். நேர்மை. நியாயம், நிதானம் ஆகியவை அவரின் செயல்களில் விளங்கி வருவதைக் காணலாம். சிறந்த கல்விமானாக விளங்கும் இவர் நல்ல சமூக சேவையாளர். மலேசியாவில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் பதிவு செய்யப்படாததால் பல்கலாச்சார நாடாகிய கனடாவில் பதிவாகி சட்டபூர்வமாகி இயங்கி வருகிறது. இவரின் தலைமையில் உ. த. ப. இன் செயற்பாடுகள் ஆரம்பித்து வந்தன. இவர் வாழும் கனடா நாட்டில் ஸ்கார்ப்பரோ மானிலத்தில் தலைமையகத்தை அமைத்துள்ளார். உ. த. ப. கிளைகளுக்கும் பொதுச் செயலாளருக்கும் அடிக்கடி அஞ்சல்கள் எழுதிக் கொண்டிருப்பார். தொலை பேசியியலும் தொடர்பு கொள்வார். திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்களுடன் ஆலோசனை கலந்தும் பணிப்புரைகளையும் செயற்படுத்தும்படி கூறி வருகிறார். இந்த நிலையில் ஏலவே தீரமானிக்கப்பட்டபடி 08வது உலக மகாநாட்டை 7 லட்சம் தமிழர்கள் வாழும் தென்னாபிரிக்காவில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தார். தென் ஆபிரிக்காவில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் கிளை இயங்காததால் தென் ஆபிரிக்கத் தமிழர் கூட்டமைப்புடன் தொடர்பு கொண்டு தனது செலவில் தென்னாபிரிக்கா சென்று அவர்களின் ஆதரவில் எட்டாவது மாநாட்டை, நடத்துவதற்கான ஒழுங்குகளை டாக்டர் கோவிந்தசாமியின் உதவியுடன் மேற்கொண்டார். பின்னர் 2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 8வது உலக மகாநாடு நடந்தது. இந்த மாநாட்டுக்கு தென்னாபிரிக்கா கூட்டிணைப்புக் கழகத்தின் தலைவர் திரு. மிக்கி செட்டி உதவியாக இருந்து செயல்பட்டார். மாநாட்டுக்குழு பெரியதொரு மாநாட்டு மண்டபத்தில் (Coast Land Hall டேர்பன்) நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மாநாட்டில் 600 பேராளர்கள் கலந்து கொண்டார்கள்.

மாநாட்டை திரு. மிக்கி செட்டி அவர்கள் தொடக்கி வைத்து உரையாற்றினார். பின்னர் அகிலத் தலைவர் திரு. சீ. செல்லையா அவர்கள் தலைமை தாங்கி நடாத்தினார். மாநாட்டின் நிகழ்ச்சிகள் ஆங்கிலத்திலே தான் நடந்தன. காரணம் அங்கே வந்த பேராளர்கள் தமிழ் மொழி விளங்கிக் கொள்ள முடியாதவர்களாக இருந்தார்கள் மாநாட்டு நிகழ்வுகள் இரண்டு நாட்கள் நடந்தன. மாநாட்டில் தென்னாபிரிக்காவின் தமிழ்ப் பிள்ளைகள் தமிழ் கற்பதற்கான திட்டம் ஒன்று கையளிக்கப்பட்டது. மாநாட்டில் கலந்து கொண்ட முக்கியமானவர்கள் அகிலத் தலைவர் திரு. எஸ். செல்லையா திருமதி செல்லையா, பொதுச்செயலாளர் திரு. K. T. கணேசலிங்கம், திரு. S. தியாகலிங்கம் (நோர்வே) திரு. மணிவெள்ளையன் (மலேசியா) திரு. S. கமலநாதன் (ஜேர்மனி) திரு. இர. ஜெனார்த்தனம் (இந்தியா) பெருங்கவிக்கோ சேதுராமன் பிரபல கனடா நாட்டுச் சிவாச்சாரியார், தியாகராசாக் குருக்கள், திரு. நடா ராஜ்குமார். (கனடா), திரு. வா. மு. சேதுராமன் கோவிந்தசாமி, திரு. கிரிஸ் கிஸ்ரன், திருமதி நாயுடு, திரு. நா. மூட்லி, செல்வி அ. மூட்லி திரு. மு. அன்பன், திரு. நாயுடு, திரு G. பிள்ளை போன்ற தென்னாபிரிக்காப் பெரியார்களும் கலந்து கொண்டார்கள். மாநாட்டின் பின்னர் மத்திய குழு கூடி புதிய செயற்குழுவை தெரிவு செய்தது.

அகிலத்தலைவர்:- திரு. சி. செல்லையா, பொதுச் செயலாளர்:- தி. கே. ரீ. கணேசலிங்கம் , செயலாளர்:- ஆ. சண்முகலிங்கம், பொருளாளர்:- ஆ. வேலுப்பிள்ளை, துணைத் தலைவர்களில் ஒருவராக திரு. வா. மு. சேதுராமன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். அவர் உ. த. ப. இயக்கத்தின் உறுப்பினராக இல்லாத காரணத்தால் அவரின் நியமனம் சில மாதங்களின் பின்னர் நீக்கப்பட்டது. நாடுகள் தோறும் கிளைகளின் பிரமுகர்கள் மத்தியகுழு உறுப்பினர்களாக நியமிக்கபட்டனர்.

மாநாட்டில் புதிய மத்திய குழு நியமிக்கப்பட்டது. பழைய தலைமைக் குழுவே மீண்டும் தெரிவு செய்யப்பட்டது. பொருளாளராகத் திரு. ஆ. வேலுப்பிள்ளை நியமிக்கப்பட்டார். பெருங்கவிக்கோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா. மு. சேதுராமன் துணைத்தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். இதில் பெருந் தவறு நடந்துவிட்டது. காரணம் அவர் அப்பொழுது இயக்கத்தில் அங்கத்தவராக இல்லை. அத்துடன் அவர் பன்னாட்டுத் தமிழ் உறவு மன்றத்தின் இயக்குனர். ஆகவே தமிழ்நாட்டில் உ. த. ப. இயக்கத்தை அவரால் வளர்க்க முடியாது. இலங்கை திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்களுக்குத் துணைச் செயலாளர் பதவி வழங்கப்பட்டது. மாநாட்டில் மலர் ஒன்று வெளியிடப்பட்டது. இது ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அடுத்த மாநாட்டை இலங்கை யாழ்ப்பாணத்தில் 2003இல் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. தென்னாபிரிக்காவில் முதல் முதல் நடந்த உலகத் தமிழ் மாநாடாக இது விளங்கியது. இம் மாநாட்டின் பின் தென்னாபிரிக்க தமிழர்களிடையே தமிழ் உணர்வு காணப்படுகிறது. தற்பொழுது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கக் கிளை திரு. கிறிஸ் கிஸ்ரன் தலைமையில் வேகமாக வளர்ந்து வருகின்றது.

## தலைமையகக்கிளை - தலைவர் நா. சி. கமலநாதன் (ஜேர்மனி) பொதுச் செயலாளர் பிரச்சினை தோன்றல்

தென்னாபிரிக்காவில் 8வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு நடந்த பின்னர் உ.த.ப. இயக்கத்தின் 9ஆவது உலக மகாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கான செயல்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்காக பொதுச் செயலாளர் திரு. K. T. கணேசலிங்கம் ஜேர்மனியில் இருந்து இருதடவைகள் யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்றார். அகிலத் தலைவரும் 2003இல் வருகை தந்தார். மாநாட்டுக்கான பணிகளை இலங்கைக் கிளையும், அதன் தலைவரும் மேற்கொண்டு வந்தனர். மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதில் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் எழுந்தன. இதன் காரணமாக மாநாடு அந்தமான் மாநிலத்தில் நடாத்துவதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. 2003 இல் தலைமையகத் தலைவர் திரு. சி. செல்லையா அவர்களுக்கும் நா. சி. கமலநாதன் பொதுச் செயலாளர் திரு. கே. ரி. கணேசலிங்கம் இவர்களுக்கிடையில், தலைவர் உருவாக்கிய இந்தியக் கிளை காரணமாக கருத்து முரண்பாடுகள் வளர்ந்து வந்தன. இந்த முரண்பாடுகள் இவர்களின் வாதப் பிரதிவாத விடையங்கள் இலங்கைக் கிளைத் தலைவருக்கு அறிவிக்கப்பட்டு வந்தன.



திரு. ஏ. எஸ். கிருஷ்ணமூர்த்தி

இந்த நிலையில் 29.01.2003 இல் ஜேர்மனியில் நடைபெற்ற எழுச்சி மாநாடொன்றின் பின் பேரவை கூட்டமொன்றை பொதுச் செயலாளர் திரு. கே. ரி. கணேசலிங்கம் அவர்கள் கூட்டினார். அதில் உ.த.ப. இயக்கத்துக்கு புதிய யாப்பையும் சமர்ப்பித்தார். எழுச்சி விழாவிற்கு பங்குபற்ற வந்த இந்தியக் கிளைத் தலைவர் ஏ. எஸ். கிருஷ்ணமூர்த்தியை கலந்து கொள்ள வர வேண்டாமென்று அறிவித்த காரணத்தால் அகிலத் தலைவர் பேரவைக் கூட்டத்திற்கு போகவில்லை. பேரவை மாநாட்டில் தாங்கள் நினைத்த போக்கில் தீர்மானங்கள், முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் தலைவரை உ.த.ப. இயக்கத்திலிருந்து நீக்குவதற்கு முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக உ.த.ப. இயக்கத்தின் தலைமைப் பொறுப்புத் தொடர்பான பிரச்சினைகள் வளர்ந்து சிக்கலாகி வந்தன. கனடாவில் தலைமையகமாகக் கொண்ட அமைப்பாக உ.த.ப. அமைப்பு கனடா நாட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது. வேறு எந்த நாட்டிலும் தலைமையகத்திற்குப் பதிவில்லை. இந்த நிலையில் இயக்கத்தின் மூத்த பிரமுகரான திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்களிடம் இருபகுதியினரும் முடிவைக் கேட்டனர். இந்த நிலையில் திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்களிடம் - பொதுச் செயலாளரின் நடவடிக்கை இயக்கத்தின் விதிமுறைக்கு மாறானவை என்று கூறிப் பெரியதொரு அறிக்கையை -


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிளைகளுக்கும் அகிலத் தலைவர்களுக்கும் பொதுச் செயலாளருக்கும் அனுப்பி வைத்தார். இதனைப் பொதுச் செயலாளர் திரு. கே. ரி. கணேசலிங்கம் ஏற்கவில்லை. இதனால் உ.த.ப. இயக்கம் இரண்டாகப் பிரிய நேரிட்டது.

## புதுவையில் உ.த.ப. இன் ஒன்பதாவது உலக மாநாடு

உ.த.ப. அமைப்பின் ஒன்பதாவது உலக மாநாடு தமிழ் பிறந்து நிலவும் யாழ்ப்பாணத்தில் நடாத்துவதென்று 2002 ல் தீர்மனிக்கப்பட்டது இதற்காக அகிலத் தலைவர் திரு. எஸ் செல்லையா அவர்களும் பொதுச் செயலாளர் அவர்களும் திரு. கே. ரீ. கணேசலிங்கம் அவர்களும் 2003இல் இலங்கை வந்த போது முயற்சி மேற்கொண்டார்கள். இலங்கைக் கிளையும் தலைவர் திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்களும் இது தொடர்பான ஆகவேண்டிய முயற்சிகளில் ஈடுபட்டு வந்தனர். யாழ்ப்பாணத்தில் இந்த மாநாட்டை நடாத்துவதற்காக பாதுகாப்பில்லையென்ற காரணங்களினால் மாநாடு இங்கே நடைபெறவில்லை. பின்னர் இந்த மாநாட்டை புதுச்சேரியில் நடாத்தத் தலைமையகம் - தீர்மானித்தது இதற்கான பணிகளை புதுவையில் உள்ள உ.த.ப. இன் ஆர்வலர்களும் இந்தியக் கிளையும் செய்து வந்தன. மாநாட்டுக்கு ஒரு மாதத்திற்கு முன்னரே - புதுவைக்கு அகிலத்தலைவர் வந்து பணிகளில் ஈடுபட்டார். மாநாடு புதுவையில் உள்ள ஆந்திரசபா மண்டபத்தில் 2004ஆம் ஆண்டில் ஆடியில் 10. 11. 12 ஆம் திகதியில் நடாத்தப்பட்டது. மாநட்டுக்குச் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை முன்னாள் அமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு.பெ. சந்திரசேகரன் அவர்களும் புதுவைக் கல்வி அமைச்சர் மாண்புமிகு லட்சுமி நாராயணன் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள். பல நாடுகளிலிருந்தும் பேராளர்கள் வந்து கலந்து கொண்டார்கள். மாநாட்டில் உலகத் தமிழர் கொடி ஏற்றல் நிகழ்வுடன் தமிழ் பண்பாட்டு கீதங்களும் இசைக்கப்பட்டன மாநாட்டில் பல அரங்குகளில் பல அறிஞர்கள் தலைமையில் கருத்தரங்குகள், கவி அரங்குகள் நடந்தன. மாநாட்டு நிகழ்வுகளுக்கு அகிலத் தலைவர் திரு. சி. செல்லையா அவர்கள் தலைமை ஏற்று நடாத்தினார். கலை நிகழ்ச்சிகளும் நடந்தன. மாநாட்டுச் சிறப்பு மலரை - இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் பெரியார் திரு. பெ. சந்திரசேகரன் அவர்கள் வெளியிட்டு வைத்தார். மாநாட்டில் கலந்துகொண்ட பேராளர்கள் விபரம் திரு. சி. செல்லையா, திருமதி. சிவா செல்லையா, திரு. எஸ். கொராசசிங்கம், திரு. விக்ரர்பிகுராடோ, திரு. எ. இராமன் (கனடா) திரு. சுப. கரிகால் வளவன் திரு. எஸ். போஜராஜா (அந்தமான்), திரு. ஆ. சண்முகலிங்கம், திரு. சி. வ. ஆறுமுகசாமி, பேராசிரியர்கள் திருமதி நாச்சியார் செல்வ நாயகம், திருமதி கலைவாணி இராமநாதன் (இலங்கை) திரு. கிரிஸ்கிஸ்ரன், செல்வி அனுசியா மூட்லி, திருமதி. அஞ்சலை நாயுடு, (தென் ஆபிரிக்கா) திரு. எ. எஸ். கிருஸ்ணமூர்த்தி தென்கச்சி கோ. சாமிநாதன் திரு எ. சிவசு, டாக்டர் திரு. எ. தாயப்பன் (சென்னை) புதுவை அறிஞர்களில் திரு எஸ் திருமுகன், திரு. வை. நாராயணசாமி, திரு பி. ஜெயபாலன், திரு. எஸ். பத்மநாபன் எழுத்தாளர் திரு. மாலன் புதுவை பல்லைக்கழக துணை வேந்தர், கவிஞர் திரு. மன்னர்மன்னன், கவிஞர் திரு. நாகப்பா, பேராசிரியர் மணவை முஸ்தபா இன்னும் பலரும் கலந்து சிறப்பித்தார்கள் 03ஆம் நாள் பேரவை மாநாடு நடந்தது இதில் புதிய தலைமை மத்தியகுழு தெரிவுசெய்யப்பட்டது. அகிலத்தலைவர் திரு. சி. செல்லையா பொதுச் செயலாளர் திரு. ஆ. சண்முகலிங்கம் பொருளாளர் திரு. ந. நந்தகுமார் துணைத்தலைவர்களாக திரு. எஸ் செகராசசிங்கம், திரு. கிறிஸ்கிஸ்ரன், துனைச் செயலாளர் திரு. எ. சிவசு, உலகளாவிய கிளைகளின் பிரமுகர்கள் மத்திய குழுவில் இடம் பெற்றனர் அடுத்த உலக மாநாடு அந்தமான் நாட்டில் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டது.

## உ.த.ப. அமைப்பின் புகழ் பெற்ற கிளைகள்

இந்த அமைப்பில் சிறப்பான பணிகளை பல ஆண்டுகளாக மலேசியாவிலிருந்த தலைமையகக் கிளை, மலேசியாக் கிளை, தாய்க்கிளையாக விளங்கி வரும் இலங்கைக் கிளை, புதுவைக் கிளை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தமான் கிளை போன்ற கிளைகள் செய்து வந்திருக்கின்றன. இன்றும் செய்து வருகின்றன. பர்மா, இந்தோனேசியா, தென்னாபிரிக்கா போன்றவை பழைமையானவையாக இருந்தும் அவற்றின் செயற்பாடுகள் பல தலைமையகத்திற்கும் தாய்க் கிளைக்கும் காலந்தோறும் கிடைக்கவில்லை. மேலும் 1993க்கு பின்னர் அமைக்கப்பட்ட ஐரோப்பிய நாட்டுக் கிளைகளின் பணிகள் வித்தியாசமான போக்கில் அமைந்து வந்தன அவை பெரும்பாலும் தாய்க்கிளையின் தொடர்புறவில் பெரிதாகக் கவனம் செலுத்தவில்லை. அவை இந்திய அறிஞர்களையும் அரசியல் வாதிகளையும் கலைஞர்களையும் அழைப்பதில் அதிகமான அக்கறை கொண்டு விழாக்கள் நடாத்தி வந்திருக்கினறன. 1993 இல் இருந்து இயக்கத்தின் உலகத் தலைவராக இருந்து வந்த திரு. இர. ந. வீரப்பனார் அவர்கள் இந்தக் கிளைகள் வரவேற்பு வழங்கி பல முறை உதவி செய்திருக்கின்றன. மேலும் ஜேர்மனியில் 1993 இன் பின்னர் 1996ல் இருந்து அமைப்பின் பொதுச் செயலாளராக 2002 வரை செயல்பட்டு வந்த திரு. கே. ரி. கணேசலிங்கம் அவர்கள் ஜேர்மனிக் கிளையின்மூலம் புலம் பெயர்ந்தோருக்கான கல்விப்பணிக்கான தமிழ் மணி குறள் மணி பட்டப்படிப்புத் திட்டத்தினை ஐரோப்பாவில் செயல்படுத்தி வருகின்றமை சிறப்பானதொரு பணியாக இருந்து வருகின்றது. இதற்கு மலேசியப் பிரமுகர் திரு. மு. மணிவெள்ளையன் மற்றும் சென்னை தமிழ் மாணவர் மன்றம் போன்றவை ஆதரவு வழங்கி வருவதாக அறியமுடிகின்றது. ஐரோப்பாவில் பிரான்ஸ் கிளை, டென்மார்க் கிளை, சுவிஸ் கிளை, நோர்வே கிளை, போன்றவையும். அங்கே தமிழ்ப் பணி செய்வதை அறிய முடிகின்றது. ஆயினும் தாயகக் கிளையுடன் தொடர்புறவு இன்மையால் இவர்கள் செய்யும் நற் பணிகள் பற்றிய விபரங்கள் தாயக மக்களுக்கு கிடைப்பதில்லை. என்பது பெரிய குறைபாடாகும். கனடாக் கிளை வருடம் தோறும் பிள்ளைகள் மத்தியில் திருக்குறள் பொட்டிகளும், பரிசளிப்பு விழாக்களும், மாநாடுகளும் நடாத்தி வருகின்றது. மொறிசியஸ் கிளை 1980 இல் நடந்த உலக மாநாட்டுக்குப் பின்னர் பெரிதாக இயங்காத போதிலும் அங்கே உள்ள பெரியார்களான திரு. எம். தங்கணமுத்து, திரு. எ. புஷ்பரதம், மற்றும் காசி செட்டி போன்றவர்களின் தமிழர் பற்றிய உணர்வலைகளால் அங்கே தமிழ் படிக்க வேண்டுமென்ற ஆர்வம் தோன்றயது. தனிப்பட்ட முறையில் சில தமிழ்ப் பெரியார்கள் தமிழைப் பயிற்றுவிக்கும் பணிகளை ஆரம்பித்துச் செய்து வருவதை அறிய முடிகிறது. மேலும் பெரியார் திரு. எம் தங்கணமுத்து அவர்களின் அரும் பெரும் முயற்சியால் மொறிசியஸ் தலைநகரின் மத்தியில் தமிழர் மொறிசியசில் குடியேறிய 250 ஆம் ஆண்டுகள் என்ற நினைவுத்தூபி ஒன்று நிறுவப்பட்டு மொறிசியஸ் அரசாங்க அமைச்சர்களால் அது வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. வரலாற்றில் பதிவாகிய நிகழ்வாகும். இந்த நிகழ்ச்சி 1986 ஆம் ஆண்டில் நடைபெற்றது. திரு. எம். தங்கணமுத்து அவர்கள் அமரராகிவிட்ட போதிலும் அவரின் இந்தப் பணி வரலாற்றில் நின்று நிலவி வரும்.

## புதுவைக் கிளை

1980 இல் அமைந்த புதுச்சேரிக்கிளையில் திரு. வீரமதுரகவி அவர்கள் பொறுப்பாக இருந்து மற்றும் உ.த.ப. இன் தமிழன்பர்களுடன் இணைந்து நல்ல பணி ஆற்றி வந்திருக்கிறார். புதுவைக் கிளையின் முயற்சியினால் புதுவைக்கும் - மெட்னிக் டொபாகோ தீவுகளுக்குமிடையில் நட்பு நகரங்கள் என்ற நிலை ஏற்பட்டது. இதற்கு புதுவை அமைச்சர் மற்றும் திரு. க. வீரமதுரகவி அவர்களும் மெட்னிக் தீவுக்குச் சென்று அங்கே ரெனா வேலய்யா என்ற தமிழ் பிரமுகரைச் சந்தித்துத் தமிழுறவை வளர்க்கும் நட்பு நகரங்கள் என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் திரு. ரெனா வேலைய்யா அவர்களும் புதுவைக்கு வந்து அமைச்சர்கள் மற்றும் வீரமதுரகவி ஆகியோரைச் சந்தித்து பேச்சு வார்த்தைகள் நடத்தியிருந்தார். புதுவையில் சில கல்வி மான்களும் உ.த.ப. இன் புதுவைக் கிளையில் செயலாற்றி வந்திருக்கிறார்கள். திரு. வீரமதுரகவி அவர்கள் ஒருமுறை தலைவர் திரு. இர. ந. வீரப்பனாரை வடநாடு வரை அழைத்துச் சென்று ஆங்காங்கே தமிழர்களைச் சந்தித்து தமிழுறவு பணியைச் செய்தது குறிப்பிடத்தக்கது. 2004 இல் அமைக்கப்பட்ட மத்திய குழுவில் திரு வீரமதுரகவி இடம் பெறவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாங்காங், இந்தோநேசியா, பர்மா, சிசெல்ஸ் ஆகிய நாடுகளில் கிளைகள் காலத்துக்கு காலம் செயல்பட்டு வந்தன. ஆயினும் அவற்றின் முழுமையான விபரங்கள் தாய்க்கிளைக்குக் கிடைக்கவில்லை. இதனால் தொடர்புறவை விபரமாக எழுத முடியவில்லை.

## உ.த.ப. இயக்கத்தின் உலக மாநாடுகளில் இயற்றப்பட்ட தீர்மானங்கள்

இவை உலகளாவிய தமிழர்களின் வாழ்வியல், உரிமைகள், பண்பாடுகள், தமிழ்க்கல்வி போன்றவற்றின் அடிப்படையில் எல்லா மாநாடுகளிலும் தீர்மானங்களாக இயற்றப்பட்டிருந்தன. இவற்றின் விபரங்கள் ஏழாவது உலக மாநாட்டு மலரில் வெளியிடப்பட்டுள்ளன. இந்தத் தீர்மானங்களில் பல இன்று நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

1. தமிழ் மாநாட்டில் தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழ் 05, அல்லது 08 ஆம் வகுப்பு வரை கட்டாயக் கல்வியாக்கப்பட வேண்டுமென்ற தீர்மானங்கள் இன்று அமைந்துள்ள கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்களின் மாநில அரசால் அமுல் செய்யப்படவுள்ளது.

2. வானொலி, தொலைக்காட்சிகளில் தமிழ் நிகழ்சிகள் உலகத் தமிழர்களுக்கு கிடைக்க வேண்டுமென்ற தீர்மானம் இன்று ஊடகங்கள் நல்ல முறையில் செய்ய ஆரம்பித்துள்ளன.

3. வானொலி, தொலைக்காட்சி மற்றும் இன்றைய இணையத் தளம் போன்றவை தமிழ்க் கல்வியை உலகளாவிய ரீதியில் பரப்பும் பணியில் உதவி வருகின்றன.

இப்படியாகப் பயனுள்ள தீர்மானங்கள் படிப்படியாக நடைமுறைக்கு வருவதால் உலகளாவிய ரீதியில் தமிழ் மக்கள் தமிழ் பேசும் படிக்கும் நிலை கால கெதியில் தோன்ற வாய்ப்புகள் அமைந்து வருகின்றன. இன்றைய தகவல் துறை வளர்ச்சியை உ.த.ப. இயக்கக் கிளைகள் மற்றும் தமிழ் அமைப்புக்கள் பயன்படுத்தி உலகத் தமிழர் நட்புறவை - தொடர்புறவை வளர்க்க வேண்டும்.

# உ.த.ப. இயக்கத்தை ஆரம்பித்த காலந்துவங்கி தமிழ்ப் பணியாற்றிய பெரியார்கள் விபரம்

இவர்களில் முக்கியமானவர்கள் வண. பிதா பேராசிரியார் எஸ். தணிநாயகம் அடிகளார் முனைவர் சு. வித்தியானந்தன் திரு. இரா. கனகரட்ணம் திரு. ஆர். என் நாடார் திருமதி. காமாட்சி சோதி நாதன் திரு. எஸ். சோதிநாதன் பேராசிரியர்கள் திரு. சாலை இளந்திரையன், திருமதி சாலி இளந்திரையன் போன்றோரைக் குறிப்பிடலாம். இந்த அமைப்பின் ஆரம்ப காலத்தில் இணைந்து தமிழர் தொடர்புறவு நட்புறவுப் பணிகளில் இருந்து வந்த மூத்த பெரியார்கள் மற்றும் இன்றும் இருந்து வரும் அவர்களின் விபரங்கள் கீழே தருகிறேன். அமரர் பேராசிரியர் திரு. இர. வீரப்பன் திரு. ப. கு. சண்முகம் திரு. பி. கே. வெங்கடேசன் மாண்புகுமிகு டத்தோ சு. சாமிவேலு திரு. மாசி அண்ணாமலை முருகு சுப்பிரமணியன், (மலேசியா) பாங்கொக் - திரு. கோவிந்தசாமி, திரு. சௌந்தர பண்டியன் திரு. ரே. மாரிமுத்து, திரு. ரி. எஸ். மணி (பர்மா) திரு. ஆ. சண்முகலிங்கம் திரு. இ. சற்குருநாதன் திரு. என். பத்மநாதன் திரு. செ. பரமநாதன், திரு. எஸ் ஜெயசேகரன், திரு. பொன். பூலோகசிங்கம், திரு. எஸ். கந்தசாமி, (வளலாய்) திரு. எஸ். இராசரட்ணம் (இலங்கை - யாழ்ப்பாணம்) திரு. ம. தங்கணமுத்து, திரு. எ. புஸ்பரதம், திரு. காசி. செட்டி (மொறிசியஸ்) திரு. வி. தேவகுமார், முனைவர் திரு. வி. குமாரசாமி, லோயர் திரு. எல் கிருஸ்ணன், (றியூனியன்) திரு. க. நவசோதி, திரு. க. ஞானசூரியன், திரு. அரங்க முருகையன் (லண்டன்) சுவாமி திரு. விஞ்ஞானநந்தா (அமெரிக்கா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சங்கர சுப்பிரமணியன் (பாங்கொக்) திரு. கருணைகயமால் (ஹொங்கொங்) திரு. சுப. சுப்பிரமணியன் திரு. பாலசுப்பிரமணியன் (அந்தமான்) தனிகை எஸ். உலகநாதன், திரு. எஸ். முல்லை வாணர், எஸ். அர்ஜுனனார் சங்கொலி திரு. சோலை இருசன், திரு. இ. இரத்தினகிரியார், முனைவர் க. ப. அறவாணர் திரு. எம். எ. ரஹுமான் (இந்தியா) திரு. இர. ஜெயதேவன் (சிங்கப்பூர்) திரு. மு. அப்பன் டாக்டர் வி. கோவிந்த சாமி, திரு. புஸ்பாம்பாள் முருகன் (தென்னாபிரிக்கா) திரு. கா. அப்பாப்பிள்ளை (பிஜி) திரு. எம். எஸ். இராமுலு, திரு. எஸ். மாரிமுத்து (இந்தோனேசியா மேடான்) திரு. எம். வ. சாமி (ஹெறிதாஸ்) டாக்டர் எம். இராசநாயகம், திரு. ம. ரா. பாலகணபதி (நியூசிலாந்து) 1980 ஆம் ஆண்டின் பின்னர் உ.த.ப. இயக்கத்தில் இணைந்து பணிசெய்வோர் விபரம் திரு. க. வீரமதுரகவி, திரு. இராமலிங்கனார் (புதுவை) திரு. மு. மணிவெள்ளையன், திருமதி. பொன்னி கணேசன், (மலேசியா) திரு.என். ரவிபாண்டியன் (சென்னை-பர்மா) பேராசிரியர் திரு. கதிர்முத்தையன் (கடலூர்) திரு. எஸ். இளந்திரையன் (சேலம்) திரு. பாலசுந்தரம் திரு. எஸ். ரங்கசாமி திரு. என். முருகன் (சேலம்) திரு. எஸ். செந்தூராசா, திரு. எஸ். ஐ. தனபாலசிங்கம். வே. தவபாலன், இரா. தவகோபால், திரு. ஜெயரட்ன சிங்கம் திரு. எஸ். எஸ். வரதராசா (யாழ்ப்பாணம்) (திரு. சுப. கரிகால்வளவன் (அந்தமான்) திரு. எஸ். போஜராஜா), புலவர் திரு. நா. சிவபாதசுந்தரனார், திரு. வே. தேவதாசன் திரு. எஸ். தவரட்ணம் (யாழ்ப்பாணம்) இன்னும் பலர் இருந்தனர்.

1990க்குப் பின்னர் அமைப்பில் இணைந்து பணியாற்றி வருவோர் விபரம் திரு. க. பொன்னம்பலம் திரு. ஆ. பொன்னம்பலம் திரு. சி. வ. ஆறுமுகசாமி, திரு. எஸ். வேலும்மயிலும் திரு. ப. லட்சுமணன், திரு. மு. ஜெயந்திகுமார் (யாழ்ப்பாணம்) திரு. வே. ரி. கணேசலிங்கம், இரா. தனபாலசுந்தரம் நயினை விஜயன், இராசன். இராசகருணா, திரு. செல்வராஜா. திரு. எம். காசிநாதன் (ஜேர்மனி) திரு. அலன். ஆனந்தன், திரு. ப. சண்முகசுந்தரம், (பிரான்ஸ்) திரு. எஸ். தியாகலிங்கம் (நோர்வே) திரு. ம. மனோகரன், திரு. எஸ். முருகவேள் (சுவிஸ்) திரு. சி. செல்லையா. திரு. சிவா. கணபதி பிள்ளை, திரு. இ. ராஜ்குமார், ஈழத்துச சிவானந்தன், கவிஞர் கந்தவனம், செல்வி சாந்தி, திரு. செல்வா செல்லையா விக்கினேஸ்வரன், ஜனாப் ஹான்சீர். திரு. அந்தோனிப்பப்பிள்ளை, திரு. சௌந்தரராஜன், திரு. ம. யேசுதாசன், திரு விக்கிரர் பிகுராடோ, திரு. நடராஜ்குமார், திரு. எஸ். வி, லோகேந்திரலிங்கம், திரு. து. உதயகரன். திரு. எஸ். செயராசசிங்கம் இன்னும் பலர் உள்ளனர். (கனடா) திரு. எ. எஸ். கிருஸ்ணமூர்த்தி, திரு. எ. சிவசு, திரு. எஸ். தங்கன், டாக்டர். தெய்வநாயகம், டாக்டர். க. சோமசுந்தரம், திரு. கே. எஸ் கிருஷ்ணமூர்த்தி, (இந்தியா) ரேவா வேலய்யா மட்னிக் - டொபாக்கோ திரு. பாரதி பாலன், (டென்மார்க்) எஸ். முருகவேள், (லண்டன்) திரு. வை. நாராயணசாமி, திரு. எஸ். திருமுருகன், திரு. எம். பத்மநாபன், கவிஞர் நாகி. திரு. எஸ். ஜெயபாலன் (புதுவை). சே. சிவராஜசிங்கம் (சுவிஸ்), அறிஞர் திரு. இ. க. கந்தசாமி (கொழும்பு) எம். மனோகரன் (சுவிஸ்).


சுப. கரிகால்வளவன்

இங்கே குறிப்பிடப்படாத எத்தனையோ பெரியார்கள் அறிஞர்கள் இந்த அமைப்பில் இணைந்து-பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். பல உலக மாநாடுகளில் ஆர்வமுடன் பணி செய்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் எமது அன்புக்கும் நன்றிக்கும் உரியவர்கள். பெற்கரிய செய்வோர் பெரியவர்களாவார்கள். தமிழ் அன்னைக்குத் தொண்டு செய்வோர் வரலாற்றில் என்றும் வாழ்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ.த.ப. இயக்கத்தின் வரலாற்றுச் சாதனைகள் சில

1. இந்த அமைப்புத் தோன்றியதன் பின்னர் இதன் அரும் பெரும் பணிகளால் உலகத் தமிழர்களிடையே நட்புறவும், தொடர்புறவும், ஏற்பட்டுள்ளது.

2. 25 ஆண்டுகள் காலத்துக்கு மேல் ஓய்வின்றி உலகத் தமிழர்க்காக அவர்களின் தொடர்புறவுக்கும் மேம்பாட்டுக்காக திரு. இர. ந. வீரப்பன் அவர்கள் உழைத்திருக்கிறார்.

3. இலங்கையில் யாழ்ப்பாணம் தமிழரின் அநாதித் தாயகத்திலிருந்து தனது உழைப்பில் ஒரு பகுதியையும், நேரத்தையும், காலத்தையும், 30 ஆண்டுகளாக உ.த.ப. இயக்கத்திற்காக தன்னலங்கருதாமல் பணி செய்து வருபவர் திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்கள் அவரின் அருந்தொண்டுப் பணியில் உலகத் தமிழர் உறவுப் பாலமாக பரப்புரை ஊடகமாக உலகத் தமிழர் குரல் சஞ்சிகையை அவர் தொடர்ந்து வெளியிட்டுச் சாதனை படைத்திருக்கிறார். இலங்கையிலிருந்து இலங்கைக் கிளையின் ஆதரவுடன் உ.த.ப. இயக்கத்தின் வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய தன்னலமற்ற தொண்டுப் பணிகள் அளப்பரியவையாகும்.

4. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் 1986 இல் இந்த அமைப்புக்குத் தலைமையகத் தலைவர் திரு. இர. ந. வீரப்பன், அவர்கள் பார்வையாளர் அந்தஸ்த்து பெற்றுத் தந்திருக்கிறார்.

5. தமிழ் நாட்டில் தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழ் கட்டாய பாடமாக்கப்பட வேண்டுமென்ற உ.த.ப. இன் பல ஆண்டுக் கோரிக்கை தற்போது அமைந்துள்ள தி. மு. க. ஆட்சியில் கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள் நனவாக்கிப் பெருமை பெற்று விட்டார்.

6. திருக்குறள் தொல்காப்பியம், மற்றும் முத்தமிழ்ச் சங்கங்கள், சங்கத் தமிழ்ப் பனுவல்கள் போல் - உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பெயரும் காலந்தோறும் வரலாற்றில் நின்று நிலைக்கும் என்பது உண்மையாகும்.

# உலகத் தமிழர் குரல்

உலகத் தமிழர் குரல் சஞ்சிகை உலகப் புகழ் பெற்றதொரு தழிழ்ப் பண்பாட்டுத் தொடர்புறவு ஊடகமாகும். இந்த ஏடு 1976ஆம் ஆண்டில் உ. த. ப. அமைப்பின் பொதுச் செயலாளரால் ஆரம்பிக்கப்பட்ட சிற்றிதழாகும். 02 இதழ்களை அவர் அச்சிட்டு வெளியிட்டார். 03வது இதழிலிருந்து திரு. ஆ. சண்முகலிங்கம் என்ற இளைஞரே 1978இல் பொறுப்பாசிரியராக இருந்த 05 இதழ்களை பெரியவடிவமைப்பில் வெளியிட்டு வந்தார். இவற்றில் உலகத் தமிழர் செய்திகள் கிளைகளின் செய்திகள், மற்றும் தமிழ்மொழி பண்பாட்டுக் கட்டுரைகள் இடம் பெற்று வந்தன. இவர் தமிழின் மேல் கொண்ட பற்றினால் தனது சொந்தச் செலவினங்களில் இந்த வெளியீட்டைச் செய்து வந்தார்கள். 1983இல் இலங்கையில் தோன்றிய இனக் கலவரங்களால் அமைந்த சூழ்நிலையில் 02, 03 இதழ்கள் பிரசுரிக்க முடியவில்லை. 1982க்குப் பின்னர் பொதுச்செயலாளர் திரு. இரா. கனகரட்ணம் அவர்கள் இதழ் வெளியீட்டின் தொடர்புகளையும், உ. த.. ப. இயக்கத்தின் பணிகளையும் கைவிட்டு விட்டு விலகி விட்டார். இதன் பின்னர் 1985இல் உ. த. குரல் மீண்டும் பத்திரிகை வடிவில் வெளிவந்தது. பின்னர் தொடர்ந்து இந்த ஏட்டின் வெளியீட்டுப் பணிகளை திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்களே செய்து வந்தார் 1986 ஆம் ஆண்டில் இவருக்கு நிதிப் பிரச்சனைகள் ஏற்பட்டன. அந்த நேரத்தில் இலங்கைக் கிளையில் ஆட்சிக் குழுவில் இருந்த திரு. எஸ். செந்துராஜா அவர்கள் கல் அச்சில் (றோணியோ) தொடர்ந்து 03 இதழ்கள் பிரசுரிக்க உதவினார். அவை 1986, தை, மாசி, பங்குனி இதழ்களாக வெளியிடப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. த. ப. அமைப்பின் 04வது உலக மகாநாடு மலேசியாவில் 1987இல் நடந்தபோது இலங்கைக் கிளை சிறப்பு விழாவொன்று நடாத்தியது. அதில் மாநாட்டு விழா சிறப்பு மலராக உ. த. குரல் சஞ்சிகை அமைப்பில் பல பக்கங்களில் வெளியிடப்பட்டது. உ. த. ப. இயக்கத்தை வளர்க்கவும், உலகளாவிய முறையில் தொடர்புறவை மேம்படுத்தவும் திரு. ஆ. சண்முகலிங்கம் உ. த. குரல் ஏட்டினை பிரசுரித்து வந்தார். அத்துடன் 15க்கு மேற்பட்ட நாடுகளில் உள்ள கிளைகளுக்கும், முக்கிய பிரமுகர்களுக்கும், பி. பி. சி. வெரித்தாஸ் வானொலி, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்களுக்கும் இந்த ஏடு அனுப்பப்பட்டு வந்தது. உலகத்தமிழர் தொடர்புறவுப் பணிக்காக வெளியிடப்பட்டு வந்த ஒரேஒரு தமிழ் இதழாக திகழ்ந்து வந்துள்ளது. உலகத் தமிழர் குரல் பரப்புரை உலக நாடுகளில் பல அறிஞர்களின் கவனத்தை கவர்ந்து வந்தது. இதனை உலகத் தமிழர் ஒன்று கூடல் நிகழ்வுகளில் ஆசிரியர் அனுபவத்தில் கண்டுள்ளார். இலங்கையில் சிலபோது நடந்து வந்த போர்ப் பிரச்சினை காலங்களில் சிலபோது இதழ்கள் பிரசுரிக்க முடியவில்லை. 1997 ஆம் அண்டிலிருந்து உ. த. குரல் சஞ்சிகை வடிவில் மாற்றப்பட்டு வெளியிடப்பட்டு வருகிறது. 1999இல் உ. த. ப. இயக்கத்தின் வெள்ளிவிழா மாநாடு யாழ் நகரில் நடைபெற்றது. அதில் உ. த. குரல் ஏடு வெள்ளிவிழா மலராக பிரசுரிக்கப்பட்டு சிறப்பாக வெளியிடப்பட்டது. 2003, 2004 ஆம் ஆண்டுகளில் முறையே பொதுச் செயலாளராக இருந்த கே. ரி. கணேசலிங்கம் மற்றும் நோர்வேக் கிளைப் பிரமுகர் திரு. எஸ் தியாகலிங்கம் இருவரும் இலங்கைக்கு வந்த போது உ. த. குரல் வெளியீட்டுக்கு 15000 ரூபா வீதம் வழங்கி உதவினார்கள் 2005 வெளியீட்டுச் செலவினங்களுக்கு அகிலத் தலைமையகத் தலைவர் மூலம் அன்பர் திரு. சிவா கணபதிப்பிள்ளை கணிசமான தொகை வெளியீட்டுக்கு அனுசரனையாக வழங்கினார். இந்த ஏட்டின் முக்கியத்துவம் தலைமையகத்துக்கும் பல பெரியார்களுக்கும் தெரிந்துள்ள நிலையில் இதன் தொடர்ச்சியான வெளியீட்டுக்கான நிரந்தரமான நிதி அவசியம் என்பதை இதழ் ஆசிரியர் தலைமையகத்துக்கு அறிவித்துள்ளார். இதற்கான பயனுள்ள பணிகள் 10ஆவது உலக மாநாட்டில் எடுக்க வேண்டியது ஆர்வலர்களின் பொறுப்பாகும். உலகத் தமிழர் குரல் வெளியீடுகளை அமரர் திரு. இர. ந. வீரப்பனார் அடிக்கடி பாராட்டி அஞ்சல் வரை வந்ததுண்டு இந்த இதழ் வெளியீடும் இதன் பரம்பல் மற்றும் பரப்புரையும் உலகத் தமிழர்களுக்கு இன்றியமையாத ஒன்றாகும். இதன் பணியும் வளர்ச்சியும் காலந்தோறும் வரலாறு சொல்லும்.

# இலங்கையில் உ.த.ப. இயக்கத்தின் துணை நிறுவனம் - சோதிட ஆராய்ச்சிக் கழகம் - யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் 1993இல் தமிழர் சோதிட ஆராய்ச்சிக் கழகத்தை இலங்கை கிளைத் தலைவர் திரு. ஆ. சண்முகலிங்கம் நிறுவினார். இதில் உள்ள உறுப்பினர்கள் உதப இயக்கத்தின் ஆதரவாளர் இந்த நிறுவனம் இன்று உ.த.ப. இன் சகோதர நிறுவனமாகத் துனை நிறுவனமாகச் செயற்பட்டு வருகின்றது. சோதிட மேதையான திரு. ஆ. சண்முகலிங்கம் அவர்கள் இந்த நிறுவனத்திற்குத் தலைவராக இருந்து பணி செய்து வருகிறார். இந்த நிறுவனத்தில் 500க்கு மேற்பட்டோர் சோதிடக் கலையில் அடிப்படைக் கல்வி அறிவை பெற்றுச் சென்றுள்ளனர். 25க்கு மேற்பட்ட சோதிடர்கள் தலைவர் அவர்களின் சோதிடக் கலையில் அறிவுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகளில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை தோறும் ஒன்று கூடி ஆராய்ச்சிக்குப் படித்து வருகின்றனர். இதனால் தமிழ்ப் பண்பாட்டில் ஓர் அங்கமான சோதிடக் கலை மறையாமல் இருக்க இந்த நிறுவனம் நல்ல பணியாற்றி வருகின்றது. சோதிடக் கலையில் உள்ள உண்மையான விளக்கங்களை தலைவர் விளக்கி வருவதன் மூலம் நாட்டில் நிலவி வரும் சோதிடக் கலைக்கு மாறான பொருத்தமற்ற கருத்துக்கள் மறைந்து வருவதைக் காணமுடிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உ.த.ப. இயக்கத்தின் வளர்ச்சிக்கு நிலவும் தடைகள்

இன்று இந்த அமைப்பு பல தேசங்களில் வேரூன்றி விழுது விட்டு வளர்ந்து வருகின்றது. ஆயினும் இதற்கென்றொரு நிரந்தரமான - சொந்தமான தலைமையகமான சொந்த அலுவலகம் இன்னும் ஆக்கப்படாதது பெரியதொரு குறைபாடாகும். இன்னும் எல்லா நாடுகளிலும் தற்காலிக முகவரிகளிலோ அல்லது உ.த.ப. இன் பொறுப்பாளர்களின் இல்லங்களிலோ அல்லது வசிக்குமிடங்களில் தான் இந்த பேரமைப்பின் பணிகள் நடந்து வருகின்றன. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டியது ஆர்வமுள்ள தமிழ் அபிமானமுள்ள வசதி படைத்த தமிழ்க் கொடை வள்ளல்களின் கைகளில் தான் உள்ளது. இந்த அவசியமான நல்ல தொண்டுப் பணியைச் செய்திட முறையான பொருத்தமான அணுகுமுறைச் செயற்பாடுகள் இன்றைய மறுக்க முடியாத தேவையாகும் தன்னலம், விளம்பர நோக்கம், அரசியல் லாபம், வியாபாரச் சிந்தனை நோக்கம் போன்றவை இந்தத் தமிழ்ப் பண்பாட்டு நிறுவனத்தின் பணிகளுக்குப் பொருத்தமானவையாக இருக்க முடியாது ஆகையால் இந்த அமைப்பின் தொண்டுப் பணியாளர்கள் உலகத் தமிழர் தொடர்பு நட்புறவை வளர்க்கவும், தமிழை உலகம் முழுவதும் பரப்பவும் ஆன பணி செய்ய முன்வர வேண்டும் நமது பணிகளுக்கு பரப்புரை தொடர்புறவுக் காரணியாக உலகத்தமிழர் குரல் ஏடு விளங்கி வருகிறது இதன் வெளியீட்டுக்கு நிரந்தரமானதொரு நிதி உதவி ஏற்படுத்தப்பட்டு இது நிறுவனப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். இவற்றை செய்வதன் மூலம் உ.த.ப. இயக்கத்தின் பணி சிறந்து வளர்ந்து நிலவி காலந் தோறும் நமது சமுதாயத்திற்கு நன்மை செய்து வரலாற்றைப் படைக்கும் என்பது உண்மையாகும்.

(சில கிளைகளின் பணிகள் தொடர்பான முழு விபரங்களும் இன்னும் கிடைக்கவில்லை.)

## உலகத் தமிழ் பண்பாடு

புலவர் செ. பரமநாதன் தாவடி இலங்கை.



தமிழ் நாகரிகமும் பண்பாடும் ஒரு புறம் தனித் தன்மையும், தனி வடிவமும் உடையவை இது இன மொழி வேறுபாடுகள் கடந்து சம நலம், கூட்டு நலம் பேணி உலக ஒருமைப்பாட்டை வளர்க்கும் முறையில், அதனுடன் பின்னிப் பிணைந்து வளர்ந்ததாகும். இதனால் அது பொதுவாக நாகரிக எல்லைகளாகவும் படர்ந்து பரவி வளர்ந்துள்ளது. இந்திய எல்லை நாகரிக எல்லையாகவும், தமிழகப் பழைய எல்லையை பரந்து இன்னும் பரவி தமிழ்ப் பண்பாட்டின் தனித்துவத்தை விளங்க வைக்கின்றது.

தமிழ் மொழியின் இம் முத்திறம் வாய்ந்த தொல் பெரும் பண்பாட்டிற்கும் தமிழ் மொழியே மிகச் சிறந்த சான்று வழங்குகின்றது. அவ்வழியில் நாம் இங்கே தமிழ் மொழி மரபு, தமிழ் இலக்கிய மரபு, தமிழ்ப் பண்பு மரபு, தமிழ் வாழ்க்கை மரபு, தமிழ் சமய மரபு, ஆகிய ஐந்து மரபுச் செல்வங்களிலும் கருத்தோட்டம் விட்டு அவற்றிற்கு அடிப்படையாய் அமையும் சில பண்பாட்டுக் கருவூலங்களை ஆராய்ந்து அறிதல் வேண்டும்.

தமிழ்ப் பண்பாடு என்பது மனித இனப் பண்பாட்டுக் கழனியின் ஒரு வளமார் வளர்ப்புப் பண்ணையாகும். அது மனித இன நாகரிகத்திற்கு வித்து வளமும், வேர் வளமும் வழங்கி அதனை ஊக்கி, அதனால் தானும் ஊக்கம் பெற்று வளர்ந்துள்ளது, வருகின்றது. தமிழ் நாகரிகம் பண்பாடு பண்பு ஆகியவற்றின் விழுமிய வளம் குறிக்கும் இன உயிர்ச் சொற்களில் இலக்கியம் இலக்கணம் ஆகியவை சிறந்தவை. இவை இரண்டும் ஒன்றுடன் மற்றொன்று தொடர்புடையவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை முறையே இலக்கு என்பதன் அடியாக இயம், அணம் என்ற சொற்களுடன் கூடியவை.... மனித இன நாகரிக இலக்கு நோக்கிய இயல்பான வளர்ச்சிக்குரிய வண்ணம் அல்லது முறைமை என்றும் இவை முறையே பொருள் தருபவையாகும். மேலை உலகில் இவற்றுக்கு ஈடாக சொற்கள் எழுதப்படுவது, எழுத்து என்பவற்றையே குறிக்கின்றன. இலக்கணம் இலக்கியம் முறையே நலந்தருவது. சொல் பிரித்துக் காட்டுவது என்ற சொற் பொருள்களையே தருகின்றன.

இங்கே சொற் படிவங்கள் இரண்டும் உலகமெங்கும் பரவியுள்ளது. சொற்பொருள்கள் வகையில் இலக்கியம் ஒன்றே இந்திய நாகரிக எல்லை வரை பரவியுள்ளது. என்பது குறித்து நோக்கத் தக்க செய்தியாகும். ஆனால் இரு சொற்கள் வகையிலும் இரண்டின் இணைத் தொடர்பும் மனித இன விழுமிய பொருட்களோ தமிழகத்திற்கு வெளியே சொற்படிவத்தினுடனாக சென்று பரவவில்லை என்பது தெளிவு.

தமிழ் மொழி நீங்கலாக உலகின் எல்லா மொழிகளிலுமே இலக்கணம் என்பது மொழி இலக்கணமாக எழுத்து, சொல், சொற்றொடர் என்ற பீவுகள் மட்டுமே உடையதாக நின்றுவிட, தமிழ்மொழி ஒன்று மட்டுமே! அது மொழி, இலக்கியம், ஆகிய இரண்டிற்கும் உரிய இலக்கணமாக கருதப்பட்டு எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐம்பிரிவுடையதாய் இயங்கியுள்ளது.

இந்திய மொழிகளில் கீழை உலக மொழிகளிலும் மிகப் பழமை வாய்ந்ததும் புதுமையுடைய 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கிய வாழ்வுடைய மொழி தமிழேயாகும். இந்தியாவின் தேசிய வாழ்வில் 25 நூற்றாண்டுகளாக புத்தர், அசோகன் காலம் முதல் இன்று வரை நிலவியுள்ள எல்லா வாழ்க்கை இயக்கங்களையும் தேசிய வாழ்வின் மாறுபாடுகளையும் நன்கு பதிய வைத்துக் காட்டும் மொழி தமிழ் மொழியாகும்.

மொழி சார்ந்த கவின் கலைகள் இலக்கியம், இசை, நாடகம் என்பன மூன்றே என்பதை கண்ட தமிழர் அவற்றை முத்தமிழாக வளர்த்து வந்தனர். சங்க காலத்திற்குப் பின் இசையும் நாடகமும் நலிவுற்றுப் போனது. .இதன் பின் முத்தமிழ் என்ற பெயரோடு இன்று வரை இயங்கி வருகின்றது.

சங்கம் வைத்து உலகாண்ட இனங்களில் பிரான்ஸ் இனம், தமிழ் இனம் ஆகிய இரண்டுமே என்பதே ஆய்வாளர்களின் கணிப்பாகும். பிரான்ஸ் மொழிச் சங்கம் பத்தாம் நூற்றாண்டில் தொடங்கிற்று. தமிழ்சங்க வாழ்வோ கி. பி. 2-ம் நூற்றாண்டில் முடிவுற்றது.

ஒரு கடவுள் வணக்கம் ஒருவன் - ஒருத்தி காதல் திருமணம் ஆண் - பெண் சமத்துவம் உழவர் - தொழிலாளர் உயர்நிலை. சாதி இன வகுப்பு உயர்வு தாழ்வற்ற சமுதாயத்தைக் கண்டு இவற்றை செயல் முறையில் இயக்கியவர் தமிழரே! சமஸ்கிருத மொழி வளர்ச்சியிலும் தமிழும் தமிழர்களும் கொண்ட பங்கு சிறிதன்று. தமிழ், சமஸ்கிருதம், பாளி ஆகிய இலக்கியங்களை விட தமிழ் இலக்கியங்கள் தான் முதன்மை வகித்தது என்பதையும் ஆய்வாளர்களின் ஆராய்ச்சிகள் காட்டுகின்றன.

இந்தியாவிற்கு மாத்திரமல்ல, உலகுக்கே பொது மொழியாக விளங்கும் தகுதி தமிழுக்கு மாத்திரந் தான் உண்டு என்பதை இந்தியாவின் தந்தையும் உலகப் பெரியாருமாகிய மகாத்மா காந்தியடிகளே கூறியுள்ளார்., என்பதை நினைவு கூர்தல் வேண்டும். தமிழ் மொழி சொற்கள் உலகின் பிரதான மொழிகளில் எல்லாம் உள்ளது. என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேமதுரத் தமிழ் ஓசை உலகமெல்லாம் பரவி உள்ள போதிலும், பல நாடுகளில் சிறுபான்மை இனமாகவே வாழ்கின்றனர். தென் கிழக்குஆசிய நாடுகள் பலவற்றையும் தமிழர்களே ஆண்டு வந்தார்கள் என்பதற்கு பல சரித்திரச் சான்றுகள் உள்ளன. இவர்கள் உலகின் பல பாகங்களுக்கு கப்பல் ஓடிய இனமாக வாழ்ந்து, நாகரிக உலகப் பரப்பெங்கும் கடல் வாணிபமும். கலை, சமயப் பண்பாட்டுத் தொடர்புக் குடியேற்றமும் உடையவராய் இருந்தனர். இலங்கை தென் கிழக்காசியப் பரப்பு ஆகியவற்றில் அவர்கள் அரசும் பேரரசும் பரப்பி இருந்தனர்.

பல்லவர், சோழர், பாண்டியர், சேரர் போன்ற தென்னகப் பேரரசர் மட்டுமன்றி 18-ம் நூற்றாண்டு வரை நிலவிய பல தென்னக மராத்தியர் குசராத்திய சிற்றரசர்கள் கூட சிறந்த கடற்படையை உடையவராக இருந்தனர். தென்னகத்திற்கு வெளியே இந்தியாவோ, சீனாவோ காணாத சிறப்பு அசோகனும். சந்திரகுப்தனும், அக்பரும். பாபரும் தரைப் பேரரசு கண்டனரேயன்றி கடல் வாழ்வை கனவில் கூட கண்டிலார் இல்லை.

யூதர்கள் போல் தமிழர்கள் இன்று பல நாடுகளிலும் தன்னுரிமை (சுயநிர்ணயம்) அற்றவர்களாய் வாழ்ந்து வருகிறார்கள். வருங்கால உலகிலே தமிழர்களின் வாழ்வுத் திறமையை விஞ:ஞான மூலம் வெளிக் கொணர இருக்கிறார்கள். என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு பண்பாட்டு மையங்களை நிறுவி உலகத் தமிழ்ப் பணபாட்டை வளர்க்க ஆவன செய்வார்களாக.!

## தமிழ் மொழியில் குறைபாடா?

மகாகவி பாரதியாரிடம் ஒருவர் தமிழ் மொழியைப்பற்றி குறையாகக் கூறினார். சொல்வளம் இல்லாத மொழி தமிழ் மொழி. விஞ்ஞான உண்மைகளைத் தமிழால் கூற இயலாது என்பது பாரதியாரிடம் கூறப்பட்ட குற்றச்சாட்டு. இதனைக் கேட்ட பாரதியார் தக்க பதில் கூறினார். பாரதியார் கூறிய பதில் இதுதான்

தமிழ் குறைபாடு அற்றது. தமிழ் நாட்டிலுள்ள பொருட்களுக்கு தமிழில் தேவையான தெளிவான பல சொற்கள் இருக்கின்றன. விஞ்ஞானத்திலுள்ள விடயங்களையும், விபரங்களையும் தமிழில் சொல்ல தமிழன்தான் தயாரில்லை. நூற்றுக் கணக்கான வருடங்கள் தமிழன் அடிமையாக இருக்கிறான். நாடு சுதந்திரம் பெற்றால் கூட தமிழன் சுதந்திரமாக செயற்பட மாட்டான். இன்றும் அவன் அடிமை புத்தியுடனும் மனப்பான்மையுடனும் தான் இருக்கிறான். அடிமை மனப்பான்மையுடைய தமிழனின் மொழியாக இருப்பதால் தமிழ் மொழியும் அவமானப்படும் நிலை உருவாகியுள்ளது. குறைபாடு தமிழரிடம் உள்ளதே அல்லாமல் தமிழ்மொழியில் இல்லை.

தொகுப்பு: **கவிஞர் செ. ப.**

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லா
மனக்கவலை மாற்றலரிது. அறம் -- திருக்குறள்.

தனக்கு ஒப்பில்லாத இறைவனின் திருவடிகளை எப்போதும் நினைப்பவர்க்கல்லாமல் மற்றவர்களுக்கு மனக்கவலையை நீக்க முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர் வரலாற்றில் திருப்பு முனைகள்

உலக வரலாற்றில் ஓர் இனம் வாழ்ந்ததற்கும், வாழ்வதற்கும், அவ்விடத்தில் அடையாளம் காண்பதற்கும், அவ் இனத்தின் மொழி பிரதேசம், பண்பாடு, கலை, கலாச்சாரம் ஆகியவற்றில் இருந்தே அந்த இனத்தின் வளர்ச்சியையும், எழுச்சியையும் காணமுடியும்.

ஒரு இனத்தின் மொழி அழிந்து விட்டால் அந்த இனம் இருந்தென்ன? இல்லாவிட்டால் என்ன?

ஒரு மொழி இருந்தால் தான் அவர்களுடைய சமயம், கலை கலாச்சாரம் பண்பாடு முதலியவற்றை அறிய ஏதுவாக இருக்கும்.

இலங்கைத்தீவின் தமிழ் இனத்தின் வரலாற்றை ஆராய்ந்தால் வட இந்தியாவிலிருந்து விஜயனும் அவன் தோழர்களும் இலங்கைக்கு வந்து குடியேறியதாகக் கூறப்படும் காலத்திற்கு (2500) ஆண்டுகளுக்கு முன்னர் ஈழத்தில் தனி மரபினரான நாகர்களும், இயக்கர்களும் வாழ்ந்து வந்துளர்.


திரு. க. பொன்னம்பலம்

இலங்கை முழுவதிலும் தமிழ் மக்கள் 3000 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வருகின்றனர். இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் 3000ம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பெருங்கற் பண்பாட்டை மொத்தமாக இங்கும் பரவலாகப் பல தொல்பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டு, இலங்கையிலும் 3000ம் ஆண்டுகளுக்கு முன்னர் (கி. மு. 1000) ஆண்டுகளுக்கு முன்னர் தமிழினம் சிறந்த நாகரீகத்தோடு வாழ்ந்தமையை எடுத்துக் காட்டுகின்றன.

13ம் நூற்றாண்டிலிருந்து 16ம் நூற்றாண்டின் இறுதிவரை இலங்கையின் வலிமைமிக்க அரசாக யாழ்ப்பாணத் தமிழரசு திகழ்ந்தது. வடக்கு கிழக்கு மாகாணங்களையும் புத்தளம் மாவட்டத்தின் கரையோரப் பகுதியையும் உள்ளடக்கிய பகுதி தமிழர் தாயகமாக இருந்தது.

இலங்கை முழுவதிலும் தமிழ் மக்கள் 3000ம் ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வந்தாலும் 2390ம் ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழரும் சிங்களவரும் மாறிமாறி இலங்கையில் அனுராதபுரத்திலும் அதற்குத் தெற்கேயும் ஆட்சி நடாத்தியிருக்கின்றனர்.

இலங்கையின் வரலாற்றில் ஓரிரு சிங்கள அரசர்களே குறிப்பிட்ட சில ஆண்டுகள் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியையும் சேர்த்து ஆட்சிசெய்தனர்.

கி.பி 1215 ஆம் ஆண்டு மாகன் என்ற தமிழ் மன்னன் ஆட்சிபீடம்மேறியதன் பின் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதி தமிழ்ப் பகுதியாகவும், தென்மேற்குப் பகுதியும் மலையகப் பகுதியும் சிங்களப் பகுதியாகவும் மாறிவிட்டன.

இந்த நிலையில் 13 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து 16 ஆம் நூற்றாண்டுவரை தமிழரின் அரசு உறுதியான தமிழரசாகத் திகழ்ந்தது. 16வதும் நூற்றாண்டின் பின் யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயரிடம் வீழ்ச்சியடைந்தது. போர்த்துக்கேயரும் அவர்களின் பின் ஒல்லாந்தரும் இலங்கையின் கரையோரப் பகுதி முழுவதையும் கைப்பற்றி ஆட்சி நடாத்திய போதிலும் ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரங்களோடு மலையகத்தையும் கைப்பற்றியதன் பின்னர்தான் இலங்கை முழுவதையும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஆங்கிலேய வரலாற்று ஆய்வாளர்களால் வரையப்பட்ட இலங்கைப் படத்தில் "தமிழர் தாயகம்" என்ற புவியியற் பகுதி தெளிவாகப் பிரித்துக் காட்டப்பட்டிருந்தது.

இலங்கைத் தீவில் நீண்ட தொடர்ச்சியான வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட தமிழர் தாயகப் பகுதி ஏறத்தாழ 20000ம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டதாகும். இது இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களுடன் புத்தளக் கரையோரப் பகுதியையும் உள்ளடக்கிய பகுதியாகும். இது இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 32% ஆகும். மேலும் இலங்கையின் மொத்தக் கடறபரப்பில் 60 வீதமான பகுதியை தமிழர் தாயகம் உள்ளடக்கி இருந்தது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் கும்புக்கன் ஆறும் வடமேல் மாகாணத்தின் மகா ஓயாவும் அதன் இரு எல்லைகளாகக் காட்டப்பட்டு மகாவலி கங்கை பட்டிப்பளை ஆறு, கந்தளாய்க் குளம், ஜான் ஓயா அருவி ஆறு போன்ற ஆற்றுப் படுக்கைகளும் அதன் எல்லைப் பிரதேசமாகக் காட்டப்பட்டுத் தமிழர்களின் தாயகமான ஈழத் தமிழ் அரசுப் பிரதேசம் வரையறுக்கப்பட்டிருந்தது.

ஏறக்குறைய 20000ம் இற்கு மேற்பட்ட சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட வளமான தமிழ் பகுதியே 1948ம் ஆண்டில் பிரித்தானியரால் இலங்கை என்ற தனியான நிர்வாக அலகிற்கு உட்பட்டவகையில் சிங்களவரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒப்படைக்கப்பட்ட அன்றிலிருந்து இன்று வரையான அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலத்திற்குள் இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் தமிழர் பகுதிகள் என்ற எண்ணக்கருவை அழிக்கத் திட்டம் போட்டன. இத்திட்டத்தின் அடிப்படையில் தமிழர் வாழும் பகுதியை ஆக்கிரமிக்கும் வகையில் சிங்களவர்களைத் தமிழர் தாயகப் பகுதியில் குடியேற்றுவதற்கான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இதனால் ஏற்பட்ட போர் அனர்த்தங்களால் தமிழ் இனம் வாழ்ந்த தாயக நிலம் ஆட்சி அதிகாரவர்க்கத்தின் ஆளுமைக்குக் கீழ் தமிழர்களின் ஏர்முனைப்பட்ட நஞ்சை நிலங்கள் அழிக்கப்பட்டு பறிக்கப்பட்டு வந்தன. போர் அவலங்களால் ஒரு சிலர் உடமைகளை விற்று புலம்பெயர்ந்து இந்தியா, ஜேர்மனி, இத்தாலி, சுவிஸ், கனடா, பிரித்தானியா, பிரான்சு போன்ற மேற்கு உலக நாடுகளில் தஞ்சம் புகுந்து அகதி அந்தஸ்துக் கோரி அவல நிலையில் வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர்.

இந்த நாட்டு தமிழரின் வரலாறும் உரிமையும் மதிக்கப்பட்டு இலங்கைத் தமிழர் இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு ஜனநாயக ரீதியாக சர்வதேச அங்கீகாரத்துடன முழு உரிமையுடன் மனித நேய அடிப்படையில் பிரச்சனையை தீர்க்க சர்வதேச ஜனநாயக ஆளுமை கொண்ட நாடுகள் தலையிட்டு அரசியல் அமைப்பு சட்டவாக்கத்துடன் இனப்பிரச்சனையை தீர்க்க ஆவன செய்ய வேண்டும்.

**அறிஞர் க. பொன்னம்பலம் (ஜே. பி.)**
இலங்கை வரலாற்று ஆராய்ச்சியாளர்
புங்குடுதீவு, இலங்கை.

## உலகத் தமிழர் குரல் நூலகம்

நூல்கள், சஞ்சிகைகள், இதழ்கள் வெளியிடும் அன்பாகள் அவற்றை எமக்கு அனுப்பி வைக்கலாம். அவற்றின் விபரம் உலகத் தமிழர் குரல் சஞ்சிகையில் இடம் பெற ஆவன செய்வோம்.

**ஆசிரியர் :- உ.த.குரல்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பர்மாவில் தமிழர்

**பா. நா. இரவி பாண்டியன் தமிழ்நாடு**

1958 இல் பர்மாவில் பெரும் புரட்சி ஒன்று எற்பட்டது. அதாவது கையின் மொழி பேசக் கூடியவர்கள், அந்த நாட்டு வரலாற்றில் முகாமை இடம் பெறுபவர்கள் ஆண்கள்., பெண்கள், குழந்தைகள் முதல் கருவிகள் ஏந்திப் பர்மியப் படையை எதிர்த்துப் போராடியப் பர்மிய நாட்டின் நான்கின் மூன்று பங்கைக் கைப்பற்றி விட்டார்கள். மீதம் இருந்ததோ இரங்கூன் நகரம் ஒன்றுதான். அப்பொழுது பர்மிய அரசு இந்திய அரசின் உதவியை நாடியது. நேருவும் தயங்காமல் இந்தியப் படையை அனுப்பி வைத்தார். இந்தியப் படை இரங்கூனில் இறங்கியதைக் கேள்விப்பட்டவுடன், முன்னோக்கி வந்து கொண்டிருந்த கையின் இனத்து வீரர்கள் பின் வாங்கி ஓடிச் சென்றார்கள். இவ்வாறு அந்தப் பெரும் புரட்சியை முறியடித்த பெருமை இந்திய நாட்டுக்கே சேரும்.

1954 இல் இன்னொரு அரசியல் நிகழ்ச்சி நடந்தது. பர்மிய அமைச்சரவையில் உள்ள ஒருவன் அந்த நாட்டுத் தலைவராயிருந்த போஜேவ் அவுன்சான் முதல் மற்ற 13 அமைச்சர்களையும் சுட்டுக் கொன்றான். பிறகு அவனும் தூக்கிலிடப்பட்டான். அதற்குப் பின் அந் நாட்டின் ஆளும் பொறுப்பை ஊனு என்பவர் ஏற்றுக் கொண்டார். இவரின் ஆட்சிக் காலத்தில் நம் இந்தியர்களுக்கு நல்ல சலுகைகள் அளித்தார். இவர் இந்தியர்களின் மேல் அன்பும் மதிப்பும் கொண்டவர். சில காலம் கழித்து இவர் சில வெளி நாடுகளுக்குச் சென்று பர்மிய நாட்டின் பொருளியலை மேம்படுத்தத் திட்டமிட்டார். அத் திட்டப்படி வெளி நாடுகளுக்குச் சென்றார். அப்பொழுது பர்மிய நாட்டின் படைத்துறைத் தளபதிகளில் ஒருவரான போஜேவ் நேவின் என்பவரின் மேற் பார்வையில் நாடு இருக்க வேண்டும் என்று கட்டளை பிறப்பித்துச் சென்றார்.

போஜேவ் நேவின் தமது படைத்துறை ஆட்சியை 1960 இல் அமைத்தார் அன்றோ! சூட்டோடு சூடாகப் பல திட்டங்கள் தீட்டினார். அந்த நேரத்தில் (1962) இந்தியர்களும் சீனர்களும் பர்மியப் பொருளியல் மேம்பாட்டில் முகாமையாக இருப்பதைக் கண்டு பெரிதும் பொறாமை கொண்டார். உடனே வெளி நாட்டவர்களின் தொழிற்சாலைகள் பல்லாயிரக் கணக்கானவற்றை குறுக்க (ஏக்கர்) நிலங்கள், கோடிக் கணக்கான சொத்துக்கள் அனைத்தையும் தேசிய உடமை ஆக்கினார்.

இந்த ஏற்பாட்டினால் பெரிதும் இழப்புற்றவர்கள் நம் இந்தியர்கள் தாம். குறிப்பாகத் தமிழர்கள் தாம். தமிழர்கள் பெரிதும் துயரமும் தொல்லையும் அடைந்தனர். இனி அந் நாட்டில் வாழ்வதற்கு வழியில்லை என்று கண்டனர். இதன் விளைவாக 1964 முதல் 1974 வரை ஏதிலிகளாகத் தங்கள் தாயகமான தமிழகத்திற்கு திரும்பினர்.

படிப்படியாக பர்மாவில் தமிழர்களின் உரிமை பறிக்கப்பட்டது. பர்மாவில் வெளியான தமிழ் நாளிதழ்களான தொண்டன், இரசிக இரஞ்சினி ஆகிய பத்திரிகைகள் தடை செய்யப் பட்டன. வேறு நாட்டு மொழிகளில் செய்தித் தாள்கள் வெளிவரக் கூடாது என்று சட்டம் இயற்றப்பட்டது. பர்மாவில் திரை அரங்குகளில் தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிப் படங்கள் திரையிடப்பட்டு வந்தன. அவற்றில் பெரும்பாலும் தமிழ்ப் படங்களே அதிகம் திரையிடப்பட்டு வந்தன. உடனே பர்மிய அரசு ஒரு சட்டம் இட்டு இந்தியாவிலிருந்து ஒரு மொழிப் படந்தான் இனி வாங்கப்படும். அது தமிழாகவோ, இந்தியாகவோ, தெலுங்காகவோ எதுவாகவோ இருக்கலாம் என்று இந்திய அரசுக்குத் தெரிவித்தது. அந்தச் சட்டத்திற்குப் பின் இந்தி வெறிபிடித்த இந்திய அரசு, தமிழ்ப் படத்தையும், தெலுங்குப் படத்தையும் அனுப்புவதை நிறுத்தி விட்டு, இந்திப் படங்களை மட்டுமே அனுப்ப முடிவு செய்தது. இந்தத் தீர்மானத்துக்கப் பின், பர்மாவில் திரை அரங்குகளில் தமிழ்ப் படம் காட்டப்பட மாட்டாது என்பதை அறிந்த தமிழர்கள் மிகவும் வருத்தம் கொண்டார்கள்.

பர்மாவில் 1960 ஆம் ஆண்டுக் கணக்குப்படி இந்தியர்கள் மொத்தம் 21 இலட்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும். இதில் ஏறத்தாழ 10 லட்சம் பேர் தமிழகம் வந்து விட்டார்கள். இப் பொழுது ஏறத்தாழ ஏழரை லட்சம் தமிழர்களே இருக்கிறார்கள்.

இதே போல், பர்மாவில் தனிமொழிக் கல்விக் கூடம் இருக்கக் கூடாது என்றும் பர்மிய அரசு சட்டம் போட்டது. இதனால் தமிழர்களின் கல்விக்கூடங்கள் மூடப்பட்டன. .இதனால் தமிழர்களின் கல்விநிலை மிகவும் கீழானது. தற்பொழுது பர்மாவில் உள்ள சில தமிழ்க் கோவில்களிலும் சிலரின் வீடுகளிலும் தான் தமிழ்க் கல்வி கற்பிக்கப்படுகின்றது. எனவே, தமிழர்களின் கல்விநிலை நாளுக்கு நாள் தாழ்ந்து போனது.

1960 முதல் இன்றுவரை பர்மாவில் படைத்துறை ஆட்சியே நடைபெற்று வருகிறது. அதனால் பர்மிய அரசியல் நிலைமைகளை வெளிநாடுகளுக்கு எட்டாத அளவுக்கு வைத்திருக்கிறார்கள். பர்மாவில் எழுத்துரிமை, பேச்சுரிமை எல்லாம் பறிக்கப்பட்டுப் பல ஆண்டுகள் ஆகி விட்டன. உலகிலேயே வெளிநாட்டுத் தொடர்பு குறைவான நாடு பர்மாதான். தற்பொழுது ஆளும் அனைத்து அதிகார ஆட்சிக்கு எதிராகச் சில பொழுது கிளர்ச்சித் திட்டங்கள் தீட்டப்பெற்றன. ஆனால் அவை உடனுக்குடன் ஈடுபடுபவர்களுக்குத் தூக்குத் தண்டனை அழிக்கப்பட்டது.

மாணவர்களுக்கும், படை வீரர்களுக்கும் பெரும் போராட்டம் நடந்தது. போராட்டம் மூன்று நாட்கள் நடந்தது. அக்காலப் பகுதியில் நூற்றுக் கணக்கான மாணவர்கள் படைத் துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர், மாணவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டனர். 1962க்குப் பின் 1974இல் நடந்த பெரும் புரட்சி இது. ஆனால் இச் செய்தி துளியும் வெளி உலகத்துக்குத் தெரியாதவாறு பர்மிய அரசு மூடி மறைத்த விட்டது.

அங்குள்ள பெரும்பான்மைத் தமிழர்கள் இலங்கையில் தனிநாடு கிடைப்பதை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளனர்.

பர்மாவிலும் பொதுநிலை அமைப்புக்கள் சில .இருக்கின்றன. ஆனால் தமிழ்மொழிக் காகவும், தமிழர்களுக்காகவும் பாடுபடும் மன்றங்கள் மிகவும் குறைவானவையே. பர்மாவின் தமிழுக்காகவும் தமிழர்களுக்காகவும் அன்று முதல் இன்று வரை பாடுபடுபவர் பர்மா தன்மானக் கட்சித் தலைவரும், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பர்மாக் கிளையின் தலைவருமான ஐயா பி. ஏசு. மணி அவர்களும், மோள் மேன் நகர் மாரிமுத்து என்பவரும் தான். அவர்கள் தான் பர்மாவில் தமிழர்களுக்காக உண்மையில் தங்கள் வாழ்க்கையையே ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள். பர்மாவில் தமிழர் பலர் தமிழ்ப் பற்றுடனும், தமிழ்ப் பண்புடனும் வாழ்வது இவர்களைப் போன்ற சிலரின் முயற்சிகளினால் தான் என்று கூறலாம்.

தமிழர்கள் பர்மாவில் அதிகமாக வாழும் பகுதிகள் கம்பை, தென் காஞ்சி (தென் காந்தன்), தாக்கேட்டா முதலியவையாகும். தமிழர்கள் பர்மிய நாட்டின் உண்மையான உயர்விற்குப் பாடுபட்டுள்ளார்கள். அவர்களுள் பெரும்பாலானோர் தாயகம் திரும்பியதால் அங்குள்ள வேளாண்மை குறைந்துள்ளது. ஆனால் தமிழர்களுக்குப் பர்மியர்கள் கொடுத்த பட்டம் கல்லா என்பது. கல்லா என்றால் நாடு விட்டு நாடு வந்தவர்கள் என்று இழிவாகக் குறிக்கப்படும் ஒரு சொல். இச் சொல் தமிழர்களுக்குச் சினத்தை மூட்டுவதாகும். உண்மையில் இன்றும் தமிழர்கள் அங்கு இரத்த வியர்வை சிந்தி உண்மையாக உழைக்கிறார்கள். பர்மாவில் கூலி தூக்குவது பெரும்பாலும் தமிழர்கள்தான்! கடுமையான வேலைகளில் ஈடுபடுபவர்கள் எல்லோரும் தமிழர்களே!


## உலகத் தமிழர் குரல்

தமிழ் மொழி பண்பாடு மற்றும் வரலாற்று விடயங்கள் தொடர்பான கட்டுரைகள் ஆக்கங்கள் அனுப்ப விரும்புவோர் பின் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். - ஆசிரியர் -

| | |
|---|---|
| பரமநாதன் ஹவுஸ் | Paramanathan House, |
| மானிப்பாய் வீதி, | Manipay Road, |
| தாவடி, | Thavady, |
| கொக்குவில், | Kokkuvil, |
| இலங்கை. | Sri Lanka. |

T. P./ Fax; No. 0094 - 21 - 222 3294.
IMTC HEAD QUARTERS
S. Cheliah - President,
936, Mcowan Road,
Scarborough,
M1P3H6,
Canada.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HOROSCOPE
## ஜாதகக் குறிப்புகள்

**உள்நாடு / வெளிநாடுகளில் பிறந்த குழந்தைகள் மற்றும் அன்பர்களின் ஜாதகக் குறிப்புகள் எழுதி அஞ்சலில் அனுப்பி வைப்போம்.**
**விபரம் - பிறந்த திகதி / நேரம் ஆண் / பெண் பகல் / இரவு / பிறந்த நகரம் பெற்றோர் விபரம் குறிப்பிடவேண்டும்.**

**முக்கியமான பலன்கள்:**

**ஆயுள், கல்வி, தொழில், விவாகம், நோய், அதிஷ்டங்கள், குடும்பம் போன்றவை 40ஆண்டுகள் பலன்கள் ஆராய்ந்து எழுதியனுப்புவோம்.**

ஜாதகக் குறிப்புகள் வைத்திருப்போர் அவற்றை அனுப்பி வைக்கலாம்.

கட்டணம் 15 ஸ்ரேலிங்பவுண் (லண்டன்)
ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா } 30 யு. எஸ் டாலர்கள் அல்லது சமமான தொகைஅனுப்பி ஒழுங்கு செய்யவேண்டும்.

**தொடர்புகள்:** கனடா
T.P. 514, 3459117
K. கந்தசாமி
T.P. 514-7294797
K. ரவி 0094-21-2223294
இலங்கை T.P. / Fax: 0094-21-2223273
H.P.- 0094-077-6673066

**தொழில் ஆரம்பித்தல் - குடிபுகல்**
**விவாகம் - மற்றும் தேவையான மங்கள காரியங்களுக்கும் தொடர்பு கொள்ளலாம்.**

சோதிடஞானி
சண் - மாஸ்ரர்
**ஆ. சண்முகலிங்கம்**

SOTHIDA PROPHET: *A. SHANMUGALINGAM*
*C/O R. SUNTHARALINGAM*
*C.C.T.M. SCHOOL LANE,*
*KOKKUVIL WEST,*
*SRI LANKA.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பியர் ஆட்சியின் கீழ்த் தமிழ் தமிழர் தமிழகம்

**(தமிழ்நாடு, புதுவை, இலங்கை)**

டாக்டர் திரு. க. ப. அறவாணன்

ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் 1801ல் சென்னை மாகாணம் எனும் ஆட்சிப் பகுதி முதன்முதல் உருவாக்கப்பட்டது. இதன் கீழ் முழுத் தமிழ்நாடும் ஆந்திரத் தெலுங்குப் பகுதிகள் சிலவும் கேரள, மலையாளப் பகுதிகள் சிலவும் ஒரே ஆட்சியில் கீழ்க் கொண்டு வரப்பட்டன. தமிழ் நாட்டைச் சிதைத்துச் சிறுசிறு பகுதிகளாக ஆண்டு கொண்டிருந்த குறுநில மன்னர்கள், பாளையக்காரர்கள் நாயக்க மன்னர்கள், சேதுபதிகள், மகாராட்டிர அரசர்கள் நவாபுகழ்கள் இராஜாக்கள் ஜமீன்கள், என வேறு வேறு மொழி, இன அரசு மக்களால் ஆளப்பட்டு வந்த நிலமை முடிவுக்கு வந்து ஆங்கிலேயர் எனும் ஐரோப்பியர் ஆட்சியின் கீழ்த் தமிழர் உள்ளாக்கப்பட்டனர். 1801 முதல் 1947 வரை நடந்த ஆங்கிலேயர் ஆட்சியில் 1801 முதல் 1857 வரை உள்ள 57 ஆண்டுகளை ஒரு பகுதியாகவும், 1858 முதல் 1947 வரை உள்ள 90 ஆண்டுகளை இன்னொரு பகுதியாகவும் கொள்ளலாம். இவ் ஆட்சிக் காலத்தில் உள்ளூர்த் தலை நகரமாக இருந்தது. சென்னை. ஆங்கிலேய, இந்தியப் பேரரசின் முதல் தலைநகரமாக இருந்தது கல்கத்தா. பின்னர் அது டில்லிக்கு மாற்றப்பட்டது. ஆங்கிலேயர் காலத்தில் முற்றுமாக முன்னைய அரசாட்சி முறை மாற்றப்பட்டது. நீதி, நிர்வாகம், வரிவிதிப்பு முறை, கல்வி, சமுதாய உறவுகள் முதலாய அனைத்தும் ஆங்கிலேய மயமாயின. இதில் தீமைகள் இருந்தன, நன்மைகளும் இருந்தன.

நன்மைகளுள் மிக முதன்மையான ஒன்று நூற்றுக்கணக்காகச் சிதறிக் கிடந்த தமிழ்ப் பகுதிகள் சென்னை மாகாணம் எனும் ஒரு குடைக்கீழ் வந்தமையாகும். பிராமணர்களும், ஆளும் வர்க்கத்தினரும் மட்டுமே பெற்று வந்த கல்வி அனைவருக்கும் பொதுமையாக்கப்பட்டது. அனைவரும் படிக்கும் வண்ணம் பொதுப் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் முதன் முதல் அரசினாலேயே நடத்தப்பட்டன. பெண்டிங்க் (Bentinck), மெக்காலே (Mecaulay), மன்றோ (Munro), ரிப்பன் (Ripon), வெல்ஸ்லே (Wellesley), முதல் கர்சான் (Curzon), வரை உள்ளோர் ஆண்டபோது இதற்கு முன் கிடைக்காத பல நன்மைகள் கிடைத்தன. 1806ல் வேலூரில் நடந்த சிறு கலவரம் தவிர வேறு கலவரங்கள் எதுவும் பெரிதாக ஆங்கிலேயரை எதிர்த்து நடந்து விடவில்லை. கட்டபொம்மன், மருதுபாண்டியர் பொதுமக்கள் பார்வையில் தூக்கலிடப்பட்டபோது மக்கள் கலவரம் எதுவும் வெடிக்காதது வியப்பாகவே இருக்கிறது. சென்னையிலும், புதுவையிலும், வெள்ளைக்காரர்கள் தமக்கெனத் தனிப்பகுதிகளில் குடியமர்ந்து ஆண்டனர். எஞ்சிய பகுதிகளை கருப்பர்நகர் (Black Town) என்று முத்திரை இட்டனர். தமிழ் நாட்டுத் தமிழரை ஆளும் தலைநகரம் இலண்டனிலும், புதுவைத். தமிழரை ஆளும் தலைநகரம் பாரிசிலும் 6000 கல் தொலைவிற்கு அப்பால் இருந்தன. அதாவது ஆறாயிரம் கல் தொலைவிலிருந்தே தமிழரை எளிதாக ஆள முடியும் என்பது தெரிகிறது.

ஆங்கிலேயர்களால் சென்னையில் புனித ஜார்ஜ் கோட்டையும் போர்த்துக்கீசர்களாலும், டச்சுக்காரர்களாலும் சென்னை, சாந்தோம் கோட்ரையும் டேனிஷ்காரர்களால் கடலூர், டேனிஷ் கோட்டையும் பிரெஞ்சுக் காரர்களால் லூயி கோட்டையும் தமிழ் மக்களை ஆளுவதற்காக கட்டப்பட்டன. பரம்பரை கட்டப் பஞ்சாயத்து முறை ஒழிக்கப்பட்டு ஐரோப்பிய நீதிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. சென்னை மாநகராட்சி 1727ல் கொண்டுவரப்பட்டது. நிக்கோலாஸ் மூர்ஸ் (Nicholo Murse) ஆங்கிலேய ஆளுநராகச் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் பதவி வகித்த போது பிரஞ்சுக்காரர்களால் 1746 செப்டெம்பர் 10 அன்று கைப்பற்றப்பட்டது. மிகப் பிற்காலத்தே பிரெஞ்சுக்காரரிடமிருந்து புனித ஜார்ஜ் கோட்டை ஆங்கிலேயர் வசம் வந்தது. 1805-06இல் வில்லியம் கவண்டிஸ் (William Caventish) காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ வீரர்களுக்குச் சில கட்டுத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

தலைக்கு ஐரோப்பிய மாதிரியில் புதிய தொப்பி அணியத் வற்புறுத்துதல், காதில் கடுக்கன் அணியத் தடை, நாமம், திருநீறு அணியத் தடை, தாடி வளர்க்கத் தடை, நாள் தோறும் கன்னத்தை மழிக்க வற்புறுத்துதல், ஒழுங்கு படுத்தப்பட்ட வீரமீசை அகியவற்றை வேலூரில் இருந்த இந்துமதப் பட்டாளத்தார். எதிர்த்தனர். தம்மைக் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றுவதற்கான ஏற்பாடு என்று கருதினர். ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்ட திப்பு சுல்தானின் குடும்பத்தினர் வேலூர் சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் அங்கே இருந்த வீரர்களைத் தூண்டி விட்டனர் என்றும் ஒரு கருத்து உள்ளது. வேலூர்க் கலவரத்தில் 100 வெள்ளைக்காரர்கள் கொல்லப்பட்டனர். ஆர்க்காட்டிலிருந்த கில்லேஸ்பி (Gillespie) எனும் தளபதி பெரும்படையுடன் வந்து கலவரத்தை ஒடுக்கினான். கலவரத்தில் ஈடுபட்ட 300 பேருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. அங்கு சிறைவைக்கப்பட்டிருந்த திப்புவின் குடும்பம் கல்கத்தா சிறைக்கு மாற்றப்பட்டது. புதிதாக அறிமுகப் படுத்தப்பட்ட விதிகள் விலக்கிக் கொள்ளப்பட்டன. தமிழ்நாட்டில் வெள்ளைக்காரர் களை எதிர்த்து 1806ல் குறிப்பிடத்தக்க கலவரமாகும் இது. ஆனால் இதன் அடிப்படை ஐரோப்பியர், தமிழர் (இந்தியர் என்று இல்லாமல்) இந்துக்கள் கிறிஸ்தவ வெள்ளைக்காரர்களை எதிர்த்து நடத்திய கலவரமாக அமைந்து விட்டது. சர்தாமஸ்த் மன்றோ (1780) நிலவரி விதிப்பு முறை சீர்மை செய்யப்பட்டது. (இவருடைய சிலை அகற்றப்படாமல் அவர் ஆற்றிய பணி கருதி இன்றும் சென்னை நகரில் பேணப்படுகிறது). உடன்கட்டை ஏறும் வளக்கம் சட்டப்படி தடுக்கப்பட்டது. மனிதர்களை விற்பதும், வாங்குவதுமான அடிமை வாணிபம் தடை செய்யப்பட்டது. ஐரோப்பிய மாதிரி கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. இரயில்வே, தந்தி, அஞ்சல்முறை ஆகியன முதன்முதலாக அறிமுகமாயின. சென்னை பல்கலைக்கழகமும் தோற்றுவிக்கப்பட்டது.

1858ல் ஆங்கிலேயர் கிழக்கிந்தியக் கம்பனி ஆளுகையிலிருந்த சென்னை மாகாணம் உள்ளிட்ட இந்தியப் பகுதிகள் பிரிட்டிஷ் அரசின் பகுதிகளாக மேற்கொள்ளப்பட்டன. புதிய புதிய தனி ஆளுநர்கள் சென்னை மாகாணத்தில் தலைமை அலுவலராக அமர்த்தப்பட்டனர். 1876 - 1878 ஆகிய மூன்றாண்டுகளில் வரலாறு காணாத தொடர் பஞ்சம் ஏற்பட்டது. நீலகிரி மலையிலுள்ள உதக மண்டலம் மலை நிலையமாக மாற்றப்பட்டதுடன் செல்வதற்குரிய சாலைகளும் லிட்டன் (Lytton) பிரபுவால் உருவாக்கப்பட்டன. (1877) 1890ல் மிகப் பெரிய பொது நூலகம் சென்னையில் கட்டப்பட்டது. இந்திய சுதந்திரத்துக்குப் போராடிய காங்கிரஸ் கட்சியின் 3ம் மாநாடு 1887 டிசம்பரில் சென்னையில் கூடிற்று. 1909ல் இஸ்லாமியர்களை மனத்துள் கொண்டு சாதி இட ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட்டது. 1916ல் பிராமணர் அல்லாதோருக்கான நீதிக் கட்சி உருவெடுத்தது. சென்னை மாகாணத்தில் முதல் தேர்தல் 1920ல் நடந்தது, ஓட்டு உரிமை பெற்றவர்கள் 1655 பேர் மட்டுமே. தேர்ந்தெடுக்கப்பட்டோர் 65 பிராமண அல்லாதவர். 22 பிராமணர், 5 முஸ்லீம், 14 இந்தியக் கிறிஸ்தவர், 5 நியமன உறுப்பினர்கள், (ஒடுக்கப்பட்ட பிரிவினரிடமிருந்து) கடலூரைச் சார்ந்த சுப்பரயாலு ரெட்டியார் டிசம்பர் 1920ல் முதல் தலைமை அமைச்சராக தேர்ந்தெடுக்கப் பட்டார்.

பல நூற்றாண்டுகளாகத் தமிழர் எந்த ஆட்சியினராலும் அடையாத நன்மைகளை ஐரோப்பியர் வழி இக்காலத்தில் பெற்றனர். ஓயாது நடந்து கொண்டிருந்த உளநாட்டுப் போர்கள் முடிவிற்கு வந்தன. சாதி கடந்த கல்வி கிடைத்தது. சாதி வழி அமைக்கப்பட்டிருந்த சமூகக் கட்டமைப்பு உடைந்தது. குறிப்பாக குறிப்பிட்ட சாதிப் பெண்கள் மேலாடை அணியக்கூடாது. என்றிருந்த ஒடுக்குமுறை நீக்கப்பட்டது. தீண்டாமை, சட்டடவிரோதமாயிற்று. பேருந்து, இரயில், திரை அரங்கம் முதலானவற்றின் வருகையால் புதிய சமநீதி ஓங்கலாயிற்று. ஆனால் மொழி, பண்பாட்டுத் தளங்களில் தமிழர் பேரளவு ஐரோப்பிய மொழி கற்கும் பண்பாட்டிற்கும் நிந்தர அடிமையாயினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு புறம் பாடல்


(டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம்)

மரமது மரத்தி லேறி மரமதைத் தோளில் வைத்து
மரமது மரத்தைக் கண்டு மரத்தினால் மரத்தைக் குத்தி
மரமது வழியே மீண்டு வன்மனைக் கேகும் போது
மரமதைக் கண்ட மாதர் மரமொடு மரமெடுத்தார்.

என்பது ஒரு புறம் பாடல், ஒரு மன்னன் வேட்டைக்குச் சென்று வேட்டையாடி மீண்ட செய்தியைப் புலவர் இவ்வாறு கூறுகிறார்.

அரசமரம் மா மரத்தின்மீது ஏறி அரசன் குதிரை மேலேறி அரசமரம் தோமரத்தைத் தோளில் வைத்து, அரசன் தோமராயுதத்தைத் தோளில் தாங்கி வேட்டைக்குச் சென்று அரசமரம் வேங்கை மரத்தைக் கண்டு அரசன் வேங்கையைக் கண்டு, மரத்தினால் மரத்தைக் குத்தி தோமராயுதத்தால் வேங்கையைக் குத்தி வேட்டை முடிந்து அரசமரம் அரண்மனைக்குத் திரும்பிய பொழுது, அரசன் அரண்மனையை அடைந்த பொழுது மரமதைக் கண்ட மாதர் அரசனைக் கண்ட பணிப்பெண்கள் மரமொடு மரமெடுத்தார். ஆலமரத்தையும், அத்திமரத்தையும், சேர்த்து எடுத்தார்கள் (ஆல் + அத்தி - ஆலத்தி எடுத்தார்கள்) என்பது இதன் பொருள். இது கவிதை இவன் கவிஞன்.

## மொறிசியஸ் நாட்டில் புகழ் பூத்த தமிழர்கள்



அமரர் சேர் திரு. வீரசாமி ரிங்காடு அவர்கள் மொறிசியஸ் தீவில் பிரபலமான அரசியல் தலைவராக இருந்தவர். மொறிசியஸ் பிரதமர் அமரர் சேர் சிவசாகர் ராம் கூலம் பிரதமராக இருந்த போது நிதி அமைச்சராகப் பதவி வகித்துப் புகழ் பெற்றவர் 1980க்குப் பின் நாட்டின் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டு பணி புரிந்தவர். 1980ல் மொறிசியசில் நடைபெற்ற 5வது உ.த.ப. இன் உலக மாநாட்டை திறந்து வைத்தவர். இவர் மொறிசியஸில் மரியாதைக்குரிய அரசியல் வாதியாகத் திகழ்ந்து வந்தவர். நேர்மையான பண்புடையவர். இவர் மொறிசியஸ் தமிழர் சமுதாயத்தின் முன்னேற்றத்துக்காகச் செயலாற்றி புகழ் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காசுத் தாள்களில் தமிழ்

ரூபாத் தாள்கள் இத் தீவில் புழக்கத்துக்கு வந்தபோது தமிழர்கள் இங்கு தமிழ்மொழியை நன்கு பேசினார்கள். தமிழர்கள் இத் தேசத்தில் எங்கும் வாழ்கிறார்கள் என்று அரசாங்கம் பார்த்துத் தமிழ் மொழியிலும் எழுத வைத்தது. இது ஐந்து ரூபாய், இது பத்து ரூபாய் என்று இந்தியிலும் எழுதப்பட்டது சரியே. ஆனால் இந்தி அவ்வளவு உபயோகத்தில் இல்லையாதலால் தாள்களில் எழுத வேண்டிய முறையில் இந்தியில் எழுதவில்லை. ஒரு காலத்தில் தமிழர்கள் தங்கள் பாஷை கல்கத்தியர்களை விட அறிந்தார்கள். அதற்காகவே அந்தக் காலத்தில் அவர்களுடைய பாஷை தாள்களில் சரியாக எழுதப்பட்டது.

(மொறிசியஸ் தீவில் தமிழர்களின் சிறு சரித்திரம்.)

## முச்சியா கத்தா முன்ஸ்மி

தமிழர்களிடம் சாதிவெறி தலைவிரித் தாடியது சாதியில் தாழ்ந்தோர் ஒதுக்கப்பட்டனர். கிறிஸ்தவப் பாதிரிமார் அன்புக்கரம் நீட்டி இப்படி ஒதுக்கப்பட்டோரை அரவணைத்து ஆதரித்தனர். தமிழர் ஆயிரக் கணக்கில் கிறிஸ்தவ மதம் புகுந்தனர். புகவே, தனித் தமிழ்ப் பெயர்கள் திரித்து வழங்கப்படலாயின. எடுத்துக் காட்டாக முத்தையா - முச்சிய, கொல்லிமலையன் - கொல்லிமலே, வேலன் - வெல, காத்தன் - கத்தா, சின்னையன் - சீன்யென், முனிசாமி - முன்ஸ்மி இப்படியாக பெயர்களில் மாற்றம் ஏற்பட்டது. (மொறிசியஸ்)

## கட்டடக் கலை

இத்தீவிலுள்ள பழங்காலக் கல் கட்டடங்களைக் கட்டியவர் தமிழர்களே! தலை நகர் போட்லூயிசிலுள்ள ஜும்மா மசூதி, தொல் பொருள் காட்சிச்சாலை, மத்திய செயலகம், கிறீஸ்தவக் கோயில்கள், அனைத்தும் தமிழர்களால் கற்களால் கட்டப்பட்டவை. இவை தமிழர்களின் கட்டடக் கலைக்கு சான்றாக விளங்கும்...

*மலர் ரதம் - (மொரீசியசு)*

# இன்றைய தமிழர்

*டாக்டர் எம். இராசநாதன்* நியூசிலாந்து

தமிழரின் பொற்காலமான இராசராஜன் .ராசேந்திரன் காலத்தில் தமிழர்களின் செல்வாக்கும், ஆதிக்கமும் கிழக்காசியா முழுவதும் பரவியிருந்தது. ஆனால் இன்று தமிழினத்தின் நிலை என்ன? தமிழர்கள் இன்று மிகவும் சீரழிந்த நிலையை அடைந்து விட்டனர். இதற்குக் காரணம் என்ன? தமிழர்கள் தமது பாரம் பரியத்தையும் சரித்திரத்தையும் பழம் பெருமையையும் மறந்ததுதான் இந்த நிலைக்குக் காரணம்.

இன்றைய தமிழர் பலருக்கு ஆங்கிலம் தெரியும். தமிழ் தெரியாது. (ஆங்கிலச் சொற்கள் பலவற்றைச் சேர்த்துத் தமிழைச் சிதைத்து தமிழைக் கொலை செய்கிறார்கள்). ஆங்கிலப் பண்பு தெரியும். தமிழ்ப் பண்பு தெரியாது. இராமாயணம் தெரியும். சிலப்பதிகாரம் தெரியாது. மகாபாரதம் தெரியும். திருக்குறள் தெரியாது. ஜேக்ஸ்பியர் தெரியும். இளங்கோவைத் தெரியாது . விவேகானந்தரைத் தெரியும். இராமலிங்கரைத் தெரியாது. சத்திய சாயி பாபாவைத் தெரியும் இரமண மகரிசியைத் தெரியாது. ஐன்ஸ்டைனைத் தெரியும். இராமனுஜத்தைத் தெரியாது. சோக்கிரத்தீசைத் தெரியும். இராதாக் கிருஷ்ணனைத் தெரியாது. நியூட்டனைத் தெரியும். சந்திரசேகரராமனைத் தெரியாது. ஜூலியசீசரைத் தெரியும் இராசேந்திர சோழனைத் தெரியாது.

இப்படியாக அடுக்கடுக்காகக் கூறிக் கொண்டே போகலாம்.

தமது மொழியைப் பேசக் கூச்சப்படும் இனம் தமிழினம் ஒன்றுதான். தமது இனத்தின் சாதனைகளை அறியாத இனம் தமிழினம் ஒன்றுதான். தமது இனத்தின் சாதனைகளைப் போற்றாத இனம் தமிழினம் தான்.

இந்த அவலநிலை நீடிக்கும் வரை தமிழர்கள் தமது பெருமையை உணர்ந்து செயலாற்றும்வரை தமிழினத்துக்கு விமோசனம் கிடைக்காது என்பது வெள்ளிடைமலை.

(ஏழாவது மாநாட்டு மலரில்)

## மொறிசியஸ் தீவில் வாழும் மக்கள்

இந்த நாட்டில் மொத்தச் சனத் தொகை ஒன்பது லட்சம். தமிழர் தொகை ஒன்றரை லட்சம் வரை. இந்தி பேசுவோர் மூன்றேகால் லட்சம். நாற்பதாயிரம் சீன மக்கள். ஒன்றரை லட்சம் முஸ்லீம்கள். ஏனையோர் கலப்பின மக்கள்.

(1980 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பு)

தகவல்: திரு. இரா. கனகரத்தினம் யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org